207

வசந்தம்

சர்வசித்து கார்த்திகை

8 அணா

ANNOUNCING

THE

NEW INDIA ASSURANCE CO.

LIMITED.

(H. O BOMBAY)

Have much pleasure in announcing

HAVING COMPLETED
A NEW BUSINESS (LIFE) OF

Rs. 12,39,71,956 in 1946

Against a New Business of

Rs. 8,38,31,700 in 1945

Thus Registering an increase of

NEARLY 50 PER CENT

During this Year The Company has plans for an intensive organisation in the City & Districts undeveloped.

APPLICATIONS FROM PERSONS OF RECOGNISED ORGANISING ABILITY WILL BE CONSIDERED.

Apply to:

MADRAS BRANCH,
4 & 5, First Line Beach.

K. GANAPATHI,
Branch Manager.

வெவ்வேறு இடங்களில்
வெவ்வேறு நேரம், ஆனல்...

உங்கள் வெஸ்ட் எண்ட். கடிகாரத்தில். மேல் படம் ப்ரஸஸெல்ஸ் பாலஸ் டி ஜஸ்டிஸ். இடதுபுறமிருப்பது பம்பாய் முனிஸிபல் கட்டிடமும் விக்டோரியா ரயில்வே ஸ்டேஷனும். இடையேயுள்ள ஆயிரக்கணக்கான மைலகளினல் பம்பாயில் கடிகாரம் ப்ரஸ்ஸெல்ஸை விட ஐந்தரை மணி அதிகமாக காட்டுகிறது. வெவ்வேறிடங்களில் நேரம மாறுபடினும் 'வெஸ்ட் எண்ட்' கடியாரத்தின் குணம மட்டும் வேறுபடாதது. சிறந்த வேலைப்பாடினல் ஒவ்வொரு மாடனும சரியான மணி காட்டும்; தவிர அழகாகவும் திடமாகவுமிருக்கும். சப்ளை குறைவாயிருப்பினும் எங்களாலியன்ற வரை ஆடர்களை பூர்த்தி செய்ய முயலுகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.,

பம்பாய் அண்டு கல்கத்தா



க்ரிவடல்
ஸெகண்டஸ் "C"
நிக்கல் சில்வர் ரூ 80

West End
WATCH CO.
BOMBAY & CALCUTTA

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS AN ASSET TO EVERY HOME

EVERYTHING MADE TO ORDERS

POPULAR FABRICS THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

OUTSTANDING

Stately, modern buildings that stand out in any surroundings call for imagination in design, quality in materials and dependabilty in construction.

The Modern Housing Construction has started erecting many such buildings in Madras and elsewhere, and is willing to place its resources and experience at your service.

An enquiry involves you in no obligation whatever. Write to us today, giving necessary details.

THE MODERN HOUSING CONSTRUCTION
AND PROPERTIES LIMITED

13, West cott Road, Royapettah,

MADRAS.

Branches: Madura, Trichinopoly, Trivandrum, Hospet, Bezwada, Bombay and Delhi.

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள், கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள் முதலிய சகலவிதத் துணிகளிலும் பளபளப்பும் கண் கவர் வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.

இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்தமானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயார் செய்யவோ மைசூர் பேர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

மைசூர் சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு. MSR-9-TA

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ.	5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ.	2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி	...	ரூ.	94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்) — நூர்முகமத M. சினய
ஹரிதாஸ் மாதவதாஸ — பாபுஜி தாதாபாய் லாம்
ஆர்டிஷ B. துபாஷ — தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
டின்ஷா D. ரோமர் — ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸர்ஸ, பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

தீபாவளி
வெளியீடு

பக்ஷிராஜாவின்

கன்னிகா

டைரக்ஷன்-ஸ்ரீராமுலு நாயுடு

ஸரோஜினி ★ வரதன், B. Sc.
கிருஷ்ணன் — மதுரம் — ஸந்தானலக்ஷ்மி
ஹரிணி — ஹேமமாலினி — பாலசுப்ரமணியம்
காளி என். ரத்னம் — லலிதா — பத்மினி
நடித்தது

NARAYANAN Co Release

இந்தியாவின் மிகப் பிரபல ஔஷதம்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்



வலியை விரைவில் போக்கடிப்பது!

நரம்பு நோய், கீல் வாயு, வாயுப் பிடிப்புகள், பல் வலி, சுளுக்கு அல்லது தலைவலி நீங்க மிகச் சிறந்ததான ஔஷதத்தை வாங்குங்கள். ஆனால் அதிகப்படி செலவில்லை.

தயாரிப்பவர்கள் :-

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 67 : : மதராஸ். DJK 19

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,

நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென் இந்தியாவில் எல்லா முக்கிய மான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	... ரூ. 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.

IBN/10 செக்ரெடரி.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங் களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு : : கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

வசந்தம்

மலர் 6	சர்வஜித் ௵ கார்த்திகை ௴	இதழ் 8

பொருளடக்கம்

இந்த இதழில்	...	1
ஒளிஅலைகளும் ஓவியக்கலையும்	ஆர். கே. விசுவநாதன்	2
அற்ப விஷயம்	டி. என்.	5
அழைப்பு!	டி. வி. சுவாமிநாதன்	8
தண்டனை	ப. தனுஷ்கோடி	9
பழைமையில் வந்த பண்பாடு	எம். எஸ். கமலா	16
மனித இயல்பு	"சுகி"	19
வாழ்க்கைச் சித்திரங்கள்	'வில்லன்'	26
பொறுமைத் தோணி	'ராஜா'	30
பசுங்கிளி	'தேவிகா'	36
நினைவுச் சின்னம்	'அம்பலவாணன்'	37
கங்கைக் கரையில்...	'துஷ்யந்தன்'	49
மல்லிகை மொக்கு	தா. நாகலிங்கம்	53
புத்தக ஆராய்ச்சி	...	57
கனகாம்பரம்	கோமதி சுவாமிநாதன்	58
கூவிடுவாய்...	'செந்தாமரை,	64
புறவே பற!	கே. சி. எஸ். அருணசலம்	65
இருபத்தாறு ஆண்களும் ஒரு பெண்ணும்	கார்க்கி	66
ஸ்ரீகாந்தன்	ஆர். ஷண்முகசுந்தரம்	75
அயலான்	'கலீனு'	82
பேசுவது எப்படி?	கா. மு. ஷெரீப்	84

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP", Coimbatore.


நம் நாட்டுத் தொழிலை
ஆதரியுங்கள்
மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்
R. K. ஷண்முகம் செட்டி
அண்டு பிரதர்ஸ்.
நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை,
முறுக்கு, காரம் சலவை நூல்
தயாரிக்கிறோம்.
எல்லாவிதமான ஜவுளி
ரகங்களும்:
வேஸ்டிகள், லாங்கிலாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்
தயாரிக்கிறோம்.
எங்களுடைய வி 116 நெ. லாங்கிலாத்
மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை
எங்களுடையதே.
வசந்தா மில்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.

வசந்தம்

ஆசிரியர்:

ஆர். திருஞானசம்பந்தம்

இந்த இதழில்...

காதலன் ஒருவன் தன் காதலிக்கு மலர் சூட்டும் ஒரு இன்பக் காட்சி இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கிறது.

'வசந்தம்' பெரிய அளவில், கவர்ச்சிகரமாக, சிறந்த விஷயங்களைத் தாங்கி வெளிவருவதைப் பாராட்டிப் பலர் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 'வசந்தம்' இன்னும் சிறப்பாக, மேலும் பல புதுமைகள் நிறைந்ததாய் பொலிவுடன் வெளிவரத் திட்ட மிட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த இதழில் எட்டையபுரத்தில் சிறப்பாக நிகழ்ந்த பாரதி மண்டபத் திறப்பு விழா பற்றிய விசேஷக் கட்டுரை உரிய படங்களுடன் வெளிவருகிறது. வாசகர்கள் படித்துச் சுவைக்கலாம்!

அகலிகை கல்லாகிவிட்டது பழைய கதை. ஆனால் அதன் பின் இந்திரன், கோதமன், அகல்யா இவர்களின் மனோநிலை, உணர்ச்சி என்ன என்பதைப் பற்றி யாரும் கவலைப் படவில்லை. அந்த விட்ட குறையைத்தான் 'துஷ்யந்தன்' தமது 'கங்கைக் கரையில்' என்ற உணர்ச்சிச் சித்திரத்தின் வாயிலாகப் பூர்த்தி செய்கிறார்.

ப. தனுஷ்கோடியின் 'தண்டனை'யும் 'சுகி'யின் 'மனித இயல்பு'ம் இந்த இதழில் குறிப்பிடத்தக்க சிறு கதைகள்.

இந்த இதழில் இடம் பெற்றிருக்கும் கவிதைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இளம் உள்ளங்களின் உணர்ச்சிப் பெருக்கும், துடிப்பும், வேகமும் அவற்றில் எதிரொலிப்பதைக் காணலாம்.

எல்லாவற்றையும் படித்துச் சுவையுங்கள்.

அலையும் கலையும்: 5

ஒளி அலைகளும் ஓவியக் கலையும்

[ஆர். கே. விசுவநாதன்]

இயற்கை அழகையும் உருவங்களையும் அப்படியே படத்தில் வரைந்து காட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது ஓவியக்கலை. இயற்கையில் காணும் விதம் விதமான தோற்றங்களை ஓவியன் முதலில் அவன் மனதில் நிறுத்திக்கொண்டு பின்னர் காகிதத்தில் வர்ணங்களைக் கொண்டு பார்த்தவண்ணமே உருவாக்குகிறான். இசைவாணன் ஒலிகளைக்கொண்டு அவன் பாவ உணர்ச்சியைப் பிறருக்கு விளக்குவதுபோல, ஓவியனும் வர்ணங்களைக்கொண்டு அவன் பாவ உணர்ச்சியை பிறருக்குக் காட்டுகிறான். கேவலம் சில கருவிகளைக் கொண்டும் வர்ணங்களைக் கொண்டும் அகக்கண்ணில் எழுந்த உணர்ச்சியை பிறருக்கு எடுத்துக் காட்டுவது என்பது மிகவும் சிரமமான காரியம். இதற்கு முதலில் அவனுக்கு கலைஞானம் வேண்டும். இத்துடன் வர்ணங்களைப் பற்றிய விஞ்ஞான அறிவு வேண்டும். முக்கியமாக பதம் பட்டகைகள் வேண்டும்.

மரணத்தருவாயில் இருக்கும் ஒருவரின் படத்தை அவன் வரையவேண்டியிருக்கிறது என்று கொள்ளுவோம். இதற்கு அவரது முகம், உடல் முதலிய உறுப்புகள் களைகுன்றித் தோன்றுமாறு செய்யவேண்டும். இதுமட்டும் போதாது அவரைச் சூழ்ந்துள்ள எல்லாப் பொருள்களும் ஒளி இழந்து தோன்றுமாறு செய்யவேண்டும். சிறந்த ஓவியன் இதை வர்ணங்களைக் கொண்டு மட்டும் செய்து படத்தைபார்த்தவுடன் நம்மைத் துயரம் அடையுமாறு செய்துவிடுகிறான். பொருள்களுக்கு நிறங்கள் எவ்வாறு உண்டாகின்றன, ஒளிக்கும் நிறத்துக்கும் என்ன சம்மந்தம், எந்த முறையில் வர்ணங்களை சேர்க்க வேண்டும் இவைபோன்ற விஷயங்களை அவன் நன்கு அறிந்தால் அன்றி, இதில் வெற்றி பெற முடியாது எனவே ஓவியக்கலைக்குவர்ணங்களைப்பற்றிய விஞ்ஞான அறிவு அவசியம் என்று உணரலாம். இதைப் பற்றிய சில விவரங்களை இக்கட்டுரையில் காண்போம்.

சூரியனது வெண்ணொளியில் பலவேறு நிறங்கள் இருப்பதை முன் கட்டுரையில் பார்த்தோம். பெரும்பாலும் சூரியனது ஒளியைக் கொண்டுதான் நாம் பொருள்களைக் காண்கிறோம். மாலையில் சூரியன் மறைந்ததும் இயற்கை தன் நிற சோபையை இழந்துவிடுவதிலிருந்து நிறங்களுக்கு மூலகாரணம் சூரியனது ஒளி தான் என்று அறியலாம். பொருள்களின் மீது சூரியனது வெண்ணொளி விழுந்த போதிலும் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு நிறமாக தோன்றுகிறது. மரத்தின் இலைகள்மீதும்தான் சூரிய வெளிச்சம் விழுகிறது. அதன் புஷ்பங்களின் மீதும் தான் சூரிய வெளிச்சம் விழுகிறது. இலைகள் பச்சை நிறமாகவும் புஷ்பங்கள் வேறுநிறமாகவும் தோன்றுகின்றன. மேலும் பச்சை நிறத்திலுள்ள ரகங்களையும் புஷ்பங்களின் நிறங்களையும் கணக்கிட முடியுமா என்று கூட நினைக்கிறோம். ஆராய்ந்து பார்க்கும் போது எண்ணற்ற நிறபேதங்கள் உண்டாவதற்கு எல்லாப்பொள்களிலும் உள்ள வர்ணப்பச்சை (Pegment) என்னும் பொருள்தான் காரணம் என்று தெரிய வந்தது இவ்வர்ணபசையின்தன்மை பொருளுக்கு பொருள் வேறுபடுவதைக் கண்டார்கள். இப்பசை சூரியனது வெண்ணொளியில் அனேக நிறங்களையும் உறிஞ்சிவிடுகிறது. எஞ்சி நிற்கும் நிறத்தையோ அல்லது நிறங்களைக்கொண்டோ பொருளின் நிறம் நிர்ணயிக்கப்படும். ஒரு பொருளின் மீது விழும் ஒளி அதன் மேற்பரப்பில் மட்டும் பிரதிபலன் ஆகி திரும்புவதில்லை. அதில் பெரும் பகுதி பொருளுக்குள் செல்லுகிறது. இதனால் தான் அதில் உள்ள நிறங்கள் உறிஞ்சப் படுவது சாத்தியமாகிறது. சிவப்பு நிறமாகத் தோன்றும் புஷ்பத்தில் சிவப்பு தவிர மற்ற நிறங்கள் நீக்கப் படுகின்றன. நீல நிறமாகத் தோன்றும் புஷ்பத்தில் நீலநிறத்தைத்தவிர மற்ற நிறங்கள் நீக்கப்படும். கண்ணாடிகளில் சில சிவப்பாகவும் சில நீலமாகவும் தோன்றுவதும் இதே காரணம் பற்றித்

தான். சிவப்புகண்ணாடி ஒன்றை உடைத்து தூள் தூளாக செய்தால் அதன் சிவப்பு நிறம் மறைந்து விடுவதைப் பார்க்கலாம். உடைந்த தூள்களின் மீது விழும் வெண்ணொளி தூள்களுக்குள் செல்லுவதில்லை. அவற்றின் மேற் பரப்பில் மட்டும்தான் பிரதி பலன் ஆகி திரும்புகிறது. எனவே கண்ணாடியின் வர்ணப் பசைக்கு நிறங்களை உறிஞ்சுவதற்கு சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. ஒரு பொருள் எல்லா நிறங்களையும் உறிஞ்சிவிட்டால் அது முற்றிலும் கருப்பாகத் தோன்றும். எனவே வர்ணப் பசையின் உறிஞ்சுதலினால் ஏற்பட்ட வினைதான் பலவேறு நிறங்கள் என்று அறியலாம்.

முன்னாளில் வர்ணப் பொருள்களை தாவரங்களிலிருந்தும் கனிப் பொருள்களிலிருந்தும் பெற்று வந்தார்கள். தற்காலம் இவற்றை இரசாயனப் பொருள்களைக் கொண்டு செயற்கையாக தயாரித்து வருகின்றார்கள். வர்ணம் நன்றாக ஒட்டுவதற்கு அத்துடன் வேறுசில பொருள்களையும் சேர்த்துக் கொள்ளுவதுண்டு. சேர்க்கப்படும் பொருள்களைப் பொறுத்து படம் வரையும் முறைகளும் வேறு படுகின்றன. சுவற்றின் மீதும், கூரையின் மீதும், தூண்களின் மீதும் படம் வரையும் முறை மிகவும் பழமையானது. நம் நாட்டில் அஜந்தா குகையின் சுவர்களில் உள்ள சித்திரங்களைப் பற்றி அனைவரும் கேள்விப் பட்டிருக்கலாம். மெல்லிய உலோகத் தகடுகள் மரப் பலகைகள் இவற்றின் மீதும் படங்கள் வரைவதுண்டு. பெரும் பாலும் படம் வரைவதற்கு கான்வாஸ் துணியும், காகிதமும் தான் கையாளப் படுகின்றன. இவற்றை உபயோகிக்கும் முறைகளுக்கு எண்ணெய் கலந்த வர்ண முறை (Oil Painting) என்றும், நீர் கலந்த வர்ணமுறை (Water Colour) என்றும் பெயர். வர்ணப் பொருளை நன்றாக பொடி செய்து கொண்டு எண்ணெயில் கலப்பார்கள். பெரும் பாலும் ஆளிவிதை எண்ணெய் (Linseed Oil) இதற்கு பயன் படும். காற்றுப் பட்டவுன் இவ் வெண்ணெய் காற்றிலுள்ள பிராண வாயுவை கிரகித்து இறுகிவிடும். இதற்காகவே தான் இவ்வெண்ணெய் சேர்க்கப்படுகிறது. நீர் கலந்த வர்ண முறையில் வர்ணப் பொருளை சிறிதளவு 'கிளிஸெரீன்' (Glycerine) அல்லது தேனுடன் சேர்த்து நீரில் கரைத்து விடுவார்கள். ஒவ்வொரு முறையிலும் தொழில் நுட்பங்கள் அனேகம் இருக்கின்றன.

இனி ஒளிச் சேர்க்கைக்கும் வர்ணச் சேர்க்கைக்கும் உள்ள ஒரு முக்கிய வித்தியாசத்தைப் பார்ப்போம். வெண்ணொளியில் பல நிற ஒளிகள் இருப்பதை நியூட்டன் காண்பித்ததுடன் அப்பல நிற ஒளிகளை ஒன்று சேர்த்து எவ்வாறு திரும்ப வெண்ணொளியைப் பெறலாம் என்றும் காண்பித்தார். வெண்ணொளியைப் பெறுவதற்கு மூன்று நிற ஒளிகள் இருந்தால் போதுமென்று தெரிய வந்தது. சினிமாக் கொட்டகையில் உள்ள திரையில் சேர்ந்தாற்போல மூன்று விளக்குகளிலிருந்து வெளிச்சம் விழுமாறு செய்வதாக கொள்வோம். இம் மூன்று விளக்குகளின் கண்ணாடிக் குமிழ்களும் முறையே சிவப்பு, பச்சை, நீல நிறங்கள் கொண்டவைகளாக எடுத்துக் கொள்ளுவோம். திரையில் இம் மூன்று நிறங்களும் ஒன்றின் மேல் ஒன்று விழும்போது திரை வெண்மையாகத் தோன்றுவதைப் பார்க்கலாம். இம் மூன்றில் ஒன்று நீங்கலாக மற்ற இரண்டு நிறங்களை சேர்த்தால் வேறு நிறங்கள் கிடைப்பதையும் பார்க்கலாம். சிவப்பு ஒளியையும் பச்சை ஒளியையும் சேர்த்தால் மஞ்சள் ஒளி கிடைக்கும். நீல ஒளியையும் பச்சை ஒளியையும் சேர்த்தால் மயில் நிறம் கிடைக்கும். சிவப்பையும் நீலத்தையும் சேர்த்தால் மாக்னடா (Magneta) என்ற ஒருவித சிவப்பு கிடைக்கும். இவ்வாறாக இம் மூன்று நிற ஒளிகளைக் கொண்டு அனேக நிற வகைகளைப் பெறலாம். மஞ்சள் ஒளியையும் நீல ஒளியையும் சேர்ப்பதற்குப் பதிலாக மஞ்சள் வர்ணப் பொருளையும் நீல வர்ணப் பொருளையும் சேர்த்தால் இரண்டும் சேர்ந்து வெண்மையாக மாறுவதில்லை. பச்சை வர்ணம்தான் கிடைக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம். மஞ்சள் வர்ணப் பொருளின் மீது சூரியனது வெண்ணொளி விழும்போது அதில் உள்ள நிறங்கள் மஞ்சள் நிற ஒளியை மட்டும் அது கிரகிப்பதில்லை. நீலம் ஊதா முதலிய நிற ஒளிகளை அது முற்றிலும் உறிஞ்சி விடுகிறது. சிறிது அளவுக்குத் தான் சிவப்பு, பச்சை நிற ஒளிகளை உறிஞ்சுகிறது. எனவே மஞ்சள் வர்ணப் பொருளிலிருந்து மீண்டுவரும் ஒளியில் மஞ்சள் நிறம்தான் மேல் ஓங்கி நிற்கிறது. இத்துடன் உறிஞ்சப்படாத சிவப்பும் பச்சையும் கலந்து

வருகிறது. நீல வர்ணப் பொருளின்மீது சூரியனது வெண்ணொளி விழும்போது அதில் உள்ள நீல நிற ஒளியை அது ஒன்றும் செய்வதில்லை. மஞ்சள், சிவப்பு முதலிய நிறங்களை அது முற்றிலும் உறிஞ்சி விடுகிறது. சிறிது அளவுக்குத்தான் அது பச்சையை விழுங்குகிறது. எனவே நீல வர்ணப் பொருளிலிருந்து மீண்டுவரும் ஒளியில் நீலம் மேலோங்கி இருந்த போதிலும் சிறிது பச்சையும் கலந்து வருகிறது. நீலவர்ணப் பொருளையும் மஞ்சள் வர்ணப் பொருளையும் சேர்க்கும்போது மஞ்சள் வர்ணப் பொருள் நீல நிற ஒளியை விழுங்கிவிடுகிறது. இதைப்போல நீல வர்ணப் பொருள் மஞ்சள் சிவப்பு நிற ஒளிகளை விழுங்கி விடுகிறது. இரண்டு பொருள்களாலும் விழுங்கப் படாமல் எஞ்சி நிற்கும் நிறம் பச்சைதான். எனவே மஞ்சள் வர்ணத்தையும் நீல வர்ணத்தையும் சேர்க்கும் போது பச்சை தான் கிடைக்கிறது. இதுதான் ஒளிச் சேர்க்கைகளுக்கும் வர்ணச் சேர்க்கைகளுக்கும் உள்ள வித்தியாசம்.

இசை ஒலிகளுக்கு சுருதி, முழக்கம். பண்பு என்ற வேறு பாடுகள் இருப்பது போல வர்ணங்களுக்கும் தங்கு (Hue), அளவு (Value) அழுத்தம் (Chroma) என்ற வேறுபாடுகள் பல இருக்கின்றன: வர்ணத்திற்கு நிறம் அமைவதை பொறுத்து அதன் ரங்கு வேறு படும். வர்ணப் பொருள்களைத் தக்கவாறு சேர்த்து நாம் விரும்புகிறபடி ரங்கைப் பெற முடியும். நூற்றுக்கணக்கான ரங்கு வகையிள் இருக்கின்றன. வர்ணத்தின் அளவு என்பது அதன் ரங்கிற்கும் வெண்மை நிறத்திற்கோ அல்லது கருமை நிறத்திற்கோ உள்ள உறவைக் குறிக்கும், நீலரங்கை வெளிர் நீலம் (Light blue) கருப்பு நீலம் (Dark blue) என்று வித்தியாசப் படுத்திக் கூறுவதைக் கவனித்திருக்கலாம். நீல வர்ணத்துடன் வெள்ளை வர்ணத்தை கலந்து விட்டால் நீல நிறம் மாருதிருக்க அதன் அளவு மட்டும் மாறுவதை பார்க்கலாம். இப்பொழுது கிடைக்கும் நீல ரங்கைத் தான் வெளிர் நீலம் என்று கூறுவார்கள். வெள்ளை வர்ணத்திற்குப் பதிலாக கருப்பு வர்ணத்தைச் சேர்த்துக் கொண்டும் இம்மாறுதலைச் செய்யலாம்.

வர்ணத்திற்கு ரங்கு, அளவு என்ற இரண்டு பண்பாடுகளைத் தவிர வேறொரு பண்பு உண்டு. ஒரு வர்ணம் ரங்கிலும், அளவிலும் ஒன்ருயிருந்த போதிலும் அழுத்தத்தில் வேறு படலாம். உதாரணமாக சிவப்பு ரங்கில் ஒரு பொருள் படாடோபமாகவோ (Brilliant red) அல்லது மங்கலாகவோ (Dull red) தோன்றலால் ரங்கிற்கு எற்பட்ட இவ்வித்தியாசத்தைத் தான் அழுத்த வித்தியாசம் என்று கூறுவார்கள். படாடோபமாக இருக்கும் போது ரங்கின் அழுத்தம் அதிகம் என்றும், மங்கலாக இருக்கும் போது ரங்கின் அழுத்தம் குறைவு என்றும் கூறுவார்கள். வர்ணத்துடன் வெள்ளை கருப்பு இரண்டு வர்ணங்களையும் சேர்த்து அதன் அழுத்த வேறுபாடுகளை உண்டாக்குவார்கள். இவ்வாருக வர்ணரீசர்ச் வகையில் அனேக நுட்பங்கள் அமைந்திருக்கின்றன. இவை எல்லாவற்றையும் உணர்ந்து தான் ஓவியன் அவனுடைய சித்திரங்களை சிருஷ்டிக்கிருன்.

அற்ப விஷயம்

டி. என்.

ஷண்முகம்:

பார்க்கப் போனால் அற்ப விஷயம். இது இவ்வளவு பிரமாதம் ஆகும் என்று நான் நினைக்கவே இல்லை. சை! என் மாமா இவ்வளவு தூரம் படித்திருந்தும், உலக விவகாரங்கள் தெரிந்திருந்தும் இந்த அற்ப விஷயத்தை மலை போல எண்ணி மதிமயங்கி விட்டார். சிறிதாவது இதைப் பற்றி யோசித்திருந்தாரானால் இது அற்ப விஷயம் என்றும் இதைப் பற்றி நாம் பெரிதாக நினைத்து விட்டோம் என்றும் நிச்சயம் அவர் மனச்சாட்சியே சொல்லுமே!

அப்படி! என்னதான் நடந்து விட்டது? பிரமாதமாக ஒன்றும் இல்லை. அன்று நாடகத்துக்குப் போய்விட்டு வந்தேன். 2வது ஆட்டம். வர இரண்டுமணி ஆகி விட்டது. வழியிலேயே, வீட்டிற்குப் போனால் ஒன்றும் கிடைக்காது என்று எண்ணிக்கொண்டு காப்பிக் கடையில் இரவுச் சாப்பாட்டைப் பூர்த்தி செய்து கொண்டேன்.

வீட்டிற்கு வந்ததும் கதவைத் தட்டினேன். யாரோ திறந்து விட்டார்கள். பாயை விரித்துப் பேசாமல் படுத்துத் தூங்கி விட்டேன், அயர்வும், தூக்கமும் மேலோங்கினதால்.

காலையில் கண் விழித்ததும் என் அத்தை (மாமாவின் புது மனைவி) தண்ணீர்க்குடமெடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாகவே யாருடனும், எப்பொழுதும் தமாஷாகப் பேசும் நான், ராத்திரி சாப்பிடாமல் படுத்துக் கொண்டதைக் காரணமாக வைத்து அத்தையை ஏதாவது தமாஷ் செய்யலாம் என்று நினைத்து, "அத்தையம்மா வந்தாலும் வந்தார்கள்; நான் ராத்திரி பட்டினி கிடக்க வேண்டி வந்து விட்டது. இனி என்னென்ன ஆகுமோ?" என்றேன் சிரித்துக்கொண்டு.

அத்தையின் முகம் கறுத்து விட்டது. ஏதும் பேசாமல் அப்புறம் சென்று விட்டார்கள். அந்த மௌனம் பின்னால் புயலாக மாறப் போகிறது என்று நான் அப்போது நினைக்கவில்லை. பிறகு நான் எழுந்து எனது வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விட்டேன்.

மறுநாள் பிற்பகலில் நான் எனது தையற் கடையில் உட்கார்ந்து எனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அன்று வியாழக்கிழமை. மாமாவுக்கு லீவு. எங்கேயோ போய் விட்டு அப்போதுதான் வந்தார். எங்களை யெல்லாம் ஒருதரம் பார்த்து விட்டு பெஞ்சின் கோடியில் உட்கார்ந்தார். சாதாரணமாய் நண்பர்களுடன் கலகலப்பாய்ப் பேசுபவர் அன்று ஏனோ உற்சாகமிழந்தவராய் கலகலப்பற்று உட்கார்ந்திருந்தார்.

திடீரென்று முதல் நாள் காலையில் நடந்த பட்டினித் தகராறைக் குறிப்பிட்டுவிட்டு "இவனுக்கென்ன அத்தனை வாய்? அவள் யார் என்பது இவனுக்குத் தெரியாதா? இவனுக்கு அவள் சாதம் போட வேண்டிய அவசியம் என்ன? இஷ்டமிருந்தால் போட்டுச் சாப்பிட வேண்டும். இவன் இஷ்டம் போல் இரண்டு மணிக்கும், மூனு மணிக்கும் வந்தால் யார்தான் சாப்பாடு போட முடியும்? இதில் வெட்டி அதிகாரம் வேறே. நானே இன்னும் அவளுடன் சரியாகக் கூடப் பேசுவதில்லை. இவனுக்கென்ன அத்தனை ஆணவம்?" இப்படி வரிசையாகப் பேசத் தொடங்கினார். என்னால் பதில் ஒன்றும் பேச முடியவில்லை. தலையைக் குனிந்து கொள்ள வேண்டியதைத் தவிர எனக்கு வேறு வழியொன்றும் இல்லை. மற்ற நண்பர்கள் எதுவும் பேசாமல் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் இருக்கும் நிலையிலுள்ளவர்கள் போல் இருந்து விட்டார்கள். பின் அவர்களால் என்ன பேச முடியும்?

என் மனம் மேற்கொண்டு அங்கிருக்க ஒப்பவில்லை. எழுந்து வெளியே வந்து

விட்டேன். என் மனம் கேட்டது, 'நீ உண்மையில் குற்றவாளிதானு' என்று. அதற்கு உள்ளிருந்த ஏதோ ஒன்று 'அல்ல அல்ல' என்று கூறியது. பார்க்கப் போனல் தமாஷாகக் கேட்டது இப்படி விபரீதம் ஆகும் என்று யார்தான் எதிர் பார்க்க முடியும்? வேறு யாராவது என்ருல் பாதகமில்லை. என்னையும், எனது பழக்க வழக்கங்களையும், சாதாரணமாய் எல்லாருடனும் சகஜமாய் ஹாஸ்யமாய்ப் பேசும் சுபாவத்தையும் அறிந்த என் மாமா இவ்வளவு தூரம் இதை ஒரு பிர மாதமான விஷயமாக நினைத்து நாலு பேர் முன்னிலையில் என்னைக் கண்டிப்பது என்ருல்?... என் மன அமைதி இரண்டு நாள் வரை அடியோடு குலைந்து விட்டது.

உண்மையில் நான் தவறு இழைத்ததா கவே வைத்துக் கொண்டாலும் தனியாக என்னை அழைத்துக் கண்டித்திருந்தாலும் அது நியாயமாய் இருக்கும். அதற்கு அப்போது சமாதானமும் சொல்லியிருப் பேன்.

உம், இதையெல்லாம் இப்போது எண்ணி என்ன பலன்? நடந்தது நடந்து விட்டது! இது எனக்கு வாழ்க்கையில் ஒரு படிப்பினையாகி விட்டது. இனி இத் தகைய தவறு (ஆம். தவறுதான். என் வரையில் அதைத் தவறு என்று நான் ஒப்புக் கொள்ளா விட்டாலும் மற்றவர் கள் தவறு என்று தீர்ப்பளித்து விட்டார் கள் அல்லவா?) என்றும் என் வாழ்க்கை யில் நடக்காமல் பார்த்துக் கொள்வேன்.

கோபால் :

நாடோடி மாதிரி ராத்திரி ரெண்டு மணிக்கும் மூணு மணிக்கும் இவன் வரு வாஞம். இவனுக்கு ஆசார உபசாரம் செய்து சோறு போட வேண்டுமாம்! அப்படி இவன் என்ன சம்பாதித்துக் கொடுத்து வைத்திருக்கிருன்? அப்படிக் கேட்கத்தான் இவனுக்கு என்ன உரிமை? அதுவும் யாரிடம் கேட்பது? லக்ஷ்மி வீட் டிற்கு வந்து இன்னும் சரியாக மூன்று மாதம் கூட ஆகவில்லை. நானே இன்னும் அவளுடன் தாராளமாகப் பேசுவதில்லை. இவன் அதற்குள் அவளைக் கிண்டல்? செய்வதும், கேலி செய்வதும் என்ருல் இன்று கிண்டலும் கேலியும். நாளை இன் னும் என் மீறக் கூடாது? விஷயத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதால், அந்த விதை முளைத்து மரமாகி கோடரி கொண்டு வெட்ட வேண்டிய அவசியம் இல்லாமற் போய் விடுமல்லவா? அதனல் தான் நாலு பேருக்கு முன்னிலையில் அதைப் பற்றிக் கண்டித்தேன். மேற் கொண்டு இத்தகைய தவறு செய்ய மாட் டான் அல்லவா?

காலையில் நடந்த விபரத்தைப் பற்றிச் சொல்லி அவனைக் கண்டித்த போது அவன் முகம் கறுத்து விட்டது. எனக் குக் கூட ஏண்டா அப்படிச் சொல்லி விட்டோம் என்று பட்டது. அவனிடம் தனிமையில் சொல்லிக்கூட தண்டித்திருக் கலாம். ஆனல் அது அவன் மனதில் படி யுமா? இன்னும் பார்க்கப் போனல் அவன் தனது சகஜ சுபாவத்தால் லக்ஷ்மி யிடம் தமாஷாகப் பேசியது கூட அவ்வ ளவு பெரிய தவரு என்றுதான் என் மனச் சாட்சி கேட்கிறது. ஆனல் வேறு ஏதாவது விபரீத வெள்ளம் வருவதற்கு முன் அதற்கு கண்டித்தலாகிய அணை போடுவது நல்லதல்லவா? இந்த அடிப் படையை மனதில் கொண்டேதான் ஷண்முகத்தைக் கண்டித்தேன். அது அவன் மனதை ரொம்பவும் உறுத்துகிறது போல் இருக்கிறது. அன்று முதல் முகம் கொடுத்துக் கூடப் பேசுகிறது இல்லை என்னிடம். அவள் இருக்கும் பக்கம் கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. இருக் கட்டுமே. இவனல் யாருக்கு என்ன நஷ்டம்? அவன் படியளப்பதை வேண்டு மானல் நிறுத்திக் கொள்ளட்டும். அதை எதிர்பார்த்து இங்கு ஒருவரும் கையேந்தி நிற்பதாக இல்லை.

லக்ஷ்மி :

மருமகன் என்ருல் கேலி தமாஷ், இருக்க வேண்டியதுதான். ஆனல் அதற் கும் ஒரு எல்லையில்லையா? நினைத்த நேரத் திற்கு ஜாமம் ரெண்டு மணிக்கும் மூணு மணிக்கும் வந்தால், அதுவரையில் யார் முழித்திருந்து சோறு போட முடியும்? வருகிறவர்களுக் கெல்லாம் தண்டச் சோறு போட இது என்ன சத்திரமா? அல்லது சாவடியா? பிரமாதமாக அப்ப டிச் சம்பாதித்துக் கொடுத்தது தான் என்ன? ஒன்றும் இல்லை. வெட்டி அதி காரம். இதில் கிண்டல், கேலி எல்லாம்.

ராத்திரி பட்டினி போட்டுவிட்டேனும். யார் போட்டது? யார் பட்டினி கிடக்

கச் சொன்னது? கை யில்லையா? சட்டியில் சோறு இல்லையா? போட்டுத் தின்பதுதானே? "இன்னும் என்னென்ன பண்ணுவீங்களோ?" என்று எவ்வளவு எகத்தாளமாகக் கேட்டார்? நான் என்ன அப்படிக் கொடுமை செய்து விடுவேன்? அப்பொழுது நான் ஏதேதோ கொடுமை செய்வதாகவும், இனியும் ஏதேதோ செய்யக் காத்திருப்பதாகவும் அல்லவா ஏற்பட்டு விடுகிறது. சிவனே என்றிருந்தாலும் வீணாக வருகிற வம்பு இது.

பார்க்கப் போனால் அற்ப விஷயம். இது இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டது. எப்போதும் தமாஷ் செய்கிற மைத்துனர் தானே என்று நானாவது பேசாமல் விட்டிருக்கலாம். அதைப் போய் வீட்டுக்காரரிடம் சொன்னேன். அவருக்குக் கோபம் வந்து விட்டது. "நானே இன்னும் சரியாக அவளுடன் பேசுவது கிடையாது. உனக் கென்னடா கிண்டலும், கேலியும், தமாஷும்?" என்று நாலு பேர் முன்னிலையில் அவரைக் கேட்டு விட்டாராம். பாவம், அவருக்கு எப்படி இருக்கும்? இரண்டு நாட்களாக நான் இருக்கும் பக்கமோ அல்லது என் வீட்டுக்காரர் இருக்கும் பக்கமோ கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. அவரிடம் சாதாரணமாக இருக்கும் கலகலப்புக் கூட இந்த இரண்டு நாட்களாய்க் காணவில்லை. பாவம். நினைத்துப் பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கிறது.

அன்று காலையில் என்னிடம் அவர் தமாஷாகப் பேசியதை, வழக்கமான தமாஷ் என்று நினைத்துப் பேசாமல் விட்டிருந்தால் இத்தனை விபரீதம் நேர்ந்திருக்காது. அதைப் பற்றி என் வீட்டுக்காரரிடம் வேறு பிரஸ்தாபித்து விட்டேன். அவர் 'தாட் பூட்' என்று கிளம்பி ஒரு பெரிய விரோதத்தையே உண்டாகி கலகலப்பாய் இருந்த வீட்டை மயானம் போல் அமைதியுறச் செய்து விட்டார்.

பார்க்கப் போனால் தவறு எல்லாம் என்மேல்தான்! நாம்ஏன் இந்த அற்ப விஷயத்தைப் போய் அவரிடம் சொன்னோம் என்றிருக்கிறது. இன்னும் யோசனை செய்தால் என் வீட்டுக்காரரே இதைப் பற்றிய விவகாரத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து மலை போல் ஆக்காமல் செய்திருக்கலாம். மருமகனின் சுபாவத்தை என்னைவிட நன்றாகத் தெரிந்தவராயிற்றே! "அவன் சுபாவமே அப்படித்தான் லக்ஷ்மி; இதைப் பற்றி நீ ஒன்றும் தவறாக நினைத்துக் கொள்ளாதே" என்று ஏன் அவர் என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது? அப்போது நானும் அதை மறந்து சகஜமாக இருந்திருப்பேன். வீட்டில் இந்த வீண் கலவரமும், மயான அமைதியும் ஏற்பட்டிருக்காது. என்னமோ நடந்தது நடந்து விட்டது. இனி இத்தகைய கலகங்களுக்கோ, வீண் மனஸ்தாபங்களுக்கோ இடம் தரக் கூடாது. இச்சம்பவம் என் வாழ்க்கையில் எனக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்.

★

மேதை

மற்றவர்களுக்கு கஷ்டமாக இருப்பதைச் செய்து விடுகிறது சாமார்த்தியம். சாமார்த்திய சாலியால் செய்ய முடியாததைச் செய்வது மேதை

— அமீல் —

★

அழைப்பு

[டி. வி. சுவாமிநாதன்]

★

இன்பத் துயிர்ப்பே! வா வா வா!
இளநகை உணர்வே! வா வா வா!
என்றோ ஒருநாள் வருகின்றாய்!
ஏழை என்மீ தருள் இலையோ?

என்னை விட்டுப் பிரிந்தது ஏன்;
எத்தனை இரவும் பகலும்நான்,
உன்னை இழந்த ஏக்கத்தில்
உருகித் தவித்தேன் தெரிவாயோ?

மண்ணில் உழலும் மனிதன்நான்
மற்றும் ஒருமுறை உனைக்கூட
விண்ணிற் குயர்த்து வட்டமிடல்
விளம்பிடு சீக்கிரம்! "சாத்தியமோ?"

நீயும் நானும் என்றென்றும்
நினைவில் ஒன்றி வதிந்திடலாம்;
காயும் கதிரின் சேதனத்தைக்
கண்டு களிப்பவர் இருவருமே!

தேயும் நிலவின் துயர்களிலோ,—
தேங்கும் சோகப் பண்முறைகள்;
மாயும் மனிதர் உடல்கொள்ளும்
மறலியும் நம்மைத் தொட்டுவிடான்!

கனியைக் கொத்தித் தின்பாய்நீ!
கதலியில் கவிதை தித்திக்கும்;
பனியில் மழையில் புயல்காற்றில்,
பரிதியில் மதியில் விண்மீனில்,

இனிமை துளும்பும்!—நீ இணைந்தால்;
இலக்கியம் பற்பல இயற்றிடலாம்!
தனியே உலவி அடைகாத்தால்
தாபம்....தாகம்....தங்கிவிடும்....!!

உலகின் வசனச் செயல்முறைகள்
ஒன்றும் எனக்குப் பொருட்டல்ல!
கலையின் சிகரத் தரியணையில்
காவியம் புனையும் தேவன்நான்!

அலைகள் எந்தன் ரசிகர்கள்;
அவற்றின் வெண்நுரை பூரிப்பு!
அலையும் வானக அமரனுனை
அழைத்தேன்; வந்திடு! கட்புறலாம்.

தண்டனை

ப. தனுஷ்கோடி

வைத்திலிங்க வைத்தியர் வீட்டைத் தீ எரித்துக் கொண்டிருந்தது. பாட்டன் முப்பாட்டன் காலமாக வாழ வைத்த அந்த வில்லை வீட்டின் நைந்த மூங்கில் கூரையும், மக்கிப்போன நாட்டு ஓடுகளும் படீர்! படீர்! என வெடித்து நாலாபுறமும் சிதறின. துருப் பிடித்துப் போயிருந்த அதன் ஆணிகள் பழுத்து பக்கத்திலிருந்தவர்களின் மத்தியில் விழுந்து சுரீர் என்று தாக்கின. ஆறு வீடுகள் வரிசையாக எரிந்து கொண்டிருந்தன. ஆயிரக் கணக்கில் ஆணும் பெண்ணுமாய் வேடிக்கை பார்த்தபடியே பதைபதைக்க சூழ்ந்து கொண்டிருந்தனர்.

அது முன்னிரவு நேரம். ஆகவே வான முட்ட எழும்பிய் தீ ஜ்வாலை வெகு தூரம் வெளிச்சம் காட்டி கூட்டத்தை இழுத்தது. கூரை வீடுகளிலிருந்து கிளம்பிய புகைச்சல் தெருவையே கவ்வி திக்கு முக்கலாடச் செய்தது. பலர் கூரை மீதும், குட்டிச் சுவர் மீதும் ஏறி நின்று, பரக்கப் பரக்கத் தண்ணீர்க் குடங்களை வாங்கி இறைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சாதாரண தெருவாசிகள். ஆம்புலன்ஸ் தொண்டர் படையுமல்ல; அதிகாரிகளின் தீயணைக்கும் படையுமல்ல! அந்தச் சிறிய பட்டணத்தில் அவை கிடையாது. ஆகவே தீ அணைவதும், பிறகு கட்டுக் கடங்காமல் குபீரென்று ஆக்ரோஷமுடன் எழுவதுமாக, தாமாக சேவை செய்பவர்களைத் திண்டாட வைத்துக் கொண்டிருந்தது.

பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். "யார் வீட்டில் முதலில் தீ பிடித்தது? எப்படிப் பிடித்தது? குழந்தை கிழந்தை இருக்கப் போவுது பாருங்கள்! ஐயோ, முதல்லியே கவனிச்சிருக்கப் படாது?......" என்றபடி சம்பந்தப்பட்டவர்களோ, படாதவர்களோ பேச, பெண்கள் ஒருபுறம் மூக்கைச் சிந்தி முகாரி இழுத்துக் கொண்டிருந்தனர்.

நடு ஜாமத்திலே மயானத்தில் பிணம் எரிவதுபோல் பயங்கரத் தோற்றமளிக்கும் அவ்வீடுகளைச் சுற்றியிருந்த சிலர், சொந்தக்காரர்களைச் சரிபார்க்க ஆரம்பித்தனர். அப்போதுதான் "ஐயோ! அப்பா! நீ எங்கேயிருக்கிறாய்?" என்ற பெண்ணின் குரல் ஒன்று கணீரென்று கேட்டது. சப்தத்தைக் கொண்டே அது வைத்தியரின் பெண் என்று எல்லோரும் தெரிந்து கொண்டார்கள். அவர் வயதானவர்; நோயாளி! எமன் அவரோடு போராடிக் கொண்டிருந்த காலம் அது! "கிழம் சாகவுமில்லை; பிழைக்கவுமில்லை!" என்று 'சும்மா' போகிறவர்கள்கூட அலுத்துக் கொண்டிருந்தனர். அவர் எங்கே? அவரை யார் தேடுவார்கள்?

பெண் கதறியழுதாள். அவள் அம்மாவாக இருக்கும்; மஞ்சள் குங்குமம் மறைந்து விடுமே என்று அவளுடன் கட்டிப் பிடித்து இன்னொருவள் அழுதாள். பரிதாபம்தான். ஆனால் மற்றவர் என்ன செய்ய முடியும்? இதுவும் கிழவனுக்காக! ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முகத்தில் பட்ட தீயின் ஒளியில் "போனால் போகிறான்" என்று ஒவ்வொருவரிடமும் சுத்தமாகத் தென்பட்டது.

ஒரு இளைஞன். என்ன நினைத்தானோ! வைத்தியர் வீட்டிற்குள் சரேலெனப் பாய்ந்தான். "அடே! டேய்! டேய்!" என்று பலர் கத்தினர்கள். பெண்கள் இருவரும் அழுவதை நிறுத்தி விட்டு, தங்கள் வீட்டு வாசலை உற்றுப் பார்த்தனர். பத்து நிமிஷத்தில் அவன் வெளியே வந்தான். சுமக்க முடியாமல் கட்டிலின் மேலிருந்த மெத்தையைச் சுருட்டி இழுத்து வந்தான். இன்னும் இருக்கிறானா? உயிர் இருக்குமா?

யுவன் நடு வீதிக்கு வரும் வரை மூச்சுப் பிடித்து வந்தான். நெருப்பைத் தாண்டி விட்டோம் என்று தெரிந்ததும் தடாலென கையில் பிடித்திருந்ததைப் போட்டு விட்டுத் தானும் அதன்மேல் விழுந்தான். மேலெல்லாம் சிறு சிறு தீ எரிந்து கொண்டிருந்தது. முகம் களைத்துக் கருகியிருந்தது. கூட இருந்தவர் அவன் மீது மண்

ணைத்துவி தீயை அணைத்தனர். பிரக்ஞை யற்றுக் கிடந்தான் அவன்.

பெண்களிருவரும் உணர்ச்சிப் பெருக்கால் ஓடிவந்து பழைய மெத்தையை — தீப்பற்றிய மெத்தையைப் பிரித்தனர். அவன் ஒரு புறமாகத் தரையில் — புழுதியில் உருண்டான். அதைப் பார்க்கவில்லை பெண்கள். ஆனல்...

சுருட்டிய படுக்கையில் பாதி எரிந்த தலையணைதான் இருந்தது! ஏமாற்றம்! அவர் — கிழவன்? உள்ளேயே தீக்கிரையாகி விட்டானு?

கூடியிருந்தவர் பேசினர்கள்: "பையனும்தான் பாடுபட்டான்; பெரியவருக்கு ஆயுசு இல்லையே! இதுக்காக பாவம் — அவன் உடம்பு புண்ணானதுதான்மிச்சம்!"

2

புதிதாக வந்திருந்த டேராக் கொட்டகையில் ஆறுவாரமாக ஒரு படம் ஓடிக் கொண்டிருந்தது. ஊரெல்லாம் அந்தப் படத்தைப் பற்றியே பேச்சு! சினிமாவே பார்க்காதவர்கள்கூட திரள்திரளாக வந்து கொண்டிருந்தனர். அந்த வகையில் "நாமும்தான் பார்ப்போமே" என்று வந்திருந்தான் சங்கரன்.

மெர்க்குரி லைட்டின் பிரகாசமான ஒளியில், மைதானத்தின் ஓரமாக இரு பெண்கள் நின்று கொண்டிருந்தனர். உலாவிக் கொண்டிருந்த சங்கரனின் விழிகளில் அவர்கள் ரம்பைகள் போல வசீகரமாகத் தென்பட்டனர். யுவ யுவதிகள் சந்திக்கும் பகிரங்க நிலாமுற்றமாகத்தானே, இக்காலத்தில் ஒவ்வொரு சினிமாக் கொட்டகையின் முன்னும் நீலநிற வெளிச்சம் போடப்படுகின்றது! சங்கரன் இரண்டாவது ஆட்டம் பார்க்க வந்திருந்தாலும் சல்லிப் பேர்வழியல்ல. அவன் பார்வையில் பட்ட பெண்களிருவரும் அழகாகத் தோன்றினுலும், அடக்க மாகத்தானிருந்தனர். ஆனுலும் ஏதோ காரணமற்ற முறையில், அடிக்கடி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஸ்பீக்கரின் அலறல் முதலாட்டம் முடிந்ததை அறிவித்தது. திறந்துவிட்ட கேட் வழியாக ஆண்களும், பெண்களும் நெருக்கி இடித்துக்கொண்டு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தனர். படம் பார்த்த கும்பல்; பார்க்கப் போகும் கூட்டம், எல்லாமாகச் சேர்ந்து, மைதானத்தை நெருக்கடியாக்கிற்று.

அவன் அவர்கள் இருக்கும் பக்கமாக ஒதுங்கினன். "அம்மா! அவரே தாம்மா!" என்ற நிச்சயமான குரல் கேட்டுத் திரும்பினன். அதே சமயம் சற்றுப் பெரியவளாக இருந்தவள் "நமஸ்காரம்" என்ருள். அவனுக்கு இப்போது கொஞ்சம் ஞாபகம் வந்தது.

ஆம்; வைத்திலிங்க வைத்தியரின் மனைவியும், மகளும். ஆனல் வேறொரு சந்தேகம். புருஷன் செத்த மூன்றுமாதத்திற்குள்ளாகவா சினிமாப் பார்க்க வருகிறது? ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. ம்!...அதைப்பற்றி அவனுக்கென்ன கவலை?

"உங்களை மறுபடி பார்க்க வேண்டும் என்று குழந்தை தவியாய்த் தவித்தது. நீங்கள் ஏன் வரவே இல்லை?"

"என் முயற்சிதான் வீணுகி விட்டதே!" என்று சுருக்கமாக விடையளித்தான் சங்கரன்.

"அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள். பாவம்! நாங்கள் நிர்க்கதியாய்த் திண்டாட வேண்டும் என்று தலையில் எழுதியிருக்கும் பொழுது?"

பேச்சை வளர்த்தக் கூடாது என நினைத்தான். ஆனுலும் அனுதாபம் பொங்க "ஏன் எல்லா சொத்துக்களுமா தீயில் அழிந்து விட்டன?" என்ருன்.

"அதையேன் கேட்கிறீர்கள்? செட்டியார் செட்டு செத்தால்தானே தெரியும்? எங்கள் நிலையும் அப்படித்தான்!"

அவள் குரல் கம்மி ஒலித்தது. சங்கரன் சொந்தக்காரன்போல் அனுதாப உணர்ச்சி வசமானன். 'ஆர்க்லாம்ப்' அணைந்தது. ஓ! ஆட்டம் ஆரம்பமா?

ஓடிப்போய் மூன்று டிக்கட்டுகளாக வாங்கி வந்தான். இரண்டை அவர்கள் கையில் கொடுத்து விட்டு "நாளை வந்து பார்க்கிறேன்" என்ருன். பின் அவரவர் அமர வேண்டிய இடத்திற்குச் சென்றனர்.

3

காலணாவுக்கு வால்மிளகு, காலணாவுக்கு ஜாதிபத்திரி, அரையணாவுக்கு கருஞ்சீரகம் என்று கடைச் சரக்கை வாங்கி காட்டிலே பறித்த இலைதழைகளுடன் அரைத்து, உருட்டினாரானால் ஐம்பது மாத்திரைகளாக உருண்டுவிடும். அதை நாலு ரூபாய் முன்பணமாகப் பெற்றுக் கொண்டு, நோயாளிக்குக் கொடுத்து விடும் 'தொழில்' தெரிந்த வைத்தியர் வைத்திலிங்கம்! ஊர் சிறியதாக இருந்தாலும் பேர் பெரியதாகக் கிடைத்திருந்தது அவருக்கு! வேர்கள், பட்டைகள், விதைகள், வத்தல்கள் என்று ரகம் ரகமாகச் சிறுசிறு பைகளில் சேகரம் செய்து தயாராக வைத்திருப்பார் வீட்டில். யாருக்கு எந்த வியாதி வந்தாலும், அரை மணியில் அவற்றைச் சேர்த்து மருந்து தயாரித்து விடுவார். அந்த மட்டில் சந்தேகப் படாமல் சுறுசுறுப்பாக நடக்கும் அவர் 'கை ராசி'க்காரர்தான்! எல். எம். பி. பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு வியாதியை அறிவதற்கே, மூன்று நாள், நேரம் எல்லாம் வேண்டியிருக்கிறதே! நாட்டு வைத்தியர் மருந்தில் குணமாகாவிட்டால் அது வியாதியஸ்த்தனின் தலை எழுத்துத்தானே!

காசுக்குக் காசு வட்டி வாங்குவதை விட, கொள்ளை லாபம் வைத்தியருக்குக் கிடைத்து வந்தது. அதனால் லக்ஷ்மி எப்போதும் அவர் வீட்டில் தாண்டவமாடினாள். ஆனால் சரஸ்வதியின் கல்வியறிவு அவருக்கில்லை. ஆகவே, வரும் பொருளை நிலையாகப் பத்திரப்படுத்த அவரால் முடியவில்லை. நித்திய சுகம்; நித்திய தரித்திரமாக நின்றது.

குமுதம் அவரின் குமாரி. கோமதி அவரின் இரண்டாவது மனைவி. இருவரும் நல்லவர்கள்தான். ஆனால் திடீரென்று யார் வீட்டிலோ பிடிக்கும் தீ விபத்திற்கு, அவரும், அவர் உடைமையும் பலியாகக்கூடும் என்பது எப்படித் தெரியும்? பிதுரார்ஜிதமாக இருந்த அவரின் வைத்திய ஞானம், அவரோடு அழிந்தது. அதனால் இளம் பெண்கள் இருவரும் இன்று வறுமையிலும், துன்பத்திலும் தனித்து உழல்கிறார்கள்.

சங்கரனுக்கு இந்த வரலாறெல்லாம் கேட்கக் கேட்க கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது. கிழவனாக இருந்தாலும் குடும்பத்திலே ஆண்பிள்ளை என்று ஒருவன் இருந்தால்தான் பெண்களுக்குப் பாதுகாப்பும், ஆறுதலும் இருக்கும். அதை இழந்து விட்டு அநாதைகளாக நிற்கும் அவ்விளம் பெண்களைப் பார்க்கவோ, பேசவோ அவனுக்குப் பெரும் கஷ்டமாக இருந்தது. அவனால் அவர்களுக்கு எந்த விதத்தில் ஆறுதல் அளிக்க முடியும்? என்ன உதவி செய்ய முடியும்?

குமுதம் வயது வந்த பெண். அதனால் அவனுடன் அதிகம் பேசவில்லை. இதைக் கொண்டே அவளின் குணத்தை அளந்து கொண்டான் சங்கரன். 'அவளுக்குக் கல்யாணம் வேறு ஆக வேண்டுமே' என்று கோமதி தெரிவித்துக் கொண்ட பொழுது 'ஆண்டவன் இருக்கிறார்' என்று சொல்லி வைத்தான். ஆனாலும் அவளின் அடக்கமான சாந்த சுபாவத்திற்கேற்ற கணவனாகக் கிடைக்க வேண்டும் என்று மனதில் பிரார்த்தித்தான்.

எளிய செலவில் எரிந்த வீட்டைக் கூரையாக வேய்ந்து குடியிருந்து வந்தாள் அவள் சின்னம்மா. அவன் இங்கு வந்தது இதுதான் முதல் தடவை. எனவே புறப்படும்போது, வீட்டின் பல பாகங்களையும் காட்டினாள். புழக்கடையில் ஒரு ஒற்றை முருங்கை மரம் இருந்தது. உலர்ந்த உலக்கை போல் இரண்டொரு காய்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன. மற்றபடி மரத்தின் பெரும் பகுதி, தணலில் கருகி, இலைகள் உதிர்ந்து, மொட்டை மரமாகத்தானிருந்தது. அடிமரம் பூராவும் அரிவாள் வெட்டுப்பட்டு பட்டை உரித்திருந்தது. "இந்த மரப் பட்டைகளால் அவர் எவ்வளவோ சம்பாதித்தார். இனி மேல் இதில் யார் கை வைக்கப் போகிறார்கள்?" என்றாள் கோமதி. 'இனியாவது இஷ்டப்படி தளிர் விடட்டும்' என்றான் சங்கரன்.

4

சங்கரன் இளைஞன். பெற்றோர் உற்றார் அனைவரும் அவனுக்கு இருந்தனர். சகோதர சகோதரிகளும் இருந்தனர். தந்தை தனக்கென வியாபாரம் செய்து குடும்பத்தை போஷித்து வந்தார். 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்று கூறி எட்டாம் வகுப்புடன், மைந்தனைக்

கடையில் அமர்த்திக்கொண்டார். பழைய காலத்திலே பள்ளிக் கூடங்களில் பாடப்படிப்பு மட்டும்தான் இருந்தது. ஆனால் இப்போதோ மொழிப்பற்று, நாட்டுப் பற்று சேவைப்பற்று, சங்க அபிமானம் ஆகியவை ஆசிரியர்களாலேயே போதிக்கப் படுகின்றன. மாணவர்களுக்கு அரசியல் கூடாது, படிப்பு தவிர பிறவிஷயங்களே தெரியக்கூடாது என்று யார் கூறியபோதிலும், உயர்தரப் பள்ளியில் நுழைந்து விட்ட ஒவ்வொரு மாணவனையும் பொதுநல உணர்ச்சி பற்றாமல் இருப்பதில்லை. ஆகவே சங்கரன் கடை கண்ணியைப் பார்க்கும் வேலையில் அமர்ந்து விட்ட போதிலும் அவ்வப் போது சங்கங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்வான். அரசியலை விட சமூக சீர்திருத்தங்களில் அவன் மனம் அதிக நாட்டம் செலுத்திற்று. தினசரிப் பத்திரிகை படிக்கும் அறிவும், நாவல், சிறுகதை

மூலம் கிடைக்கும் அனுபவமும், ஏழை மக்களின் பிரத்யட்ச நிலையும், அவனை சிறந்த முற்போக்குள்ள தீவிரவாதியாக்கி விட்டன.

வைத்தியர் வீட்டில் தீப் பிடித்த சம்ப வத்தை அவன் சாதாரணமாக மதித்து மறந்திருந்தான். ஆனால் தற்செயலாக சினிமா கொட்டகை சந்திப்பும், பிறகு அவர்கள் வீடு சென்று தெரிந்துகொண்ட வரலாறும், அவன் சிந்தையில் வலுவான இடம் பெற்றுவிட்டன. அபலைப் பெண் களாக அவனியில் அவதிப்பட நேரிட்ட அவர்கள் மீது, அவன் இரக்கமும், அனுதா பமும் கொண்டதில் ஆச்சரியமில்லை. உல கத்திலேயே இப்படி எத்தனை அனாதை கள் நிர்க்கதியாகத் தத்தளிக்கிறார்களோ? ''ஆண்டவன் சித்தம்! — தலைவிதி!'' என்று சொல்லிச் சொல்லி ஆறுதல் தேடிக் கொண்டாலும்கூட, அவர்களின் வறுமையோ, தனிமையோ, தவிப்போ, மாறிவிடப் போவதில்லை. இவ்வளவு இளம் வயதில் வாழ வகையின்றி துர திருஷ்டம் பிடித்துவிட்ட அவர்களுக்கு தன்னாலான பொருளுதவியும், பிறவும் செய்வது என்று சங்கரன் சங்கல்ப்பித் துக் கொண்டான். இதில் அவனுக்கு அதிக சிரமம் ஒன்றுமில்லை. பாமர மக் களின் பரிதாபத்திற்காக கண்ணீர் விட்டு, ஆவேசம் பொங்க மேடையில் பேசினால் மட்டும் போதுமா? நேரடியாக சக்திக் கியன்ற அளவில் சிலருக்காவது உதவி புரியவேண்டாமா? ஆம்; சங்கரன் பர லோகத்தில் கிடைக்கப் போகும் புண்ணி யத்திற்காகவோ, தன் பாபங்களைத் துடை த்துக் கொள்வதற்காகவோ, அவர்களு க்கு உபகாரம் செய்ய முன்வரவில்லை. பேச்சொன்று செயலொன்று இல்லாமல் இயன்றளவு பிறருக்குதவுவதில் இப்பிறவி யிலேயே அவனுக்கு ஆத்ம திருப்தி ஏற் பட்டது.

5

கோமதியும், குமுதமும் அவன் களங்க மற்ற விசுவாசத்திற்கு பூரண நன்றி செலுத்தினர். அவர்களால் வேறு என்னதான் செய்யமுடியும்? மக்கள் பணியில் சங்கரன் முன்னணி மனிதனாக விளங்குவது கண்டு அவர்கள் மனம் பூரிப்படைந்தது. என்றென்றும் சிரஞ் சீவியாக வாழ்ந்து, அவன் புகழ் எண் திசையிலும் பரவ வேண்டும் என மனப் பூர்வமாகப் பிரார்த்தித்தனர். ஒவ்வொரு நாளும் அறிவுத் துறையில் ஒளி வீசிப் பிர காசித்து வருபவனைப்பற்றி, அவர்கள் அன்பும் பரிவும் காட்டியதில் வியப்பில்லை. இரு இளம் பெண்களும் இவ்விஷயத்தில் ஒருமனப்பட்டு இருந்ததுதான் வியப்பு! அவன் வாழ்வைப்பற்றி அனுதினமும் அவர்கள் சிரத்தை காட்டினர்.

ஆனால் தனியாக கோமதியை கவனித் தால் அவள் உபசாரத்தில் — அன்பில் சிறு சுயநல ரேகை ஓடியிருப்பது புலப் படும். இதயத்திலிருந்து ஊக்குவிக்கும் ஏதோ ஒரு சக்தியிலிருந்துதான், அவள் செய்கையும் நடமாட்டமும் இருந்தன. அது, அவளின் இளமையின் கோளாறு, பால்யத்தில் பதியை இழந்த கைம்பெண் ணின் சாயலா என்று சொல்ல முடியாது. பொதுவாக அவளைக் கவனித்ததிலிருந்து அதில் ஏதோ உள் அர்த்தம் இருப்பதாக மட்டும் சங்கரனுக்குத் தோன்றிற்று ஆக வே அது விபரீதமாக வெளிப்பட்டு விடாமலிருக்க எச்சரிக்கையாக இருந்தான். சந்திப்பிலும், சம்பாஷணை யிலும் மிக்க கவனம் செலுத்தினான். ஆனாலும் தன் கற்பைப்பற்றி தானே பிரமாதப்படுத்திக் கொள்வதையும் விதவா விவாகம் பற்றிய பிரஸ்தாபங்களை யும் அடிக்கடி கோமதி பேசுவாள். இது அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. அதாவது அவனும் அவளும் உள்ள உத்தம நட்பு நிலையில் அதை அவன் விரும்பவில்லை. அப்படிப் பேசி விவாதிப் பது இருவரையும் தவறான முடிவில் கொண்டுபோய்விடும் என அஞ்சினான்.

கோமதியைக் கண்டு எவ்வளவு அரு வெறுப்பு அடைந்தானோ, அவ்வளவும் பற்றுதலாக குமுதத்தினிடம் மாறின. தாய் தந்தையற்ற பெண்! மாற்றாந்தா யின் போஷிப்பில் உள்ள பெண்! எப் படி வாழ்க்கை நடத்துவாளோ என்று எண்ணமிடுவான். ஆனாலும் ஒரு ஆறுதல்! அங்கு அவள் ஒருவள் தானே இருக் கிறாள்! கோமதிக்கு பட்டும் பிள்ளை குட்டி இருக்குமானால்? எப்போதாவது அவர்கள் வீட்டினுள் அவன் நுழையும் போதே, அடங்கி ஒடுங்கி ஒருமூலையில் மண்டியிட்டு மௌனமாக அமர்ந்து கொள்வாள். கோமதிதான் ஊர்வம்பை எல்லாம் வாயாடி போல் அளந்து கொண்டிருப்பாள். 'நான் ஊமையல்ல' என்று காட்டுவதற்காக எப்போதாவது சில சமயங்களில் இடையே ஏதாவது இரண்டொரு பேச்சுப் பேசுவாள். முத்து போல் உதிரும் குமுதத்தின் அந்தச் சில

சொற்களைக் கேட்கவே அவனுக்குப் பிரம்மானந்தமாக இருக்கும். தானாக அவளிடம் பேச்சுக் கொடுக்க முயல்வான். ஆனால் அது அவளிடம் பலிப்பதில்லை.

6

நாட்கள் செல்லச், செல்ல கோமதியின் மனதில் ஏக்கமும் ஏமாற்றமும் தலைதூக்கின. கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு ஒரு சுகமும் அறியாத பாவியாக அவள் இருக்கலாம். வீரப் பிரதாபமிடும் சீர் திருத்த வாதியாக அவன் இருக்கலாம் ஆனால் காதல் வாழ்க்கை சம்பந்தப் பட்ட மட்டில் இருவர் மனமும் ஒன்ற வேண்டாமா? ஐம்பத்திற்காக அவன் அவளை ஏற்றுக் கொள்ள வேண்டுமா? ஆம்! என்று உலகம் தெரியாத அவள் மனம் பேசிற்று. கூடாது! என்று உண்மை சீர்த்திருத்தம் உணர்ந்த அவன் உள்ளம் உரைத்தது.

பெண் தோல்வியினால் ஆங்காரப் பட்டால் ஒன்று கடுமையான பழி தீர்த்துக் கொள்வாள்; அல்லது உன்னதத் தியாகம் செய்து காட்டுவாள். கோமதியின் ஏமாற்றம்—கோபம் முதலில் குமுதத்தின் மீதுதான் பாய்ந்தது. பிறகு சங்கரன் மீதும் அபாண்டம் சுமத்திற்று! அவனுக்காக—அவள் மீது கொண்ட ஆசைக்காகத்தான் அவன் வருகிறானாம்! பார்க்கிறானாம்!! உதவி செய்கிறானாம்!!! ஊமைக் கோட்டானாட்டம் முழித்து முழித்து உருட்டிக் கொண்டே யிருந்து என்னமோ சொக்குப்பொடி போட்டு விட்டாளே என்று சீறினாள். காரணமின்றித் தொட்டதற்கெல்லாம் குமுதம் திட்டு வாங்கினாள். பிரதிபலனைக் கருதாத பரிசுத்த எண்ணம் படைத்தவன் சங்கரன் என்று எந்த வாயால் கோமதி பாராட்டினாளோ, அதே வாயால் தான் அவனை அவதூறு செய்தாள். தன் அபவாதம் கற்பனைத்தாக்குதல் என்பதை அவளுடைய மனச்சாட்சி அறியும். ஆயினும் தனக்கில்லாத சந்தோஷம் அவர்களுக்குமட்டும் எதற்கு? தான் விரும்புபவரை தன்சகோதரியே விரும்புவதாயினும் பெண்மனம் பொறுக்காது. சக்களத்தி பெண்ணால் இடையூறு வருகிறது என்பதைக்கண்டு கோமதி பொருமைப்படுவது ஆச்சரியமல்ல. அவளுக்கிருந்த ஆங்காரத்தில், "தூ! இந்த சிடுமூஞ்சியைக்கண்டு ஆசைப்படுகிறாரே! என்ன கண்ராவி? அவருக்கும், அவர் குணத்திற்கும் சரியாக நடந்து கொள்வது என்னால் தான் முடியும்?" என்றெல்லாம் கூட எண்ணினாள்.

"நீங்கள் இங்கு அடிக்கடி வருவதைப் பற்றி நாலுபேர் நாலுவிதம் பேசுவார்கள்!' என்று கோமதி அழுத்தமாக ஜாடையாகக் கூறியதைக் கேட்டு சங்கரன் கதி கலங்கி விட்டான். "ஏன்? அப்படி ஏதாவது தகாத முறையில் நடந்து கொண்டு விட்டேனா?" என்றபோது கண்களில் நீர் சுரந்து கொண்டது அதற்கு சிறிதும் இரக்க மற்ற முறையில், "அதற்கென்னங்க செய்யறது? என்றும் நாலு பேருக்குப் பயந்துதானே ஆகணும்?" என்று கோமதி கூறிய பதிலைக் கேட்டு, தேங்கிய கண்ணீரையும் தாரைதாரையாக வழிய விட்டேன். ஐயோ! பழியா? எதற்காகப் பழி? ஒன்றும் செய்யாத நிரபராதியின் மீதா பழி? அதுவும் அடைக்கலம்—நட்பின் அவதாரம், அவள் கூறுவதா? இதை அவனால் சகிக்கவே முடியவில்லை. வீண் அபவாதத்தை ஏற்று வெளியேறவும் மனமில்லை. அவன் குலமென்ன? யோக்யதை என்ன? இது வரை நடந்து கொண்ட ஒழுங்கு முறையில்தான் என்ன தவறு இருக்கிறது? பிற இடங்களில் தான் ஏதேனும் கெட்ட பெயர்—தீய சகவாசம் என்பது ஏதேனும் உண்டா? கோமதிக்கு இதெல்லாம் தெரியாதா? தெரிந்துமா இப்படிப் பேசுகிறாள்? சே! பெண்களுக்கு நாக்கு ஒன்றா, இரண்டா?

தழுதழுத்த குரலில் ' 'தங்கள் மனதை இப்படிக் கலைத்தவர் யாரம்மா? என்ன சொல்லிக் கலைத்தார்கள் அம்மா?" என்றான் சங்கரன்.

"கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேறெயா? நீங்கள் பணம் கொடுக்கிறதும், ஒத்தாசை செய்கிறதும் எதுக்காக?............"

அவள் ஏதோ கூறிக் கொண்டே போனாள். "அட நன்றி கெட்ட பெண்ணே! இப்பத்தானா இது உனக்குப் படுகிறது?" என்று நினைத்துக் கொண்டே தன் வீடு திரும்பினான். அழுதுவடியும் குமுதத்தின் சோகம் கம்மிய முகம் அவனை தயாளப் பார்வையுடன் வழி யனுப்பிற்று!

இதன் பிறகு கோமதிக்கும் குமுதத்திற்கும் அவ்வளவு நன்ருக உறவு அமையவில்லை. ஒருவரையொருவர் சந்தேகத்துடனும், குரூரத்துடனும் பார்த்துக் கொண்டனர். முன்போல் கலகலப்பாகப் பேசுவதோ, சிரிப்பதோ அவர்களிடையே நிகழவில்லை. வீட்டுக்குப் பெரியவள் என்ற முறையில் கோமதியிடம் எதுவும் பேச முடியாமல் குமுதம் பதுங்கிக் கிடந்தாள். அசாதாரணமான அம் மௌன வாழ்கை அவர்களுக்குச் சங்கடமாகவே இருந்தது எனினும் அதை மாற்றிக் கொள்ளும் வகை தெரியவேயில்லை. வேறு உறவு இன்றி அவர்களிருவரும் ஒருவரை நம்பி ஒருவர் வாழ வேண்டியிருந்ததால் தான் அந்த மௌன ஒற்றுமையாவது நிலைக்க முடிந்தது.

பிரேத நடமாட்டமாகக் கழிந்த நாட்களில் வறுமையும், பிணியும், தோன்றலாயின. முகங்கொடுத்துப்பேசாமல்அனுப்பி விட்ட சங்கரனிடம் மறுபடியும் உதவியை எதிர்பார்க்க முடியுமா? அக்கம் பக்கத்தில் வேலை செய்து, ஜீவனம் செய்வது கஷ்டமாகத்தானிருந்தது. வைத்தியர் இருக்கும்போது கொஞ்சம் கற்றுக் கொண்டிருந்தாலும் இப்போது சௌகரியமாக இருக்கும். கோமதியின் மனம் இப்படி பல விதங்களிலும் சஞ்சலப்பட ஆரம்பித்தது. நல்லவிதமாகப் பேசி ஏற்பாடு செய்திருந்தால் கூட, குமுதமும் சங்கரனுமாவது சந்தோஷமாக இருப்பார்களே என எண்ணினுள். ஆனுல் குமுறும் உள்ளத்துடன் சோகமே வடிவமாக வாடும் குமுதத்தின் துயரை அவளால் இனித் துடைக்க முடியுமா?

அன்றிரவு கொல்லைக் கிணற்றில் குமுதம் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். சரியான வெளிச்சம் இல்லை. எட்டுக்கால் பூச்சி போல் ஏதோவொன்று காலில் ஊறுவது போலிருந்தது. அவ்வளவுதான் அவள் காலை உதறுவதற்குள் அந்த ஜந்து கடித்து விட்டுஓடிவிட்டது. தடாலெனக் கத்திக் கொண்டே விழுந்தாள். வாயிலும், மூக்கிலும் நுரை நுரையாக ரத்தம் பொங்கி வெளி வந்தது.

சப்தம் கேட்டு ஓடி வந்த கோமதிக்கு அக்காட்சி மகா பயங்கரமாக இருந்தது. பயந்து அவளும் அலறினுள். அவள் அலறின இரைச்சலைக் கேட்டு பக்கத்து வீட்டார்களும் ஓடிவந்தனர். குமுதத்தை வீட்டுக்குள் தூக்கி வந்து கட்டிலில் கிடத்தினுர்கள். பிரக்ஞையற்ற நிலையில் எதையோ அவள் உளறிக் கொண்டிருந்தாள். அங்கிருந்தவர்களில் யாரோ சொன்னுர்கள். உடனே முருங்கை மரத்துப்பட்டையை செதுக்கிவந்து அறைத்துக் கொதிக்க வைத்துக் கொடுத்தார்கள். கஷாயம் வேலை செய்தது. கண்திறந்து பார்த்தாள். குமுதத்தின் அபாயத்தைக் கேள்விப்பட்டு, அப்போது தான் அங்கு வந்து நின்ருன் சங்கரன். மனம் பதற அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் குரல் மெதுவாக ஒலித்தது. "சங்கரண்ணு! சங்கரண்ணு!" என்று. ஆம்! சாகிற காலத்தில் கூறப்படும் 'சங்கரா! சங்கரா!' என்ற மரண ஒலிதான்! பதிலுக்கு அவனும், "சகோதரி! பயப்படாதே! நல்லாயிடும்!" என்ருன். ஆனுல் அவன் ஆசி முடிவதற்குள் அவள் கண்ணை மூடிக் கொண்டு விட்டாள்.

அருகில் நின்றிருந்த கோமதியின் உள்ளம், குமுதத்தின் சகோதரத் தியாக எண்ணத்தை எண்ணி உருகிற்று! சிறு பெண்ணுயினும் அவளின் இறுதிவாக்கியம் உயர்ந்ததல்லவா? தனிமையில் உயிரோடு உலகில் வாழ விட்டுச் செல்வதே, கோமதிக்குக் கிடைக்கும் சிறந்த தண்டனை யல்லவா?

பழமையில் வந்த பண்பாடு

எம். எஸ். கமலா

ஸ்ரீமதி சுந்தரவதனன் தன்வீட்டு வெராந்தாவில் வெற்றிலைத்தட்டுடன் அமர்ந்து தோட்டத்தில் காற்றிலசையும் கொடி செடிகளை பார்த்தவாறு புஸ் புஸ், என்று நல்லபாம்புபோல் மூச்சுவிட்டுக்கொண்டு வெற்றிலையைச் சுவைத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் 'கேட்'டைத்திறந்து கொண்டு எதிர் வீட்டு சுப்புலக்ஷ்மி அம்மாள் கையில் ஒரு ரவிக்கைத்துண்டு கொண்டு வந்தாள்.

"வாங்க அம்மா;" என்றாள் பெருமூச்சு விட்டுக்கொண்டே. "சாப்பாடாச்சா"? என்று கேட்டுக்கொண்டே கையிலிருந்த ரவிக்கைத்துண்டை, உட்கார்ந்து, தைக்க ஆரம்பித்தாள்.

"ஆச்சு ; உங்களைக் கண்டா எனக்கு ரொம்பப் பொறாமையாயிருக்கு. என்னை விட நீங்கள் எத்தனையோ பெரியவர்கள். சிட்டு சிவுக்குன்னு ஓடி யாடி வேலை வெட்டி செய்கிறீர்கள். இத்தனைக்கும் சமையல்காரன் சமைத்துப் போடறான். மாலையில் கிளப்புக்குச்சென்று இரண்டு ஆட்டம் டென்னிஸ் ஆடிவிட்டு, பீச்சுக்கு போய்வருகிறேன். ராத்திரி பால், பழம் சாப்பிடுகிறேன். இப்படியிருந்தும் எனக்கேனோ இந்த கையாலாகாத்தனமும், மேல்மூச்சும்" என்று அழாத குறையாய் அங்கலாய்த்தாள் ஸ்ரீமதிசுந்தரவதனன்.

சுப்புலக்ஷ்மியம்மாள் சிரித்துக்கொண்டே "என்ன செய்வது. உங்களைப்போல் இருப்பவர்கள் எல்லாம் இப்படித்தான் சொல்கிறார்கள்."

"நன்றாய்ச் சொன்னீர்கள், எல்லோரும் என்னைப்போல் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள பாடுபடுவதில்லையே" என்னும்போதே தபால் சேவகன் இரு கடிதங்களைக்கொண்டுவந்து கொடுத்தான்.

அதை அவசர அவசரமாய்ப் பிரித்தாள் ஸ்ரீமதி சுந்தரவதனன். இரு கடிதங்களையும் நிதானமாய்ப் படித்தாள். அதற்குள் சுப்புலக்ஷ்மியின் பிள்ளை அங்கு வந்து "அம்மா; பத்மா சுகமாய் நேற்றுக்கு முன்தினம் இரவு ஆண் குழந்தையை பிரசவித்தாளாம். அரைமணி நேரத்திற்குள் சுகப்பிரசவம்தானாம். அத்தான் எழுதியிருக்கிறார்" என்றான்.

ரவிக்கையைத் தைத்துக் கொண்டே "நல்லது, கடவுள் கிருபை, சுகப்பிரசவமாயிருக்கவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். சர்க்கரை கொண்டுவந்து இந்த மாமிக்குக்கொடு. நானும் வறேன்" என்று "யார் கடிதம் போட்டிருக்கா? இந்திராவா? சந்திராவா?" என்று ஸ்ரீமதி சுந்தரவதனனைக் கேட்டாள்.

ஸ்ரீமதி சுந்தரவதனன் சுப்புலக்ஷ்மியின் பிள்ளை சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தவள் தன் பெண்களின் கடிதங்களைப் பொறுமையுடன் உற்றுப்பார்த்தாள். சோர்ந்த குரலில் 'ஊம்', என்று "இருவரும்தான் எழுதியிருக்கிறார்கள். சந்திராவுக்கு ஐந்துமாதமாகிறதாம். டாக்டர் படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூடாது என்றாராம். புஷ்டியான ஆகாரங்களை சாப்பிட்டு கம்ப்ளீட் ரெஸ்ட் எடுத்துக்க வேணுமென்கிறார். என்னபிள்ளையோ? குட்டியோ?" என்று அலுத்துக்கொண்டாள்.

"ஐயோ பாவமே; அப்படியானால் இங்கு கூட்டிக்கொண்டு வந்துவிடுங்கள்."

"இந்திராவின் வீட்டு சமையல்காரம்மாள் திடீரென்று எங்கோ போய்விட்டாளாம். இரண்டுநாள் சமைத்து உடம்புக்கு ஆகவில்லையாம். பலஹீனம் அதிகமாயிருக்கிறதாம். நடக்கக்கூட சக்தியில்லையாம்.

"என்ன செய்வது? இந்தக்காலத்துப் பெண்களே பூஞ்சைகள்" என்றாள் அனுதாபக்குரலில் சுப்புலக்ஷ்மி.

ஸ்ரீமதி சுந்தரவதனனுக்குச் சிறிது கோபம் வந்துவிட்டது, அதை வெளிக்கு காட்டாமல் "அம்மா! பத்மாவும் சந்திராவும் எத்தனை நாள் வித்தியாசம்? நான்கு நாட்கள். கலியாணமும் ஒரு மாதத்தில்

நடந்தது. உங்க பத்மா இதோ சுகப்பிரசவ மாகி விட்டதாகக் கடிதம்கூட வந்து விட்டது. எங்கள் சந்திராவைப் பாருங்கள்.''

''நான் சொல்கிறேனென்று தவருக நினைத்துக்கொள்ளாதீர்கள். கொஞ்சம் பழைய காலத்து வழக்கத்தையும் கொண்டாடவேண்டும். சிறுசுகளை படிக்கும் போதே வீட்டுக்காரியத்தில் பழக்கி புக்ககத்துக்குப் போகும்போது சுலபமாய் அவர்கள் வேலைகளை அவர்கள் செய்து கொள்ளத் தயார் செய்யவேண்டும்.''

''வாஸ்தவம். நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். குழந்தைகளாயிருக்கும்போது குழந்தைகள் படிக்கும்போது படிப்பதற்கேபொழுதுசரியாகிவிடுகிறது. கோடை விடுமுறைகள் வந்தால், ஊட்டி, கொடைக்கானல், குமரிமுனை இப்படிப் போய் அங்கு ஆனந்தமாக நல்ல காற்று வாங்குவதாகி விட்டது. படிப்பும் முடிந்தது. கலியாணமாகிவிட்டது. மாப்பிள்ளையும் கையுடன் அழைத்துக் கொண்டு போய்விட்டான். ஒரு நாள் அனுப்பி வைக்கச்சொன்னல் அனுப்பிவைக்கமாட்டேன் என்கிருன். அதைவிட அவளும் நானில்லாமல் போனல் சாப்பிட மாட்டார். வீட்டுக்குச் சரியாக வரமாட்டார். அங்குவந்த எடுத்துக்கொள்ளும் 'ரெஸ்டை' இங்கேயே எடுத்துக்கிறேன்' என்று எழுதிவிட்டாள்.

''அப்படியானல் அனுபவிக்க வேண்டியதுதான். நான் வருகிறேன்'' என்று எழுந்தாள்.

''ஒரு வார்த்தை, சந்திராவை என்ன சாப்பிடச்சொல்வது. இச்சமயத்தில் எப்படியிருக்கவேண்டும். கொஞ்சம் சொல்லிவிட்டுப்போங்கள்.''

''நாங்கள் பழையகாலத்து வழக்கத்தைக் கையாளுபவர்கள். இந்தக்காலத்தை அனுசரித்து படிப்பும், பாட்டும் பெண்களுக்கு சொல்லிவைத்தாலும், வீட்டுவேலைகள் செய்வதில் பழைய வழக்கத்தையும், நாளும்போதும் கொண்டாடுவதில் பெரியவர்கள் செய்ததையும் செய்வதையும் விடவில்லை. அதனல் எங்களுக்கு ஆரோக்யமும், ஐசுவரியமும் வளருகிறது.

சொல்கிறேன் கேளுங்கள். ஒரு பெண் கர்ப்பம் தரித்தால் மூன்றும் மாதம் 'மொக்குப்பின்னல்' என்ற சாக்கிட்டுப் பிறந்தகம் அழைத்து வந்து நான்குமாதம் நிறையும் மட்டும் வைத்திருந்து ஐந்தாம் மாதம் பிறந்ததும் புக்ககம் கொண்டு போய்விடுவோம். அந்த நாட்களில் வீட்டு வேலைகள் செய்யாமல் உட்கார்ந்திருக்கக் கூடாது. அவளால் ஆனவேலைகளை அவள் செய்வாள். அவனுக்கு விருப்பமான உணவுப் பதார்த்தங்களை அன்புடன் செய்துகொடுத்து, பழைய நேசிகளையும், உற்ருர் உறவினர்களையும் பார்க்க சந்தர்ப்பமளிப்போம். அந்த ஆனந்த சந்திப்பால் அவள் தன் கணவனைப் பிரிந்திருப்பதை மறப்பாள், மேலும் அந்தச் சிலநாட் பிரிவு அவள் நன்மைக்காகவே. இரண்டுங் கெட்டான் நிலையில் கணவனுடனிருப்பதும் அவ்வளவு நல்லதல்ல. அதற்காகத் தான் சாஸ்திரத்தின்மேல் கல்லை வைத்து 'நாலாமாதம் நாய்கூட நாலுஅடி பெயர்த்து வைக்காது'' என்று சட்டம் போட்டு விடுவோம். நாலாம் மாதம் கணவனுடனிருக்கும் பெண்கள் சற்று ஜாக்ரதையாயிருக்கவேண்டும், அதற்காகத்தான் அச்சமயம் பிறந்தகம் அழைத்துவந்துவிடுவது.

மறுபடியும் ஐந்தாம்மாதம் கொண்டு விட்டு ஏழாம்மாதம் பிறந்ததும் அழைத்து வந்து 'வளைகாப்பு' என்று கொண்டாடி ஒரு மாதம் வைத்துக்கொள்வோம். எட்டாம் மாதம் பிறந்ததும் புக்ககத்தில் 'சீமந்தம்' என்று அழைப்பார்கள். அப்பொழுது மறுபடியும் போய் சீமந்தமானதும் நல்ல நாள் பார்த்துக் கொண்டு வருவதற்குள் மாதம் ஒன்பதாகிவிடும். கணவன் வீட்டில் கணவனுக்கு வேண்டிய உபசரணைகள், மாமி, நாத்தி முதலியவர்களுக்குச் சகாயமாய் சுத்துவேலை செய்து கொண்டிருப்பதால் உடற்பயிற்சி தானுகவே ஏற்பட்டுவிடுகிறது. நன்கு ஓடியாடி குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதால் எல்லா உறுப்புகளும் தத்தம் சக்திக்கேற்ற வேலைகள் செய்து வலிவுற்றிருப்பதினல், சுகப்பிரசவமாகிவிடுகிறது.

நாங்கள் ஏழுமாதத்திற்குமேல் பிள்ளைத்தாச்சிப் பெண்ணைத் தையல்வேலை செய்ய விடமாட்டோம்! அப்படி முரட்டுத்தனமாய்த் தைப்பவளைக்கூட ''தையலுக்கு ஒரு நோவாக இடுப்புவலிப்படுவாய்'' என்று எச்சரிப்போம்.

'' உண்மையாகவா?'' என்று பயந்த குரலில் ஸ்ரீமதி சுந்தரவதனன் கேட்டாள்.

"உண்மையோ பொய்யோ, அதன் காரணம் இதுதான். ஒரே இடத்தில் உட்கார்ந்து இடுப்பு ஒடியத் தையல் வேலை செய்து கொண்டிருந்தால் உடல் முழுவதும் சரியாய் ரத்த ஓட்ட மேற்படாமல் அடிக்கொருமுறை கைகால்களை முறித்து சோம்பல் விடுவார்கள். இடுப்புவலி எடுக்கும் காலத்திலும் இதே பழக்கத்தில் கண்டபடி உடலை நெளித்துச் சங்கடப் படும்போது, சிசு, மோடாமோடியாய்த் திரும்பி பிரசவ மாவது கஷ்டமாகி விடுகிறது."

"அதுவும் அப்படியா?"

"பின் எதற்காக சூல் கொண்டவளை ஒரே இடத்தில் உட்கார விடாமல் ஏதாவது காரியத்திலீடுபடச் செய்வதும் இரட்டித்த மாதங்களில் மாத்திரம் கணவனுடனிருக்காமல் பார்த்துக் கொள்வதும்? இதெல்லாம் வெகு முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயங்கள்."

"மேல் நாட்டாரிடம் இம்மாதிரிப் பழக்க வழக்கங்களைக் காணேமே!"

"அவர்களும், நாமும் ஒன்ருகி விட முடியுமா? அவர்கள் பிறக்கும் போதே உணர்ச்சி வசப் பட்டவர்களாய் மது மாமிசங்களிலேயே ஊறிப் பிறக்கிருர்கள். அனுயாசமாய் ஓடி யாடிக் குதித்து விளையாடுகிருர்கள். உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராதவர்கள். குரங்குபோல் குதிப்பார்கள். நாயைப்போல் ஓடுவார்கள். நம்மைப்போல் ஒரேயடியாய் வயிறு முட்டத் தின்று களைத்துப் படுக்க மாட்டார்கள். மணிக் கொருமுறை கொஞ்சம் நீராகாரமும், இரண்டொரு ரொட்டித் துண்டுகளும், பிஸ்கட்டுகளும் தின்று படித்துக் கொண்டே உலாவுவார்கள். படுத்துக் கொண்டே நூல் பின்னுவார்கள். அவர்கள் திறமைக்குப் போக வேண்டியதுதான்! அவர்களைப் போல் பௌடரை பூசிக்கொண்டு எப்பொழுதும் அகமுடையானைவிட்டுப் பிரியமாட்டேன் என்று ஒரு சித்தாந்தம் மாத்திரம் ஏற்படுத்திக் கொண்டால் சுகப் பிரசவமாகாது. நம் 'பழமையிலிருக்கும் பண்பாடு' தான் நம் தேசத்திற்கு உகந்தது. நீங்கள் கூட சற்று கிளப்புக்குப் போவதை விட்டு மாலை நேரம் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் விட்டு, பிறகு குளித்து விட்டு கொஞ்சதூரம் நடந்து விட்டு வாருங்கள். இரவு நன்ருய்த் தூக்கம் வரும்.

"நடக்கக் கையாலாகாமல் தானே காரில் போகிறேன்."

"அது ஆரோக்கிய மல்ல. பழைய காலத்து ஜனங்கள் புண்ணிய மென்று பெயர் வைத்து மாலை நேரங்களில் தவருமல் கோவிலுக்கு தள்ளாத கிழவர்களும், குழந்தைகளைக் கைபிடித்து கூன் விழுந்த கிழவிகளும் எதற்காகச் சென்று வந்தார்களாம்! நல்ல காற்றுப் பருகினது போலுமிருக்கும். வயதடைந்த அங்கங்களுக்குப் பயிற்சி யளித்ததைப் போலுமிருக்கும்.

நாம்தான் 'பழமையின் பண்பாட்டின்' சிறப்பை அறியாமல் நாகரீக அரக்கனுக்கு அடிமையாகி, புதிய வழிகளைப் பின்பற்றி ஆரோக்கியத்தைப் பாழ்செய்து கொள்கிருேம்.

எதற்கு நாம் புதியவை கைபற்ற வேண்டுமோ அதைப் பின்பற்றித்தான் ஆகவேண்டும். குடும்பப் பொறுப்பை ஏற்கும் பெண்கள் மாத்திரம் சிறிது பழைய வழக்கங்களை கண்டிப்பாய் கையாண்டால்தான் நல்லது. எனக்குப் போதாகி விட்டது, வருகிறேன்" என்று எழுந்தாள்.

அச்சமயம் சுப்புலக்ஷ்மியின் மருமகள் வாஸந்தி அவ்விடம் வந்து "அம்மா! டிபன் செய்தாகி விட்டது. காப்பி கலக்கணும்; வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"வந்து கொண்டே யிருக்கேனே!" என்று அவளைப் பின்தொடர்ந்தாள்.

தன் அறையில் ஆபீஸ்வேலை செய்து கொண்டிருந்த சுந்தரவதனன் எழுந்து வந்து தம் மனைவியைப் பார்த்து "அந்தப் பெண் யார்? புதிதாய் அவர்கள் வீட்டுக்கு வந்திருப்பது?" என்று கேட்டார்.

"அந்தம்மாளின் மருமகள். இண்டர் பரீக்ஷைக்கு எழுதிவிட்டு வந்திருக்காள்."

"என்ன? படித்த பெண்ணு பழய வழக்கத்தைக் கடை பிடித்து நடக்கிருள். சீதா! இனி நம் வீட்டிலும் 'பழய பண்பாட்டை'க் கடை பிடிக்க வேண்டும். இத்தனை நேரம் அந்தம்மாள் பேசியதை கேட்டுக் கொண்டிருந்தேன். எங்கே! கொஞ்சம் ஷர்பத் எடுத்துக் கொண்டுவா! தாகம் பொறுக்கவில்லை" என்ருர் ஸ்ரீமான் சுந்தரவதனன்.

மனித இயல்பு

"சுகி"

அவன் ரயிலுக்குள் ஏறிய போது, வண்டி காலியாக இருந்தது. தோளில் கிடந்த துண்டை எடுத்து பெஞ்சில் தட்டிய படியே உட்கார்ந்தான். மெல்லிய மஸ்லின் சட்டை உடல் கட்டை எடுப்பாகக் காட்டிற்று.

நாலு பெஞ்சுக்கு அந்தப்பக்கம் முடங்கிக் கிடந்த சாமியார், 'தம்பி இப்படி வரட்டுமே பேச்சுத் துணைக்கு' என்றார். குரல் கொடுத்ததோடு பலகைக்கு மேலாக தலையைத் தூக்கவே, வெள்ளை வெளேர் என்ற தாடியும் மீசையும், கழுத்திலே கிடந்த உத்திராக்ஷ மாலையும் தெரிந்தன. வந்தவன் பதில் பேச வேண்டுமே. கருங்கல்லுச் சிலையாக உட்கார்ந்திருந்தான்.

'என்ன தம்பி எந்த ஊர் வரை?' என்று கேட்டுக் கொண்டே அவனுக்கு எதிராக வந்து உட்கார்ந்தார். அவனோ, காரியமின்றி விரக்தியோடு சன்னல் பக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வண்டி புறப்படவே நானும் ஏறி உட்கார்ந்தேன் ஒரு மூலையில்.

'தம்பீ, எந்த ஊருக்குப் போகிறது?' என்றார் சாமியார்.

'எமலோகத்திற்கு'

'இந்த லோகத்து மேலே என்ன வெறுப்பு? சொர்க்கம் என்பதாக ஒன்று இருக்கிறதே. அங்கே ஏன் போகக் கூடாது? எந்த ஸ்டேஷனில் எமலோகத்திற்கு டிக்கெட் கொடுக்கிறார்கள்?'

இவ்வளவு வேடிக்கையாகவும், சாதுர்யமாகவும் சாமியார் பேசியும், அவன் முரட்டுத்தனமாக சலனமின்றி இருந்தான். முகத்திலே கடு கடுப்பு. சாமியாருடைய தாடி மீசையைப் பிய்த்து எறிகிறவனைப் போல விழித்தான்.

'சும்மா இரும் சாமியாரே'

'ஏதோ கஷ்டத்திலே அவதிப் படுகிறதாகத் தெரிகிறது. தம்பீ என்ன கஷ்டம்

சொல்லு. ஏதாவது நான் உதவி செய்ய முடியுமான்னு பார்க்கிறேன்'

'சோலியைப் பாரும்வே. சும்மா தொண தொணக்காதேயும்'

இப்படி முகத்தில் அடித்தாற்போல பேசியதை லட்சியம் செய்யாமல் தாடியை உருவி விட்டார் சாமியார். என்ன கூத்து நடக்கிறது பார்க்கலாம் என்று மூலையில் பேச்சு மூச்சில்லாமல் இருக்கிறேன். வண்டியும் நகர்ந்து கை காட்டியைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது.

வெளிப்பக்கம் பார்த்த அவன் திரும்பி சாமியாரை முறைத்தான். சாமியார் முகத்திலே கொஞ்சம் கூட கோபமோ, வருத்தமோ இல்லை. என்ன நினைத்தானோ?

'சாமி. என்னமோ கோவத்திலே பேசி விட்டேன் ஆமா, என்னமோ கஷ்டத்திலே இருக்கிறதாக சாமி சொல்லிச்சே. உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?'

'உம் முகம் சொல்லுது. பேச்சு பேசுது. நடை நொடி பாவனை எல்லாம் பேசுது, தம்பீ. இடுப்பிலே என்ன சட்டைக்கு உள்ளாலே?'

அவன் முகம் குபீல் என வியர்த்தது. நானும் அவன் சட்டைக்குள் இருப்பதைப் பார்த்தேன். ஒரு சூரிக் கத்தி அது. தோல் பைக்குள் சொருகி, மடிக்குள் வைத்திருந்தது. இடுப்புக்கு புடைப்பாக வெளியே தெரிந்தது.

'நொங்குக் காயை சீவி எரியற மாதிரி எறிஞ்சிட்டால் என்ன? எறிஞ்சா தப்பா என்ன?'

விஷயம் என்னமோ அவன் மனசிற்குள்ளாக குமைந்து கொண்டிருக்க வேண்டும். குரலிலே விரக்தியின் வேதனைத் துடிப்பு. சாமியார் 'நீயல்லவா எமலோகத்திற்குப் போகிறதாகச் சொன்னாய்? யாரை அனுப்பப் போகிறாய்?'

'அது தான் அந்தப் பிசாசை – மூதேவியை – ஜாலக் காரியை – அவ பொம்பளையா? உயிரோட கொண்ணு இழுத்திடப் போறேன் சாமி'

அவன் முகத்தில் கோபம் தாண்டவமாடியது. நான் பயந்து விட்டேன். கண்கள் கலங்கி செந்தணல் ஆகி உருண்டன. மீசை துடிக்க, உடம்பும் முறுக்கேறி புருவம் வளைந்தது. சாமியார் கொஞ்சமும் அசையாமல் சிரித்தபடியே 'ஏன் தம்பீ, யாரைக் கொல்லறதாக உத்தேசம்? ஏன்' என்றார்.

'அஞ்சலை–பேரைப் பாருங்கடா துடப்ப கட்டைக்கு பட்டுக் குஞ்சலம் கட்டின மாதிரி – அவ ஒரு பிசாசு சாமி. இன்னும் இரண்டு மணி நேரத்திலே ஆள் குளோஸ்'

'அஞ்சலையா? அது யார் தம்பீ?'

சாமியாரின் கேள்விக்கு அவன் விரிவாக பதில் சொன்னான்.

'நான் பிறந்து வளர்ந்தது ஒரு கிராமத்திலே. வேலை பார்த்து மானமாக காலட்சேபம் செய்து வந்தேன். ஜவுளிக்கடையில் அந்தக் காலத்தில் எனக்கு முப்பது ரூபாய் சம்பளம். தாய் தகப்பன் சிறு வயசிலே செத்துப் போனதால், ஒரு வீட்டில் சாப்பிட்டு வந்தேன். அந்த வீட்டில் விதந்துவான தாயும், அவளுக்கு ஒரு மகளும் உண்டு. அவர்கள், முறுக்குச் சுற்றுதல், பூ கட்டி வீட்டுக்கு வீடு போடுதல், என் போன்ற இரண்டொருவருக்குச் சாப்பாடு போடுகிறது, இப்படி பிரயாசைப் பட்டு வயிறு வளர்த்தனர்.

அந்தப்பெண் அஞ்சலைக்கு, வயசு வந்து வாலிபம் விளையாட ஆரம்பிக்கும் பருவம். என் மனசிலே எத்தனையோ எண்ணங்கள் விளையாடின. யோசனைகள் பிறந்தன. அஞ்சலைக்கு துணி மணியில் அநியாய மோகம்.

வேண்டிய துணி மணியை என்னைவிட்டு எடுத்துத் தரச் சொல்லுவாள், அஞ்சலையின் அம்மா. நான் பத்து ரூபாயிக்கு எடுத்தால் ஆறு ரூபாய் என்று பொய் சொல்லுவேன். அப்படி பொய் சொல்லுகிறதில் ஏற்பட்ட ஆனந்தம் முடிவில் விதவிதமான பட்டு சீட்டி கஜம் கஜமாகத் திருடிக் கொண்டு வந்து சேர்ப்பதில் முடிந்தது.

என்மீது ஏற்பட்ட பிரியம், காதலாக மாறி விட்டது. நானே அஞ்சலையை மணம் செய்து கொள்ள, அவள் தாயும் சம்மதித்து விட்டாள். அஞ்சலையின் மாமன், கொஞ்சம் பணம்காசு உள்ளவன். தனக்கு அஞ்சலையைத் தர வேண்டும் என்று கேட்டான். ஆனால் அவனோ கருமி. தன்னுடைய ஷோக்குப்படி மா

மன் நடக்கமாட்டான் என்பதைக் கண்ட அஞ்சலை, என்னையே கலியாணம் செய்ய விரும்பினாள். ருசிகண்ட பூனையாயிற்றே கஜம் -கஜமாக பட்டும், சில்க்கும் என்னிடம் வாங்கியவள் அல்லவா ?

ஒரு நாள், ஒருகஜம் பட்டுத் துணியைக் கிழித்துக் குடைக்குள் சுருட்டிப் போட்டிருந்தேன். நான் வீட்டுக்கு சாப்பிட புறப்பட வேண்டிய சமயம். முதலாளி ஒரு காரியமாக என்னை வெளியே அனுப்பி யிருந்தார். நான் போய்விட்டேன். மழை வரவே என் குடையை முதலாளி எடுத்திருக்கிறார். விரிக்கவே, பட்டுத் துணி விழுந்தது. என் மீது ஏற்பட்ட சந்தேகம் ஊர்ஜித மாயிற்று. முதலாளி வீட்டுக்குப் புறப்பட இருந்தவர், போகாமல் இருந்தார்.

நான் போன கடைக் காரியத்தை முடித்த பின்னர் வந்தேன். என் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். குடைக்குள் பட்டுத் துணி இருக்கிறது.

‘டேய் முத்துக் குமார் வா இப்படி ?’

அவர் குரலில் இருந்த அதிகாரம் என் உடம்பை நடுங்கச் செய்தது. சென்றேன்.

‘எத்தனை வருஷமாக இந்தத் திருட்டுத் தொழில் ?’

நான் பதில் பேசத் தயங்கினேன். குடையைப் பிடுங்கி, பட்டுத்துணியை எடுத்து என் மூஞ்சியில் வீசினார், கஜம் விலை பத்து ரூபாய். அத்தோடு, அன்றையத் தேதி வரை உண்டான சம்பளத்தையும் மூஞ்சியில் வீசி எறிந்தார். நான் ஒன்றும் பேச முடியாமல் திரும்பினேன். முதலாளியே சம்பளத்தை எடுத்து பட்டுத்துணியில் முடிந்து, ‘போய் வா முத்துக்குமார். நமஸ்காரம்’ என்றார்.

வீட்டிற்குள் நான் வந்த போது, அஞ்சலை ‘பட்டுத்துணி எங்கே? பூ இதுதானா’ என்று மனம் நொந்து கொண்டாள். நான் வேலை போய் விட்டது என்று கூறியும் அதைப் பொருட் படுத்தவில்லை. திருடன் என்ற பெயர் ஏற்பட்ட காரணத்தால் வேறு எந்தக் கடையிலும் எனக்குச் சம்பளம் கொடுக்க விரும்பவில்லை. வேலையின்றி வீட்டுக்குள் இருந்தேன். இப்படி இருந்தாலும், ஒவ்வொரு நாளும் பகட்டாக ஆடை அணிந்து கொண்டு மகிழ்வது மட்டும் அஞ்சலையிடம் குறைய வில்லை. அவள் அணிந்து ஒய்யாரமாக நடக்கும்போது ஒவ்வொரு துணி மணியும் என் நெஞ்சைக்குத்தி வாதனை கொடுக்கக் கொடுக்க அவளோ ஆனந்த வெள்ளத்தில் மிதக்கிறாள்

நாளா வட்டத்தில் எங்கள் சாப்பாட்டுச் செலவிற்கு ஏதோ கமிஷன் புரோக்கர் என்ற உத்தியோக மூலம் ஓரளவு சம்பாதித்தேன். நான் சம்பாதிக்கும் அளவைப் பார்த்து ஏளனம் செய்தாள் அஞ்சலை. அடிக்கடி பணக்கார மாமனைக் கட்டி இருந்தால் என்று என் முன் நேர் முகமாகவே இடித்துக் கூறுவாள். எனக்கு அவள் மீது இருந்த காதலை விட, அவளுக்கு நான் வாங்கிக் கொடுத்திருக்கும் துணி மணி மீது இருந்த மோகம் சொல்லுக் கடங்காது.

இப்படி இருக்கிற காலத்தில், குடும்ப வாழ்க்கைக்கே போதுமான பணம் இல்லை. புதிய புடவைக்கு நச்சரித்தாள். என் புத்தியும் கெட்ட வழியில் திரும்பிற்று. அவளுக்காக அரைகஜம் ஒரு கஜம் வாங்கி வரநினைக்கும் கை மணிபர்ஸ் திருடும் வழக்கத்திற்கு பழக்கி விட்டது. ஒரு நாள் ஒரு சந்தில் தனிமையாக நின்ற குழந்தையின் கழுத்திலே கிடந்த தங்கச் சங்கிலி என் ஆசைக்குத் தூபம் போட்டது. அதுவே என் வாழ்க்கையையும் அணைத்தது.

திருட நான் முயற்சித்த வேளை குழந்தை அழவே வாயை அமுக்கினேன். அது திக்கு முக்கு ஏற்பட்டு உயிரே போய் விடும் போல திணறிற்று. நான் அதை அப்படியே எறிந்து விட்டுச் சங்கிலியைக் கழற்றி ஓடினேன். இதற்குள், சட்டையில்லாத போலீஸ்காரன் வந்து என்னைப் பிடித்துக்கொண்டான். அந்தக் குழந்தை போலீஸ் கமிஷனர் குழந்தையென்றும், போலீஸ் காரனுடன் உலாத்த வந்தது என்றும் பின்னரே தெரிய வந்தது. என்னைப் பிடித்த போலீஸ், எனக்கு கொடுத்த ஒவ்வொரு அடியும் உதையும் நான் திருடிய துணிமணியை அடி அடியாக நினைப் பூட்டின.

குழந்தைக்கு ஆபத்தென்றும் ஆஸ்பத்திரியில் போட்டிருப்பதாகவும் பேச்சு. முடிவில் கடின தண்டனை பெற்றேன்.

பத்து வருஷம் ஜெயில் வாழ்வு. யாருக்காக இம்மாதிரி ஜெயிலில் கஷ்டம் சாமீ? என் அஞ்சலை – அந்தச் சண்டாளி – நான் ஜெயிலுக்குப் போன மறு வருஷம் எவனையோ கட்டிக் கொண்டாளாம். எவ்வளவு கொடிய மனசு. அவள் ராக்ஷசி.

நான் நாலாம் நாள் விடுதலை அடைந்தேன். இந்த விபரம் முழுவதும் தெரிந்தது. இன்னும் மூன்று ஸ்டேஷன் தாண்டினல், அந்த அஞ்சலைப் பிசாசு இருக்கிறது. அவளைப் போய் என் மனசார கொலை செய்து விட்டால் என் மனசு ஆறிப் போகும். அதற்காகத் தான் போய்க் கொண்டிருக்கிறேன்.'

சாமியார் இதைக் கேட்டுக் கொண்டே இருந்தவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். யோசனைக்கு ஏதோ அடிகோலினர் போலும்.

'' உன் பெண்சாதி பெயர் என்ன? ''

'' அஞ்சலை ''

'' அஞ்சலைக்காக நீ தூக்குத் தண்டனை பெறவும் வேண்டுமா? அவள் அதற்கு அருகதை உடையவளா தம்பீ. அவள் உன்னை விட்டு ஓடிப் போய் விட்டவள். உன் மனைவியின் நலத்திற்காக நீ ஜெயில் வாசம் அனுபவித்தாய். ரொம்பவும் நியாயம். இப்போது அவள் மாற்ருன் மனைவி. அவளுக்காக நீ தூக்குத் தண்டனை பெறுவது திரும்பவும் கேவலமான காரியம். அவள் புருஷனிடம் பக்தியற்றவள். உன்னை உனது தியாகத்தை மறந்து விட்டாள். நீ அவளுடைய வஞ்சகத்தையே எண்ணுகிருய். அது தப்பு. மறந்து விடு. தம்பி, உன் மனைவிக்காக நீ தூக்குத் தண்டனை பெறலாம். மாற்ருன் மனைவிக்காக நீ பெறும் தூக்குத் தண்டனை நியாயமா என்று சிந்தித்துப் பார்.

'அவள் செய்த அயோக்கியத் தனத்தைப் பார்த்தீர்களா? என்னைக் கெடுத்து என் வாழ்நாளை வீணுக்கியது போல மற்ருெருத்தனையும் கெடுக்கிறவள் இந்த பூலோகத்தில் இருக்க வேண்டுமா?'

கேள்வி என் வரையில் நியாயமாகப் பட்டது. சாமியார், துன்பங்களையும். துன்பத்திற்கு காரணமாக இருப்பதையும் துடைக்க வேண்டுமென்பார் என எதிர் பார்த்தேன். ஆனல்......?

'தம்பீ' அவள் உன்னைக் கெடுத்தாள் என அறிந்தும், அவளை மணக்க இஷ்டப்பட்ட மடையன் மீது தான் குற்றம். அவள் மீது தவறு இல்லை'

'எப்படி இருந்தாலும் சாமீ, அவளைத் தொலைத்து விட்டுத்தான் மறு காரியம்.' என்றவன் ஜன்னல் வழியாகப் பார்த்தான். சாமியாரின் கண்களைப் பார்த்தேன். கண்ணில் கலங்கி நின்றது நீர். அவர் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

'என்ன சாமீ அழுது?' என்ற முத்துக்குமார் திரும்பினன். அவர் அழுகின்ற விக்கலையும் கண்ணீர்த் திவலைகளையும் பார்த்தான். அவன் முகத்திலே குடிகொண்டிருந்த கோரமும் பயங்கரமும் நீங்கி மனித இயல்பு, படர ஆரம்பித்தது.

சாமியார் அழுது கொண்டிருந்தார். குரல் தழ தழக்க, 'சாமீ, ஏன் அழுது?' என்று கேட்டான்.

'கடவுள் எனக்கு ஒரு சக்தியைக் கொடுக்காமல் போய் விட்டாரே. நான் ஒரு பாபி,

சாமியார் பெரு மூச்சு விட்டார். அவர் ஏன் அழ வேண்டும்? அவருக்கும், முத்துக் குமாரின் வாழ்க்கை வரலாறுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா? அவர் தான், அஞ்சலையின் மாமன் — லோபியாக இருக்கலாமோ?

'சாமீ, ஏன் இப்படி அழுது? ஏதாவது குற்றங் குறை சொல்லிட்டேனே, மன்னியுங்க'

அழுது கொண்டே, 'தம்பீ. உன் மனசை மாற்றக் கூடிய சக்தி எனக்குக் கொடுக்க வில்லையே, அந்தக் கடவுள். நான் காசி வரை போய் வருகிறேன். இது வரை உன்னைப் போன்ற மனக் கஷ்டம் உள்ளவனை நான் பார்க்கவில்லை. சந்தோஷமாக பொழுதுபோக்கும் பிரயாணிகளைச் சந்தித்தேன். காசிக்குப் போய் என்ன? கயாவிற்குப் போய் என்ன? என்னல் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியுமா? உன் வஞ்சக நெஞ்சை மாற்றத்தான் முடியுமா? ஏதோ உன்னை சந்தித்ததே பெரும் பாவம். இத்தனை வயது ஆகிறது எனக்கு. என் காதார ஒரு கொலையை நான் கேட்டது இல்லை. கண்ணார ஒரு கொலையைப் பார்த்தது இல்லை. இன்னும் இரண்டு மணி நேரத்தில், உன் மடிக்குள்ளே,

தோல் பைக்குள் ஒளிந்து கிடக்கும் சூரிக் கத்தி, ஒரு பெண்ணின் நெஞ்சிலே பாஞ்சு கிடக்கும், எவ்வளவு கொடிய செய்கை. சை இதை நினைக்கவே என் மனம் நடுங்கு கிறது. தம்பீ என் முன் நில்லாதே போய்......'

சாமியார் மேலே சொல்ல முடியாமல் பெஞ்சியில் மயக்கமாக விழுந்து விட்



டார். அவர் பேசிய போது ஒவ்வொரு வார்த்தையிலும் துடிப்பு இருந்தது. குரலின் ஏற்றத்தாழ்வும், அழுகையின் விம்மலும் பின்னி இணைந்து என் நெஞ்சத்தை உலுக்கி விட்டது. ஓடுகிற ரயிலில் ஏதோ நாடகம் பார்க்கிறோம் என்ற உணர்ச்சி.

சாமியார் பெஞ்சியில் விழுந்ததும், முத்துக் குமார் தூக்கித் தன் மடி மீது வார்த்துக் கொண்டான். கொலை செய்யப் போகும் அவன் கண்ணில் கூட சாந்தமும் அன்பும் தவழ்கிறது. கலங்கி ரத்த வெறி ஏறியிருந்த கண்ணில் நல்ல தெளிவு.

ரயில் நின்றது. அந்த ஸ்டேஷனில் ஒரு சோடா வாங்கி சாமியாருக்குக் குடிக்கக் கொடுத்தான். அவர் மடக் மடக்கென இரண்டு வாய் குடித்தார். மனித சமுதாயத்திடம் எவ்வளவு அன்பு. கொலையாளி ஆகாமல் இருக்க, அவனை நல்லவனாக மாற்ற அவருக்கு எவ்வளவு ஆவல்.

முத்துக் குமார் இரண்டணாவை சோடாவிற்கு எடுத்துக் கொடுத்தான். ரயில் நகர்ந்தது. சாமியார் முகத்தில் படர்ந்திருந்த அயர்வும் சோகமும் சிறிது விலகி இருந்தது. மயக்கத்திலிருந்து எழுந்தவர், முத்துக் குமாரை அன்பு கனியப் பார்த்து விட்டு என் பக்கம் வந்து உட்கார்ந்தார்.

நான் தெய்வத்தைக் கண்டவன் போல அடக்க ஒடுக்கமாக நீட்டியிருந்த காலை மடக்கி விநயத்தோடு பார்த்தேன். முத்துக் குமார் பய பக்தி நிறைந்த மனசோடு அவர் அருகே வந்து, 'சாமீ ஏதோ கெட்ட புத்தி. அஞ்சலையை மறந்திட்டேன். அவள் யாரோ. நான் யாரோ. அந்த மூதேவிக்காக நானும் தீவாந்திரமோ, மரண தண்டனையோ அடையணுமா? தெய்வம் போல வந்து காப்பாத்தினீங்க. எனக்குப் புத்தி வந்தது' என்றவன் குரலிலே மாறுதல், இருந்தது. மன்னிப்பின் இளக்கம் தொனித்தது. மடியில் சொருகியிருந்த கத்தியை எடுத்தான். ஓடிக் கொண்டிருந்த ரயில் வேகத்தை விட அதிக வேகமாக ஜன்னலுக்கு வெளியே எறிந்தான். அனியாயக்காரி அஞ்சலையின் நெஞ்சில் பாய வேண்டிய கத்தி, முட்கள் நிறைந்த கத்தாழையில் சொதக்கெனப் போய்ப் பதிந்தது.

சாமியார் முகத்தில் வெற்றியின் புன்முறுவல் மனசிற்குள் கொந்தளித்த ஆனந்தம் வாக்கிலே வந்தது. 'தம்பீ உன்னை ஆண்டவன் காப்பாற்றினார்' என்று ஆனந்தத்தோடு அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டார்.

இந்தக் காட்சியைப் பார்த்து மெய் மறந்தேன். மிருகத்தை மனிதனாக்கி விட்டார். சாமியாரின் நடிப்பு, அவர் எடுத்துச் சொன்ன வரிகள் மனித இனத்திற்கு அவனை மாற்றி விட்டது. சாமியார், மனிதருள் மாணிக்கம். என்னிடம் முத்துக் குமார் தன் துக்கத்தைச் சொல்லியிருந்தால், நான் அவனோடு சேர்ந்து துக்கம் கொண்டாடி இருப்பேன். அவர்கள் இருவரும் ஆயிரம் வருஷம் பழகியவர்களைப் போல, வெற்றிலை போட்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கே ஒரே ஆச்சர்யம்.

வண்டி நின்றதும் முத்துக் குமார் எழுந்தான். 'சாமீ புத்தியைத் தெளிவிச்சிங்க. நான் வரட்டுமா?' என்று பய பக்தியோடு கேட்டான்.

'தம்பி இறங்க வேண்டியது அடுத்த ஸ்டேஷன் அல்லவா?'

'அந்த அஞ்சலை இருக்கிற ஊர்ப்பக்கமே நான் போகிறதில்லை. முந்தின ஸ்டேஷனிலேயே இறங்கி, அடுத்த வண்டி போகும் போது திரும்பி ஊருக்குப் போகிறேன். சாமீ வரட்டுமா?' என்று இறங்கிப் போய் விட்டான். கொதிக்கும் உள்ளத்தோடு கொலை செய்ய வந்தவன் குளிர்ந்த உள்ளத்தோடு போனான். அடுத்த ஸ்டேஷனை விட்டு ரயில் நகர்ந்தது.

நான் சாமியாரைப் பார்த்தேன். 'சாமீ, தாங்கள் பெரிய புண்ணியத்தைச் செய்தீர்கள். ஒரு உயிர் அநியாயமாக கொலையாக இருந்தது. அது பிழைத்தது. வாழ்க்கையிலே ஏமாற்றம் அடைந்த இன்னொருவனிடம் என் போன்றவனிடம் இந்தக் கதையைச் சொல்லியிருந்தால் அவனைத் தூண்டி விட்டு அஞ்சலையின் புருஷனையும் தீர்க்கச் சொல்லி இருப்பான். தாங்கள் உலகத்தின் ஆசை துறந்தவர்கள். அதனால், அவனை மனிதனாக மாற்றி அனுப்பினீர்கள்?' என்று வாழ்த்தினேன்.

'தம்பீ, உலக அனுபவம் உங்களுக்குப் போதாது. இன்றைக்கு அவன் கொலை செய்ய மாட்டான். அஞ்சலை இருக்கும் பக்கமே அவன் போக மாட்டான்.

மனம் பண்பட்டு விட்டது. இந்த மனம் குரங்கு மாதிரி. எந்த நிமிஷம் அடுத்த கொப்பில் தாவி நிற்குமென்று சொல்ல முடியாது. மனப் பக்குவம் சுலபமாக வராது. எனக்கு முத்துக் குமாரனிடம் நம்பிக்கையில்லை.'

எனக்குப் பூர்ணமாக நம்பிக்கை இருந்தது. 'சாமீ முத்துக் குமாரிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லா விட்டால், அவ்வளவு புத்தி போதனை செய்வீர்களா?'

'முடிந்ததைச் செய்தேன். இன்று அவன் நல்லவன். பதினாயிரத்தைக் கொடுத்தாலும் அவன் கொலைக்கு உடன் பட மாட்டான். சூழ் நிலை அவனை அப்படி ஆக்கியது. என் நடிப்பு அவன் மனசில் நல்லெண்ணத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனால் நாளை?'

இப்படியாகப் பேசிக் கொண்டே போனோம். அடுத்த ஸ்டேஷன் வந்த போது எங்காவது அஞ்சலை வர மாட்டாளா அவளிடம், அவளுக்கு இருக்கும் ஆபத்தைச் சொல்லிச் செல்லலாம் என நினைத்தேன். பேதை அஞ்சலையை நான் எப்படி அடையாளம் காண முடியும்? அவளை முன் பின் அறிந்தவனா? இல்லை.

சாமியார் அதற்கு அடுத்த ஸ்டேஷனில் இறங்கிப் போய் விட்டார்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரம் ஆகி விட்டது. நான் முத்துக் குமாரையும் சாமியாரையும் மறந்து விட்டேன். காலைப் பத்திரிகையைப் புரட்டிய போது, 'ஒரு பெண்ணின் கோரக் கொலை. குத்தியவன் பிடிபட்டான்' என்று கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்தது.

'முத்துக்குமார் என்பவன், தனது மனைவியாக இருந்த அஞ்சலை என்ற பெண்ணை நேற்று மாலை அவள் வீடு நுழைந்து குத்தினான்.'

அஞ்சலை இரண்டாந்தாரமாக இன்னொருவனுடன் வாழ்க்கைப் பட்டது பிடிக்கவில்லையென்பதும், ஏற்கனவே திருட்டுக் குற்றத்திற்காக பத்து வருஷம் ஜெயிலிலிருந்து சமீபத்தில் விடுதலை பெற்ற முத்துக் குமாரனது மனைவி.........

மேலே படிக்க முடியாமல் பேப்பரைக் கீழே போட்டு விட்டு, சாமியாரின் தீர்க்க தரிசனத்தையும், மனிதனின் மிருக இயல்பையும் வியந்து சிரித்தேன். எனது உலக ஞானத்தை நினைக்க நினைக்க இன்னும் சிரிப்பு அதிகரித்தது.

வாழ்க்கைச் சித்திரங்கள்

'வில்லன்'

அறிஞர் வெல்ஸ் தம் நாவல்களில், செல்வர்களையோ வீரதீரர்களையோ கதா பாத்திரங்களாகக் கொள்ளாமல், பல வகைத் தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கையுடன் போராடின பெரும் பான்மையான எளிய மக்களின் இன்ப துன்பங்களை அனுதாபத்துடனும் நகைச்சுவையுடனும் சித்திரித்தார் அவருடைய பெயர் போன சிருஷ்டிகளான லெவிஷாமும், கிப்ஸும், போலியும், சாமானிய மெக்கானிக்குகள், ஷாப் சிப்பந்திகள், கடைக்காரர்களின் அசல் பிரதிநிதிகள். நகரங்களின் சந்து பொந்துக்களிலும், சின்னஞ்சிறு பட்டணங்கள், பேட்டைகளிலும், குக்கிராமங்களிலும் வசிப்பவரும், பெயரும் புகழுமின்றி அன்றாடம் உழைத்து உலகம் நடக்க ஆதாரமாயிருப்பவருமான லட்சக்கணக்கான இம்மக்களுக்கு அவர் தம் நாவல்களின் மூலம் சாகாவரம் அளித்தார். இவர்கள் அறிவுடன் முன்னேறி வாழ்வதற்கும், தம் தொழில்களைச் சரியான முறையில் நடத்துவதற்கும் உரிய வழிகளைக் காட்டினார். மூட நம்பிக்கைகளுக்குப் பதிலாக விஞ்ஞான அறிவை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். ஒருவரையொருவர் சுரண்டும் கொள்ளைக்காரர் கூட்டமாயிருக்கும் சமூகம் ஒழிந்து, சகோதர ஆன்மநேய ஒருமைப் பாட்டுடன் விளங்கும் ஒரு புதிய சமுதாயம் ஏற்பட வேண்டுமெனப் பிரசாரஞ் செய்தார்.

கீழ் நடுத்தர குடும்பத்தில் பிறந்த அவர், ஆதியில் கடின வாழ்க்கை நடத்தினார். அக்காலத்தில், அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில், அரசியலில் ஒருவித தாராளக் கொள்கை நிலவியதாயினும், பொருளாதார விஷயங்களில், போட்டியிட்டு வெல்லும் சக்தி வாய்ந்த செல்வர் மேன்மேலும் செல்வ மீட்டிக் கொழுப்பதும், பலவீனரான எளியர் ஈவு இரக்கமின்றி சுரண்டப்பட்டு மடிவதும் சகஜமாயிருந்தன. வெல்ஸ் இந்நிலைமையைக்கண்டு பொருமித் தீவிர சீர்திருத்தக்காரரானார். இவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடே அவருடைய நாவல்கள். அவர் நாவல்களில் வரும் பாத்திரங்கள் விநோதமானவரும், நகைப்பிற்கும் பரிதாபத்திற்கும் உரியவரும், தம்மிடிமை மடமைகளினின்று வெளியேறப் போராடுகிறவரும் ஆவர். தொழிற் புரட்சியின் பயனாக வந்த இயந்திர நாகரிகம் அழகிய இயற்கையுலகில் அவர்களிடையே விளைவித்த குழப்பங்களையும் அநீதங்களையும் அவர் நன்கு சித்திரித்தார். முதல் முதலில் உணர்ச்சியை வெளியிடாமல் அடக்கமாகவும் கலையழகுடனும் எழுதிய அவர், மெல்ல மெல்லத் தாமும் போராட்டத்தில் கலந்தார். அவருடைய கருத்துக்களும் சினத்திலெழுந்த உணர்ச்சிகளும் பரஸ்பரம் யுத்தம் செய்தன. ஜீவிய வேலையாகக் கொண்ட சீர்திருத்தமே அவருக்குப் பெரிதாகப் பட்டது. நாவல்களை அவர் பிரசாரக் கருவிகளாக்கினார். அரசியல் வாதிகளும், தொழிற் சீமான்களும் மானிட சமுதாயம் ஒழுங்கான தொரு முழுமையாவதற்குத் தடையாயிருப்பவர் என அவர்களைக் கண்டித்தார்.

ஆசிரியர் ஆரம்பத்தில் எழுதிய நாவல்கள் கலையழகுடன் மிளிர்ந்தன. அவற்றில் ஆங்கிலேய சாமானிய மக்களின் இன்ப துன்பங்கள், விருப்பு வெறுப்புக்கள், தடைகள், பொய் நம்பிக்கைகள் ஆகியவற்றை அவர் அழகுறச் சித்திரித்தார். அவர் பெரும்பாலும் தம் வாழ்க்கையனுபவங்களையே புனைந்து எழுதினார். நாட்டுப்புறங்களில் கழிந்த தம் குழந்தைப் பருவம், தம் பெற்றோர்களின் வறுமை, ஜவுளிக்கடையில் தாம் நடத்திய சிப்பந்தித் தொழில் சுய கல்வியபிவிருத்திக்காகத் தம் போராட்டங்கள், உபாத்தியாயர் வேலை ஆகியன யாவும் தம் நாவல்களுக்குரிய விஷயமாயின. உதாரணமாக "காதலும் லெவிஷாமும்" (1900), "கிப்ஸ்" (1905), "போலியின் வரலாறு" (1910) என்னும் மூன்று நாவல்களை எடுத்துக் கொள்வோம்.

லெவிஷாம் ஓர்த்தலியில் உதவி உபாத்தியாயர். அவனுக்கு அப்போது வயது 19.

ஒரு நாள் தன் அறையின் சன்னலிலிருந்து வெளியே பார்த்தான். பூமி பசும் போர்வை போர்த்து, தென்றல் ரம்மியமாக வீசியது. செடி மரங்கள் புதுத்தளிர் தளிர்த்துப் புத்துயிர் பெற்றன. இயற்கை எழுச்சி பெற்றது. வசந்தக் கன்னி களி நடனமாடினாள். இள லெவிஷாமின் உள்ளமும் துடித்தது. அது சமயமே அவள் தெருவில் சென்றாள். இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர்.

லெவிஷாம் நந்த வனத்தில் மீண்டும் அவளைக் கண்டான். பின்னர் மாதா கோயிலிலும் பார்த்தான். காதல் கவ்வியது. ஒருசமயம் சாலையில் அவளைச் சந்தித்தான். பேசிக்கொண்டே அவளுடன் உலாவினான். ஒரு நாள் அவள் வீட்டண்டை சென்று அவளை அழைத்தான். இருவரும் நதிக்கரையோரமாகச் சென்றனர். எங்கும் பசுமை! எங்கும் பூக்கள்! இருவரும் கைகோத்துச் சுற்றி யலைந்தனர். அவள் பெயர் எதெல். அவள் போர்பிஷர் குடும்பத்தில் தங்கியிருந்தாள். சீக்கிரம் வேலையில் அமர லண்டன் போகப் போகிறாள்.

லெவிஷாம் லண்டனில் விஞ்ஞான ஆசானாகப் பயிற்சி பெற நார்மல் விஞ்ஞானப் பள்ளியில் சேர்ந்தான் அங்கே பிரபல விஞ்ஞானியான அக்ஸ்லியின் சொற்பொழிவுகளைக் கேட்கும் பாக்கியம் பெற்றான். அப்போது தன்னுடன் விலங்கு சாத்திரம் படித்த ஆலிஸ்ஸின் நட்பு ஏற்பட்டது. அது சமயம் அவனுக்கு வயது 21, அவளுக்கு 23. லெவிஷாம் விரைவில் சோஷலிஸ்ட் ஆனான். சோஷலிஸ சித்தாந்தம்பற்றி சொற்பொழிவு ஒன்றும் செய்தான். ஆலிஸ் பரவசமடைந்தாள். அவர்களின் நட்பு முற்றியது. இலக்கியமும் சோஷலிஸமும் அவர்களைப் பிணைத்தன. காதலும் துளிர்த்தது.

ஒரு நாள் ஆவியுலகச் சோதனைக் காட்சியொன்று நடந்தது. அதற்குச் சென்றிருந்த லெவிஷாம் அங்கே எதெல் 'மீடிய 'மாக (இறந்தவரின் ஆவி பிரவேசிக்கப் பட்டவள்) இருந்தாள். பின்னர் அவளை வெளியே கண்டு பேசினான். வயிற்றுப் பிழைப்புக்காக் ஷாபரி என்ற பித்தலாட்டக்காரனின் கீழ் இத்தொழிலை மேற்கொண்டிருந்தாள் எதெல். இளமைக் காதல் திரும்பியது. எதெல் ஏழைப்பெண்; படிப்பு வாசனையற்றவள். ஆயினும் லெவிஷாம் அவளையே விரும்பினான்.

சிறிது காலத்திற்குப் பின் காதலர் சந்தித்தனர். கஷ்ட தசையிலிருந்த போதிலும், லெவிஷாம் தம் பயிற்சியைப் பூர்த்தி செய்யாமலிருந்தும், திருமணம் செய்து கொண்டு குடித்தனஞ் செய்யக்கருதினர். எதலுக்கு வயது 21. டைப் அடித்துச் சிறிது ஊதியம் பெற்றாள். லெவிஷாம் கையிலிருந்ததை யெல்லாம் குடித்தனத்திற்காகச் செலவிட்டான். பண நெருக்கடியும், கவலையும் ஏற்பட்டன. துரதிருஷ்டவசமாக பரீட்சையில் அவன் தவறினான்.

ஒரு நாள் பேய்ன்ஸ் என்னும் வாலிபன் கொண்டுவந்து கொடுத்த பூவை எதெல் கவடின்றி ஏற்றாள். கணவன் அவர்களுக்குள் கள்ள உறவு இருக்கலாமென ஐயுற்று அவள்பால் வித்தியாசமாக நடந்தான். பின்னர் உண்மை தெரிந்தது. பழைய காதல் திரும்பி வந்தது. தம்பதிகள் அமைதியாகக் குடித்தனஞ் செய்தனர். இதுவே ''காதலும் லெவிஷாமும்'' என்ற நாவலின் சாரம்.

கிப்ஸ் நியூரோம்னியில் பொம்மைக் கடை வைத்திருந்த தன் மாமன் பாதுகாப்பில் வளர்ந்தான். சின்னஞ்சிறு வயதிலேயே அண்டை வீட்டில் வசித்த ஆனியின்மீது அவனுக்குக் காதலேற்பட்டது.

கிப்ஸ் பின்னர் நியூரோம்னி கிராமத்தை விட்டுப் போக்ஸ் டோன் பட்டிணத்தில் ஜவுளிக் கடையில் சிப்பந்தியாகப் பயிற்சி பெறச் சென்றான்.

அப்போது அவனுக்கு வயது 14. சால்போர்ட் ஜவுளிக் கடை பெரியதொரு வியாபார ஸ்தலம். அதில், விலைவாசிகளை நெட்டுருச் செய்தல், ஜவுளி பார்சல்களைப் பேக் செய்தல், வாடிக்கைக் காரர்களைக் கவனிக்கும் சிப்பந்திகளுக்கு உதவியாயிருத்தல், பார்சல்களையும் பட்டியல்களையும் கடைக்குள் இடத்திற்கிடம் எடுத்துச் செல்லல், வாடிக்கைகாரர்களின் அங்கீகாரத்திற்காக ஜவுளிகளை வெளியே எடுத்துச்செல்லல் – இவைகளே அவன் வேலை. நாள் ஆகஆக, வேலையில் பழகிக்கவர்ச்சி மிகுந்த வாலிபனானான். உடுப்புஅறையைச் சார்ந்த இளம்பெண் சிப்பந்திகள் அவனைப்பெரிதும் விரும்பிக் குசாலாகச் சரசமொழிகள் பேசினர்.

கிப்ஸ் தன் நிலைமையில் திருப்தியடைய வில்லை. கல்வியில் அபிவிருத்தியடைய பல நூல்கள் படித்தான். பயிற்சிக் காலம் முடிந்ததும் தச்சு சிற்பவேலை வகுப்பில் சேர்ந்தான். போக்ஸ் டோனில் வக்கீல் மகளான எலென் அதை நடத்தினள். அப் போதே அவள்மீது அவனுக்குப் பிரேமை யேற்பட்டது.

இங்ஙன மிருந்து வந்தபோது யாரோ ஒருவர் அவனுக்கு வருடம் 12,000 பவுன் வருமானமுள்ள ஆஸ்தி விட்டுச் சென்றது பத்திரிகை மூலம் தெரிந்தது. திடுமென கிப்ஸ் செல்வனாய் விட்டான். பணம் கிடைத்து விட்டால் சும்மாயிருக்க முடி யுமா? புதிய பதவிக்குத் தக்கபடி தன் னைப் பொருத்திக் கொள்ள வேண்டாமா? பெரிய மனிதர்களுடன் அந்தஸ்துடன் பழகத் தெரிய வேண்டாமா? கிப்ஸ் இவற்றை யெல்லாம் கற்பதில் மூனைந் தான். பெரிய இடத்தினரின் தொடர்பு ஏற்பட்டது. வால்சிங்காம் குடும்பத் துடன் பழக்க மேற்பட்டது. அக்குடும் பத்தைச் சார்ந்த எலெனுடன் ஏற்பட் டிருந்த நேயம் முற்றியது. இருவரும் மணந்து கொள்வதென நிச்சயம் செய்து கொண்டனர். கிப்ஸ் கனவு லோகத்தில் சஞ்சரித்தான்.

கிப்ஸ் நியூரோம்னிக்குச் சென்றபோது ஆனியைப் பார்த்தான். பழைய நினைவு திரும்பி வந்தது. அவளை முத்தமிட்டான். எலென்மீது இருந்த காதல் தணிந்தது. எலெனை மணக்க நிச்சயம் செய்திருந்த போதிலும் ஆனியையே விரும்பினன். கனவு தெளிந்து தன் உண்மை நிலையை உணர்ந்தான்.

கிப்ஸ் லண்டன் நகரம் சென்றுன். விஞ் ஞானம் பயின்ற மாஸ்டர் மானின் தொடர்பு ஏற்பட்டது. கிப்ஸ் சோஷ லிஸ்ட் ஆனன். பெரிய சமூகத்தில் தோன்ற நேரிட்டது. ஆனல் பெரிய இடத்துத் தொடர்பு அவனுக்குச் சந் துஷ்டி தரவில்லை. எலெனைக் கண்டு தான் ஆனியைக் காதலிப்பதாகவும், அவளையே மணக்கப் போவதாகவும் தெரிவித்து விட் டான். திருமணம் நடந்தது. 2500 பவுன் செலவில் பெரிய வீடு கட்டினன். ஆனல் உயர்ந்த சமுகத்தினர் அவனைப் பிரஷ்டம் செய்தனர். ஆயினும் சிலர் வீட்டைத் தேடி வந்தனர். பட்டிக்காட்டுப் பெண் ணுன ஆனிக்கு, வந்தவர்களை உபசரிக்கத் தெரியவில்லை. அவர்களும் அவள் தோற் றத்தைக் கண்டு அவள் பணிப்பெண் என்று எண்ணிப் போய் விட்டனர். "ஐயோ, போயும் போயும் உன்னை மணந்தேனே!" என்று கணவன் மனம் நொந்தான். "ஆம், நான் உமக்குச் சரிநிகர் சமானமான மனைவியில்லை" என்று வருந்தினள் அவள்.

இங்ஙன மிருந்தபோது கிப்ஸ் வால்சிங் காம் தம்பியுடன் கொடுத்து வைத்திருந்த பணம் துணி வியாபாரத்தில் நஷ்ட மாய் விட்டது. பணத்துடன் அந்தஸ்தும் பதவியும் போய்விட்டது. கிப்ஸும், ஆனி யும் மனம் ஒன்றினர். பழைய தூய காதல் திரும்பியது. கிப்ஸ் புத்தகக் கடை ஒன்றை ஆரம்பித்தான். இதுவே 'கிப்ஸ்' என்னும் நாவலின் சாரம்.

போலி ஏழு வயதிலேயே தன்தாயை இழந்தான். பதினலு வயது வரையில் பள் ளியில் படித்தான். பிறகு ஜவுளிக் கடை யில் சிப்பந்தியானன். சிறிது காலத் திற்குப்பின் அதை விட்டான். பிறகு தகப்பனரும் காலமானர். போலிக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டது. அவ னுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. வேலை எதையும் தீவிரமாக முயன்று செய்யும் பழக்கம் அவனுக்கு அடியோடு ஏற்பட வில்லை.

தன் உறவினரான லார்ஸ்சின் குடும்பத் தினருடன் சிறிது காலம் நெருங்கிப் பழகி ஞன். அப்போதே மிரியாமைக் காதலித்து அவளை மணந்தான். பிஷ்போர்னில் கடை வைத்து 15 வருடம் வியாபாரம் செய்தான் வியாபாரம் ஓங்கவில்லை. அவனுக்குப் படிப்பில்லை, வாழ்க்கையில் திட்டமில்லை. தன் விவகாரத்தை நிர்வகிக்கும் திறன் அவனுக்கு அடியோடில்லை தன் வீட்டுக் காரன், தன் மனைவி. தன் சக வியாபாரி கள் ஆகியோர் அனைவருடனும் அவன் சண்டை யிட்டான். மனைவியையும் வெறுத்தான். அவளும் அவனைச் சோம் பேறியெனக் கருதி அசட்டை செய்தாள். தாம்பத்தியப் பொருத்த மில்லை.

இந்த நிலையில் கத்தியால் தொண்டையை அறுத்துக்கொண்டு உயிரைப் போக்கிக் கொள்ளக் கருதினன். மனைவி தவிக்கக் கூடாதென்று வீட்டைக் கொளுத்திப் பின்னர் சாக எண்ணினன். வீடு

கொளுத்தினுல் நெருப்பு இன்ஷியூரன்ஸ் பணம் அவளுக்குக் கிடைக்கும். அன்றியும் தீ பற்றி எரியும்போது மாண்டால், நெருப்பில் உயிரிழந்தானென்று ஆயுள் இன்ஷியூரன்ஸ் பணமும் அவளுக்குக் கிட்டும். அங்ஙனமே வீட்டைக்கொளுத்தினன். ஆனல் சாகத்துணியவில்லை. தீயை அணைக்க மற்றவருடன் முயன்ருன்.

பிறகு ஒருநாள் மனைவியைத் துறந்து வீட்டை விட்டு வெளியேறி "பாட்வெல் இன்" என்னும் சத்திரத்தில் வேலைக்க மர்ந்து காலட்சேபஞ் செய்தான். உடல் நலமடைந்தது. ஐந்து வருடங்கள் சென்றன.

பிறகு மனைவி என்ன கஷ்டப்படுகிருளோ என்ற கவலை யேற்பட்டது. அவள் மீது பச்சாதாப மடைந்து பிஷ்போர்ன் திரும்பினன். அவள் தன் சகோதரியுடன் தேயிலைப்பான ஒட்டலொன்று வைத்திருந்தாள். தன் கணவன் அணிந்திருந்த ஆடைகளுடன் ஓர் ஆள் உயிர் துறந்திருந்ததைக் கண்டவர்கள் அவன் போலியே எனக் கருதினர். ஆகவே பிரியாமுக்கு ஆயுள் இன்ஷியூரன்ஸ்பணம் கிடைத்தது. அதைக் கொண்டு இந்த வியாபாரத்தில் இறங்கினள். கணவன் அவ்வோட்டலுக்கு வந்தான். அவனைக் கண்டதும் மனைவி திடுக்கிட்டாள். "ஐயோ, இன்ஷியூரன்ஸ் பணத்தைத் திரும்பிக் கொடுக்க வேண்டியிருக்குமே!" என்றே அவள் கவலைப் பட்டாள். மனைவிதான் சௌக்கியமாக இருக்கிருளே என்று போலி அவ்விடதைத் விட்டகன்ருன். மீண்டும் "பாட்வெல் இன்"னுக்குச் சென்ருன். அங்கே வாழ்க்கையின் ரகசியங்களை அறிய போராடினன். தூய தெளிந்த வானமும் இயற்கையின் அமைதியும் அவன் உள்ளத்தில் அமைதி நிலவச் செய்தன. போலி அமைதியில் ஞான ஒளிபெற்ருன். இதுவே "போலியின் வரலாறு"

இந்நாவல்களை மூலத்தில் படிப்போர் அறிஞர் வெல்ஸின் கலைத்திறனையும், நகைச் சுவையையும், சாமான்ய மக்கள் பால் அவருக்கிருந்த ஆழ்ந்த அனுதாபத்தையும், உலகம் சீர்திருத்தமடைய வேண்டுமென்று அவருக்கிருந்த ஆர்வத்தையும் உணர்வர்.



பொறுமைத் தோணி

‘ராஜா’

கங்கு கரையில்லாமல் பெருகிப் போய்க் கொண்டிருக்கிறது வாழ்வாகிய நதிப் பிரவாகம். பொறுமைத் தோணியிலே, தன்னந் தனியாக எத்தனை நாளுக்குத் தான் வெறிச்சென்ற உள்ளத்துடன் மிதந்து கொண்டே இருப்பது? துடுப்பைத் தள்ளித் தள்ளிக் கைகளெல்லாம் அலுத்துப் போன நேரம். பயங்கரமான சுழலிலே தோணி கிடைத்துக் கொண்டு தத்தளிக்கிறது. அடி பாவி, சுழலுக்குத் தப்பித்துக் கொஞ்சம் ஒதுக்கிக் கொண்டு விடக் கூடாதா என்று ரொம்பவும் லேசாகக் கேட்டுத் தான் விடலாம்; ஆனால் அவள் என்ன செய்வாள்?

அவள் தான் சொர்ண காந்தி! தக தக வென்று ஒளி விட்டுக் கொண்டிருக்கும் தங்கக் குழம்பை முகந்து, கை தேர்ந்த சிற்பி ஒருவனால் வார்த்தெடுக்கப் பட்ட தங்கச் சிலை தான் அவள். உதய சந்திரனுடைய காந்தியைத் தொட்டு முகமெல்லாம் பூசி விட்டு, கண்களை வைக்க என்ன தான் சிரமப்பட்டிருப்பானோ பிரம்ம தேவன். கன்னங் கருங் கூந்தலை அள்ளி லேசாகச் சொருகிக் கொண்டு, இல்லையோ உண்டோ என்று சம்சயப் படக் கூடிய இடையை இரண்டாயிரம் துவட்டுத் துவட்டிக் கொண்டு வீதியிலே வந்து விட்டாலோ, காணக் கோடி கண்கள் வேண்டும்.

பத்தரை மாத்துத் தங்கத்தாலே செய்த நாணயம் தான். ஆனால் செல்லாக் காசாக இருக்கிறதே. விதியின் குறும்பு என்று சாதாரண ஜனங்கள் சொல்லிக் கொள்கிறார்களே; ஒரு சமயம் அதுவாய்த் தான் இருக்கவேண்டும்.

சொர்ண காந்தி பூங்கொம்பு மாதிரி பூத்துப் பொரிந்து கொண்டிருக்கிற காலத்திலே, அவளுடைய உயிரை யெல்லாம் அத்தை மகனான ரகுபதி மீது வைத்திருந்தாள். அவன் காலேஜில் படித்துக் கொண்டிருந்ததனாலே, காலேஜ் படிப்பு முடியும் வரை சொர்ண காந்தி பொறுமைத் தோணியிலே மிதந்து கொண்டே இருக்க வேண்டியவளாகிவிட்டாள்.

சொர்ணா, தாயுந் தகப்பனும் அற்ற குழந்தை. அவளுடைய சிறிய தாயாருடைய போஷிப்பிலே வளர்ந்து கொண்டிருந்தாள். அவளும் ஒரு விதவை. குழந்தை குட்டி இல்லாதவளாகையாலே சொர்ணத்தின் மேல் பூரா உயிரையும் வைத்து வளர்த்து வந்தாள்.

சொர்ணத்தின் தாயாருடைய ஆயிரம் ரூபாய் நகை நட்டும், ரொக்கம் இரண்டாயிரம் ரூபாயும் தான் இப்பொழுது அவளுடைய சொத்து. அதைச் சொர்ண காந்தி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளச் சுதந்தரம் கொடுத்திருந்தாள்.

ரகுபதி காலேஜில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய வீட்டிலே, கையிக்கு எட்டினால் வாயிக்கு எட்டாது; வாயிக்கெட்டினால் கையிக்கு எட்டாததுமான ரீதியிலே தான் சொத்து சுகம்.

அவன் எப்படியும் பி. ஏ. படித்து விட்டு வந்து விட வேண்டும், அவனையே கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் கையிலிருந்த ரூபாய் இரண்டாயிரத்தையும் ரகுபதி மனங் கோணாமல் செலவு செய்து விட விட்டு விட்டாள் சொர்ணா.

பி. ஏ. வும் முடிந்தது. ரகுபதியும் வீடு வந்து சேர்ந்தான். சொர்ண காந்தி உண்மையாகவே சொர்ண காந்தியாகி விட்டாள். ரகுபதியுடன் கூடி நடத்தும் இன்பகரமான இல்லறத்தை அடிக்கடி கற்பனை செய்து கொண்டு அவளுடைய உள்ளம் ஆனந்தத் தாண்டவம் செய்யும்.

விதி புஸ்ஸென்று பெரு மூச்சு விட்டுக் கொண்டு சீறி எழுந்து ஆடிற்று. அந்த மூச்சின் வேகத்திலே, தாகத்துக்காக உதட்டு வரைக்கும் கொண்டு போயிருந்த தண்ணீர்ச் செம்பைத் தட்டி விட்டுக் கீழே விழுக்காட்டியது போல், சொர்ணத்தின் வாழ்க்கை ஒரு தரம் புரண்டு விட்டது.

மிஞ்சியிருந்த நகைகளை யெல்லாம் புது மாதிரி தினுசாகச் செய்து கொண்டு வரப் புறப்பட்டுப் போன ரகுபதி போன மாதிரி தான். ஒரு மாதம் ஆகியும் திரும்பியே வரவில்லை.

இறக்கை முதிராததற்கு முன்னே — தனியே போய் இரை பொறுக்கச் சக்தி வராததற்கு முன்னே — தன்னந் தனியாய்த் தவிக்கவிட்டுச் சென்ற தாய்ப் பறவையை நினைத்து நினைத்துக் குஞ்சு என்ன புழுங்கு புழுங்குமோ அப்படிப் புழுங்கினுள் சொர்ணம்.

பெண்கள் மார்க்கட்டிலே பி. ஏ. மாப்பிள்ளைக்குத் தானு கிராக்கி கிடைக்காமல் போகிறது. கொழுத்த பணக்காரன் வீட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு ரகுபதி தனிக் குடித்தனம் வைத்துக் கொண்டதாக ஒரு வதந்தி சரியாக நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிறகு சொர்ணத்தின் காதுகளில் வந்து விழுந்தது.

கண்களில் இருக்கும் ஒளியை யாரோ ஊதி அவித்து விட்டது போல் இருந்தது சொர்ணத்திற்கு. பிரவாகத்தின் முதற் சுழலிலே, அவளுடைய பொறுமைத் தோணி பட்டுக் கொண்டது. கொந்தளிப்பின் ரௌத்ராகாரம் தோணியை அலாக்காகத் தூக்கி அடிக்கப் பார்த்தது. சொர்ணம் மட்டும் திக் பிரமை பிடித்தவள் போல் "உம்" மென்று உட்கார்ந்திருப்பாளேயானல், அந்த முதற் சுழலிலேயே கணக்கை முடித்துக் கொண்டிருந்திருப்பாள். அவள் அப்படிச் செய்யவில்லை. சாதுர்யமாக நடந்து கொண்டாள்.

தெய்வம் நின்று தான் காரியத்தைச் சாதிக்கும். பெண்ணும் அப்படித்தான். சாதகமான காற்று போதுமான வரை அடிக்கும் வரையிலும், தூற்ற வேண்டியவற்றையெல்லாம் மழையிலேயே கட்டிக் கொண்டு காத்திருப்பதிலே, தெய்வமுங் கூடத்தான் அவளுக்குத் தோற்றுக வேண்டும்.

பெண்ணின் மனப்புண்ணை ஆற்றுவதற்குக் கால வைத்தியனிடம் கூட மருந்து கிடையாது. நாட்கள் தான் பல சென்று விட்டனவே யொழிய, சொர்ணத்தின் மனது ஆறவில்லை. பூமாதேவியின் கர்ப்ப கோடியிலே கொந்தளிப்பு எப்படி அடங்கிப் போயிருக்கிறதோ அப்படித்தான் அவளுடைய மனக் கொந்தளிப்பும் அடங்கிப் போயிருந்தது. சொர்ணமும் அவளுடைய சிறிய தாயாரும் கூலி வேலை செய்தால் தான் அன்றுடும் அடுப்பிலே உலை ஏற்றி வைக்கலாம். அவள் உடலிலே இருந்த காந்தியெல்லாம் பச்சுப் பச்சென்று கால வெள்ளத்தில் கரைந்து போன பிறகு, துருப்பிடித்த தங்கக் கட்டி போல உலக வீதியில் அலைந்து கொண்டிருந்தாள்.

அநேக இடத்திலிருந்து பெண் பார்க்க வந்தவர்களுக் கெல்லாம் சொர்ணம் செல்லாக் காசாகவே போய் விட்டாள். ருது லக்னம் மோசம் என்று எப்படியோ ஒரு கதை முளைத்து வருகிறவர்களையெல்லாம் திருப்பித் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தது.

சொர்ணத்திற்குக் கலியாணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருந்து காலத்தை ஓட்டி விட்டால் என்ன என்றுங் கூடப் பல தடவை தோன்றுவதுண்டு.

எந்த பாரத்தை வேண்டுமானுலும் பொறுத்துக் கொண்டு விடலாம். உலக ஏச்சு என்கிற பாரத்தை அதிலும் ஒரு பெண்ணுவா சுமந்து கொண்டு நிம்மதியாய் இருக்க முடியப் போகிறது?

கடைசி கடைசியாக ஊர்சுத்தி ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். என்னமோ கல்யாணம் ஆகாத ஒரு குறை தான் முடிந்ததே யொழிய இன்னும் பன் மடங்கான சஞ்சலங்கள், சொர்ணத்தை வரவேற்று வைத்துக் கொள்ளப் புருஷனுடைய வீட்டில் காத்துக் கொண்டிருந்தன.

ஆள் மட்டும் வாட்ட சாட்டமே ஒழிய, மற்றைய விஷயங்களில் சுத்த ஊதாரியாக இருந்தான். சொர்ணம் தான் அவனுக்குச் சம்பாதித்துப் போட வேண்டும். வேளா வேளைக்கு வந்து சாப்பிட்டு விட்டு எங்கேயோ மேயப் போய் விடுவான்.

சொர்ணுவுக்கு முதல் முதலில் அவனை எப்படியும் திருத்தி விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. வந்த ஒரு வாரத்தில் அதையும் கை விட்டு விட்டாள். நிம்மதிக்கு மார்க்கம் இந்த ஜன்மத்திலே இல்லை என்ற ரகசியம் இப்பொழுது அவளுக்குத்

துலாம்பரமாகத் தெரிந்துவிட்டது. அவனுக்கும் ஏதோ கல்யாணம் இல்லையென்ற ஒரே குறையை நிவர்த்தி செய்து கொள்ளவே தன்னை மணந்து கொண்டான் என்ற சமாச்சாரமும் அப்பொழுது தான் அவளுக்குத் தெரிய வந்தது.

மனப் பொருத்தத்தில் இருந்து மங்களப் பொருத்தம் வரையிலும் யாதொன்றும் ஒத்துக் கொள்ளாமல் போனாலும் இந்த ஒரு விஷயத்திலேயாகிலும் அவனுக்கும் அவளுக்கும் பொருத்தம் ஒன்றைச் செய்து வைத்தாரே, அதற்காகவாவது கடவுளுக்கு ஆயிரம் வணக்கம் செலுத்த வேண்டும் அவள்.

தன்னுடைய புருஷன் இப்படி ஊதாரியாகத் திரிந்து வருவது ஒரு விஷயத்தில் அவளுக்குச் சந்தோஷமாகவே இருந்தது. ஏனென்றால் அவனுடன் உடல் சம்பந்தம் வைத்துக்கொள்ள ஒரு சிறிதும் அவளுக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. அவளுடைய சந்ததி சூன்யமாகவே போய் விட வேண்டும் என்பது தான் அவள் அவா; அதற்காக புருஷன் போக்கிலேயே விட்டு விட்டு, நிம்மதியில்லாத பொறுமைத் தோணியில் மீண்டும் துடுப்பைப் போட்டுப் பயங்கரமான பிரயாணத்தை மேற்கொண்டு தொடர ஆரம்பித்து விட்டாள்.

தோணியிலும் இரண்டொரு ஆணிகள் கழன்று விட்டன. அதைப் பற்றி அவளுக்கு லக்ஷியமே இல்லை. எக்கேடு கெட்டுப் போனாலும் சரியே என்பது தான் அவள் முடிவு. அதற்குப் பல காரணங்கள் புருஷன் வீட்டிலே நிகழுவதற்கு ஆரம்பித்தன.

பத்துப் பதினைந்து நாள் உடலுக்கு அசௌகரியமாய்ப் படுத்துக் கொண்டாள். சதா அரித்துக் கொண்டிருந்த மன வேதனையும் நோயுமாகச் சேர்ந்து அவளை எலும்புக் கூடாக்கி விட்டுப் போய் விட்டது. பெண் சாதிக்குச் சம்பாதித்துப் போடக் கையாலாகா விட்டாலும் அவளுடைய புருஷனுக்கு வீம்புக்கும் ரோசத்திற்கும் குறைச்சலே இல்லை. அந்தப் பதினைந்து நாளாக அவனும் வந்து சொர்ணத்தைப் பார்க்கவில்லை அல்லது அவளுடைய சிறிய தாயாருக்கும் சமாச்சாரம் கொடுக்கவில்லை.

இன்னும் இந்த உலகத்திலே அனுபவிக்கிறதற்குப் பாக்கி சாக்கி நிறைய இருக்கும் பொழுது அதற்குள்ளே எமன் அவளை அள்ளிக் கொண்டு போய் விட அவன் என்ன அவ்வளவு புத்தியில்லாதவனா?

பக்கத்து வீட்டுக்காரர்களுடைய தயவினாலே மீண்டும் சீர்கெட்டிருந்த பொறுமைத் தோணியை சரி பார்த்துக் கொண்டு துடுப்பை இழுக்க ஆரம்பித்தாள்.

கொஞ்சப் நடமாடச் சத்து வந்தவுடனே புருஷனிடப் பூசைகள் வாங்கிக் கொள்வதிலே ஒரு நாளையுங் கூடத் தவற விடமாட்டாள். ஒரு காரணமும் இல்லாமல் சக்கை வெளுத்து விடுவான். சொர்ணம் ஏன் என்று கூடப் பேசமாட்டாள். அவனுக்காக கை ஓய்ந்து

போனால் தான் விட்டு விட்டுப் போய் விடுவான்.

ஒரு நாள் சீட்டாடி விட்டு நட்ட நடு ஜாமத்திலே வீட்டுக்கு வந்த பொழுது அவள் தூங்கிக் கொண்டிருந்த குற்றத்திற் காகத் தலைமயிரைப் பிடித்து தூக்கி வீதி யிலே விட்டெறிந்து விட்டுப் போய் விட் டான். கால் வேறு அதனால் சுளுக்கிக் கொண்டது. அன்னப் பக்ஷியும் கூட நாணும்படியாக நடை நடக்கக் கற்றுக் கொடுத்த அதே பிரமன் தான், இன்று நொண்டி நடையையும் நடக்கக் கற்றுக் கொடுத்திருந்தான்.

வாழ்வுப் பாதை பயங்கரமான பிரதே சத்தில் நுழைந்து விட்டது. இது வரைக் கும் அதற்குக் கொஞ்சம் நிதான வேகம் இருந்த தென்றே சொல்ல வேண்டும். இனி அப்படி இல்லை; பாய்ந்தும் குதித் தும் வீழ்ந்தும் கர்ஜித்தும் தான் செல்ல வேண்டும்; சொர்ணத்தினுடைய பொறு மைத் தோணியும் அதன் வழியாகத்தானே போயாக வேண்டும்.

ஒரு நாள், கருகும்மென்று இருள் கௌவிக் கொண்டு நாலு திசையும் காலி றங்கிச் சரமாரியாக மழை கொட்டிக் கொண்டிருந்தது. இடியும் மின்னலும், பெரிய சண்டமாருதப் புயலும் ஒன்றுக் கொன்று போட்டி போட்டுக் கொண்டு உலகத்தைத் தீர்த்துக் கட்டி விடுவதைப் போன்ற பாவனையில் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன.

சொர்ணத்தின் வீட்டில் அன்று சாப் பாட்டுக்கில்லை. சும்மாவே மொடக்கிக் கொண்டாள். அவள் மனதில் இருந்த வேதனையெல்லாம் ஒன்றே ஒன்று தான். தன்னுடைய புருஷன் சாப்பாட்டிற்கு வந்து விடக் கூடாது என்பது தான். ஆனால் அவள் இது நாள் வரையிலும் நினைத்தது நினைத்தது போலவே முடிந் திருக்கிறது. மழையோடு மழையாக நனைந்து கொண்டே அவனும் வந்து விட் டான்.

சொர்ணத்திற்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. மறு நிமிஷம் சட சட வென்று மழை போலப் பொழிந் தான் தடியை எடுத்துக் கொண்டு. வீட் டைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு அவளை எங்கேயோ போய்த் தொலையுமாறு வெளியே பிடித்துத் தள்ளி விட்டுப் போய் விட்டான்.

கிளிக்குக் கூண்டிலிருந்து விடுதலை கிடைத்தது. ஆனால் இறக்கைகளையெல் லாம் ஒட்ட வெட்டியிருக்கிறதே. விடு தலையின் ஆனந்தத்தை எப்படித்தான் அனுபவிக்கப் போகிறதோ அந்தப் பறவை!

மழையோடு மழையாக நனைந்து கொண்டு, அந்தக் கொடிய அந்தகாரத் திலே இடை இடையே தோன்றும் மின் னல் வெளிச்சத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு சொர்ண ஊரை விட்டு வெகு தூரம் போய் விட்டாள். மனம் போன போக்கில். ஆனால் அவள் மனதில் ஒரு திகில் இருந்தது. மீண்டும் அந்த ராக்ஷசன் பின் தொடர்ந்து வந்து தன்னைப் பற்றிக் கொண்டு விடக் கூடாதென்பது தான்.

பணக்காரன் வீட்டு ருசி ரகுபதிக்குச் சீக்கிரம் சப்பென்று போனதிலே யாதொரு அதிசயமும் இல்லை. தன்னு டைய சுதந்தரத்தை யெல்லாம் இழந்து மாமனார் வீட்டுக் கைப் பொம்மையாக, எத்தனை நாட்களுக்குத் தான் ஒரு மனித உணர்ச்சி கொண்டவன் ஆடிக் கொண் டிருக்க முடியும்.

அவனுடைய மனைவியும் அவனை அயலா னைப் பார்ப்பது போலப் பார்க்க ஆரம் பித்து விட்டாள். சௌரிய சௌகரி யங்களை யெல்லாம், அவனுடைய நினைவு என்பது ஒரு சிறிதும் இல்லாமல், அவள் அனுபவிப்பதைப் பார்த்த பொழுது தான், உண்மையிலேயே ரகுபதிக்கு மனம் மாறிப் போய்க் காஷாயம் வாங் கிக் கொள்ளலாமா என்றுங் கூடத் துணிந்து விட்டான்.

சொர்ணத்தின் அன்பு அவனை நம்பினது — அவன் அவளுக்குத் துரோகம் செய் தது ஆகிய பழைய பாடங்களை எல்லாம் நினைத்துப் பார்த்த பொழுது உண்மை யிலேயே அவனுக்கு அழுகை வராமல் இல்லை.

தூவி வைத்திருந்த சில பணத் தானியங் களை மேய்ந்து கொண்டே போய் பணக் கார வேடனுடைய வலையிலே மாட்டிக் கொண்டு, ஜன்மக் கைதி ஆகிவிட்ட நிலையை நினைக்கும் பொழுது மனம் புழுங் கியே போய் விடுவான்.

எதற்கும் ஒரு முடிவு உண்டு. எப்படியோ கூண்டை உடைத்துக் கொண்டு லக்ஷியம் இல்லாத பிரயாணத்தை மனம் போன போக்கிலே செய்ய ஆரம்பித்தான். ஆனல் அவன் மனதில் கடைசி கடைசியாகத் தான் உருப்பட்டுப் போவதற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சொர்ணத்தை, ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டான்.

ராத்திரி — ஊரெல்லாம் சுளுவடங்கி வெகு நேரம் ஆன பின்பு சொர்ணுவின் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தான். அவனைப் பார்த்தவுடன், அவிந்திருந்த அவளுடைய கண்களுக்கு மீண்டும் ஒளி வந்தது போல் ஆனந்தப் பட்டாள். ஆனல் மறு நிமிஷமே அந்த ஒளியும் அவிந்து போய் பழைய அந்தகியாகவே போய் விட்டாள், சொர்ணு.

அந்த விருந்தாளி ரகுபதி தான். அவன் கண்களை அவனல் நம்ப முடியவில்லை. பழைய சொர்ண காந்தி யெங்கே — இப்போது பார்க்கும் எலும்புக் கூடு எங்கே. அவளுடைய கழுத்திலே சுமங்கலத்துக்குச் சாக்ஷி சொல்வது போன்ற, மங்கல நாணும் ஒன்றிருப்பதைப் பார்த்து இன்னும், அதிகமாக துக்கம் பீறி எழுந்து நெஞ்சை அடைத்துக் கொள்ள, ஓ என்று வாய் விட்டழுதான். சொர்ணத்திற்கும் தன்னுடைய கண்களிலே தாரை தாரையாய்க் கண்ணீர் வடிப்பதோடல்லாமல் வேறு ஒரு வார்த்தை கூடப் பேச வாயெழவில்லை; என்றாலும் நெஞ்சைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு, "அத்தான் என் விதி வழியே நான் போகிறேன்; உங்கள் விதி வழியே நீங்கள் போகிறீர்கள். எல்லாருமே ஒரே பாதையில் போவதாயிருந்தால் விதியை மதிப்பவர்கள் யார்!" என்றுள் குழைந்து போய்.

ரகுபதிக்கு இன்னும் துக்க அலைகள் சாரிக் கொண்டு கிளம்ப, "சொர்ணு இந்த துரோகிக்கு என்ன தண்டனை தான் கிடைக்கக் கூடாது. என்னை இந்தக் கடைசித் தடவை மன்னித்து விடு — இன்னெரு ஜன்மத்திலே ஆகிலும் உன்னேடு......" என்று வார்த்தையை முடிக்க முடியாமல் திணறினன்.

"அத்தான் வேண்டாம் — எந்த ஜன்மத்திலும் வேண்டாம்! மனிதப் பிறவியே துன்பகரமானது தான் — என்னைப் பற்றிய எண்ணத்தை இந்த நிமிஷத்திலிருந்து விட்டு விட்டு நிம்மதியாய்ப் போய் வாழுங்கள் — கடவுள் உங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே சொர்ணம் எங்கேயோ வெளியே செல்லத் தலைப்பட்டாள்.

எனக்கேது நிம்மதி... நிம்மதியற்ற பேயாய் அலை அலை என்று அலைந்து என் வாழ் நாளைத் தீர்த்துக் கட்டப் போகிறேன்" என்று ரகுபதியும் சொல்லிக் கொண்டு அதே அந்தகாரத்தில் மறைந்தான்.

இத்தனை நாளும் மனதிற்குள் வைத்திருந்த எண்ணமும் கை கூடியாகி விட்டது சொர்ணத்திற்கு. அது தான் ரகுபதியைப் பார்க்க வேண்டும் என்பது. அதற்காகத்தான் பொறுமைத் தோணியைக் கட்டிக் கொண்டு படாத அல்லல்களுக்கிடையிலும் மிதந்து கொண்டே இருந்தாள். இது வரையிலும் அவளுக்குக் கைகளே ஓயவில்லை, ஜீவனப் பிரவாகத்தின் அந்தக் கடைசிச் சுழலுக்குள் தோணி வந்ததோ இல்லையோ, துடுப்பைப் பிடிக்கக் கூட அவளுக்குச் சக்தியே போத வில்லை — மனம் இருந்தால் தானே. பிரவாகம் உக்ரதண்டமாய் தோணியைத் தள்ளிக் கொண்டு போய் பாறையில் மோதி ஒரு சுழி சுழித்தது. இது வரையிலும் சொர்ணத்திற்கு உதவி வந்த பொறுமைத் தோணி உடைந்தது. அது உடைந்ததற்குச் சாதகமாகவே சொர்ணுவும் ஒரு ஓரத்திலே பாதங்களைக் கொண்டு சடக்கென்று மெட்டி, அதைப் பிரவாகத்தில் மூழ்கடித்து விட்டாள்.

சொர்ணு, அந்தக் காரிருளில் காவிரி ஆற்றங் கரைக்கு வந்து சேர்ந்தாள். அந்த இடத்திலே காவேரி வெகு ஆழத்தில் பயங்கரமாக விழுந்து கொண்டிருந்தாள். சரியாகப் பாறையின் உச்சியில் ஏறி வெகு ஆழத்தில் காவேரி சிரித்துக் கொண்டு நுரைக்கிற நுரைச் சத்தத்தையே கேட்டுக் கொண்டு நின்றுள்.

எங்கிருந்தோ இருட்டைக் கிழித்துக் கொண்டு "அது யார் அங்கே நிற்பது"

என்ற குரல் சொர்ணுவின் காதுகளில் விழுந்தது.

"நான் தான் அத்தான்" என்றுள் உரத்த குரலில் சொர்ணு. "ஐயோ சொர்ணு, இந்த உலகம் மஹாப் பெரியது, நீயும் நானும் இன்னும் கொஞ்ச நாள் வாழக் கூடாதா!" என்றது மீண்டும் அந்தத் தொனி.

"அது தான் இல்லை அத்தான். சொர்ணு உன்னுடைய கைகளுக்கும் கிட்ட மாட்டாள். இனி உலகத்திலே யாருடைய கைகளுக்குமே தான் கிட்டமாட்டாள். அவள் எங்கே இன்னொரு தரம் ஜன்மம் எடுத்து வரப் போகிருள்" என்று சொல்லிக் கொண்டே குரலை அடக்கிக் கொண்டாள்.

மறுபடியும் "சொர்ணு சொர்ணு" என்று கத்திக் கொண்டே ஓடினுன் ரகுபதி. ஆனல் சொர்ணு கிடைத்தால் தானே.

உலக வாதனைகளால் சதா அடித்து நொருக்கப்பட்டிருந்த சொர்ணு, காவேரிப் பெண்ணல் அணைத்துக் கொள்ளப் பட்டாள்.

யாரது?

[பெ. தூரன்]

யாரோ என் அகக் கதவைத் தட்டுகிருர்கள்.
யாரது?
யார் என்று கேட்டால் பதில் வருவதில்லை.
நானே கதவைத் திறந்து பார்ப்பதில்லை.
களியாட்டத்தை விட்டுப் போய்ப் பார்க்க மனமில்லை.
உண்டும்
குடித்தும்
ஆடியும்
பொழுதைக் கழிக்கிறேன்!
கதவை யாரோ இடையிடையே தட்டும் சப்தம் மட்டும்
ஓய்வதில்லை.
திடுக்கிட்டு ஒரு விஞடி நின்று பார்க்கிறேன்.
யாரது என்று கேட்கிறேன்.
பதில் வருவதில்லை.
நானும் கதவைத் திறப்பதில்லை.
மறுபடியும் எனது கேளிக்கைகளில் முழுகி விடு
கிறேன்.
இடையிடையே யாரோ பொறுமையாய்க் கதவைத்
தட்டுகிருர்கள்.
ஆனல் என் களியாட்டங்களை விட்டுப்போய்க் கதவைத்
திறந்து பார்க்க எனக்கு மனமில்லை.

பாப்பா கதை:

பசுங்கிளி

['தேவிகா']

ஒரு ஆலமரத்தின் பொந்தில் ஆணும் பெண்ணும் குஞ்சுமாக மூன்று கிளி கள் இருந்தன. அப்பாக் கிளி இரை தேடச் சென்று விட்டால், அம்மாக் கிளி கிளிப் பிள்ளைக்குக் காவலாக இருக்கும்; அம்மாக் கிளி இரை தேடச் சென்று விட்டால், அப்பாக் கிளி காவலாக இருக்கும். இப்படி அப்பாக் கிளியும் அம்மாக் கிளியும் கிளிப் பிள்ளையைக் கண்ணும் கருத்து மாக வளர்த்து வந்தன.

ஒரு நாள், வழக்கம் போல் அப்பாக் கிளி இரை தேடச் சென்றது. என்ன காரணமோ தெரியவில்லை. வர வேண்டிய நேரத்திற்குத் திரும்பி வரவே யில்லை. தாய்க் கிளிக்கு இது ரொம்ப வருத்தமா யிருந்தது. வெகு நேரம் பொறுத்துப் பார்த்தது. அப் பொழுதும் அப்பாக் கிளி திரும்பி வரவில்லை! அப்பாக் கிளிக்கு ஏதோ ஆபத்திருக்கும் போலிருக்கிறது. போய்ப் பார்த்து விட்டு வர வேண்டு மென்று துடித்தது. அதே சம யத்தில், ஒன்றுமறியாத கிளிப் பிள்ளையைத் தனியே எப்படி விட்டுச் செல்வது? என்று தவித்தது. கடைசி யாக, கிளிப் பிள்ளையைத் தனியே விட்டு விட்டு, அப்பாக் கிளியைப் போய்ப் பார்த்துத்தான் வர வேண் டும் என்று தீர்மானம் செய்தது

உடனே கிளிப் பிள்ளையிடம், "கூட்டிலேயேஇரு; வெளியேபோகா தே. வேடர்கள் பிடித்துக் கொள்வார் கள். ஜாக்கிரதை!" என்று எச்ச ரிக்கை செய்து விட்டுப் புறப்பட்டது. அம்மாக் கிளி போய்க் கொஞ்ச நேரமிருக்கும். கிளிப் பிள்ளைக்கு கூட்டில் அடைந்து கிடப்பது கஷ் டமா யிருந்தது. வெளியுலகத்தைப் பார்க்கவேண்டும் என்று அது ஆசைப் பட்டது. தானிருந்த கூட்டையும் மரத் தையும் விட்டுச் சற்று தூரத்திலிருந்த இன்னொரு ஆலமரத்திற்குப் பறந்தது.

இதனை ஒரு வேடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், கிளிப் பிள்ளை வேடனைப் பார்க்கவில்லை! அம்பு ஒன்று கிளிப் பிள்ளையை நோக்கிப் பறந்தது. உயிர் தப்ப கிளிப் பிள்ளை பறந்தும், இறக்கையில் அம்பு பாய்ந்து விட்டது. வலி பொறுக்க முடியாமல் கிளிப் பிள்ளை கீழே விழுந்து விட்டது. உடனே, வேடன் கிளிப் பிள்ளையை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போய் பக்கத்திலி ருந்த பட்டணத்தில் ஒரு சீமாட்டிக்கு விற்று விட்டான். அவள் அந்தக் கிளிப் பிள்ளையைக் கூண்டில் அடை த்து வளர்த்து வந்தாள். நல்ல உணவு கிடைத்த போதிலும், கிளிப் பிள்ளைக்கு 'கூண்டு வாழ்க்கை' பிடிக்கவில்லை. 'தாய் சொல்லைத் தட்டியதால் தானே தனக்கு இந்தக் கதி ஏற்பட்டு விட்டது' என்று தன் னையே நொந்து கொண்டது.

என்றாவது ஒருநாள் தனக்கு விடு தலை கிடைத்து விட்டால் மேற் கொண்டு தன் அன்னையின் பேச்சை எக்காலத்திலும் தட்டக் கூடாது என்று அக் கிளிப்பிள்ளை தனக்குள் முடிவு செய்து கொண்டது.

ஒருநாள் சீமாட்டி கிளிப்பிள்ளையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டி ருந்த போது அது படபட வென்று தன் இறக்கைகளை அடித்துக் கொண்டு பறந்து, தன் தாய் தந்தைய ரிடம் வெகு சிரமத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தது. அன்று முதல் கிளிப்பிள்ளை தன் பெற்றோர் சொல்லைத் தட்டி எந்தக் காரியமும் செய்வதில்லை.

நினைவுச் சின்னம்

அம்பலவாணன்

அமரகவி பாரதிக்கு, அவர் பிறந்த எட்டைய புரத்திலே ஒரு நினைவுச் சின்னம் நிறுவ வேண்டும் என்ற எண்ணம், இரண்டாண்டுகளுக்கு முன்பே அரும்பியது. சரியான தருணம் வராத காரணத்தால் அந்த அரும்பு வெகு நாள் வரை மலராமலும், அதன் நறுமணம் திசையெல்லாம் பரவாமலும் இருந்தது. எப்படியாவது அந்த அரும்பை மலரவைத்துவிட வேண்டும் என்று பலர் முயற்சித்தார்கள். அந்த முயற்சிக்குப் பலரது ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைத்தன. கடைசியாக வேளை வந்தது! எண்ணற்ற தமிழர்களின் அகமும், முகமும் மலர, கண்கவரும் ஒரு அழகான மலராக மலர்ந்தது அந்த அரும்பு. அதன் நறுமணம் எட்டுத்திசைகளிலும் பரவ ஆரம்பித்து விட்டது. தமிழ்ப் பெருமக்களின் அமோக ஆதரவினாலும், உதவியினாலும் எட்டைய புரத்திலே மகாகவி சுப்ரமண்ய பாரதியாரின் நினைவுச் சின்னமாய் நின்று, அவர் புகழ் மணம் பரப்பும் மணிமண்டப மலர்தான் அது!

"பாரதி மண்டபத் திறப்புவிழா அக்டோபர் மாதம் 13ம் தேதியன்று நடைபெறுகிறது. ராஜாஜி அவர்கள் மண்டபத்தைத் திறந்து வைக்கிறார்கள். வாருங்கள்; வந்து பாருங்கள்; களிகூறுங்கள்" என்றெல்லாம் விதவிதமாக அழைத்த வரவேற்புக் கமிட்டியாரின் அழைப்புக்கிணங்க 11ம் தேதி மாலை நானும் நண்பர்கள் சிலரும் கோவையிலிருந்து புறப்பட்டோம். ஆரம்பத்தில் எனக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது; நாம் ஒரு ஏழெட்டுப் பேர்தானே போகிறோம் கோவையிலிருந்து! பாரதி பக்தர்களின் தொகை கோவையில் இதைப்போல் பல மடங்கு ஆயிற்றே என்றுதான்! ஆனால் ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் வண்டி நின்றபொழுது கோவை நண்பர்கள் ஒவ்வொருவராக தட்டுப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோரது வாய்களும் 'பாரதி மண்டபம், பாரதி மண்டபம்' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தன என்பது அவர்களுடன் பேச்சுக் கொடுத்த

ஒவ்வொருவருக்கும் தெரிந்து போயிற்று. சிறு துளியாக இருந்த நண்பர்கள் கடைசியில் கோவில்பட்டியை நெருங்க நெருங்க பெருவெள்ளமாகி விட்டார்கள். வழக்கத்திற்கு அதிகமான உற்சாகத்தினாலோ அல்லது எஞ்ஜினில் ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டதினாலோ ரயில் வழக்கத்திற்கு அதிகமான வேகத்துடன் வந்து கோவில்பட்டி ஸ்டேஷனில் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்றது.

வண்டியை விட்டு இறங்கி முன்னோக்கி நடந்தோம். அங்கங்கே தூய வெள்ளை உடையணிந்த தொண்டர்கள் ஒழுங்காக நின்று கொண்டு போக்குவரத்தை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்கள்.

கோவில்பட்டியில்:

கோவில்பட்டி ஸ்டேஷன் அன்று ஒரே கலகலப்பாக இருந்தது. எட்டையபுரம் மகாராஜா மாலையும் கையுமாய் நின்றார் ராஜாஜிக்கு மாலை சூட்ட. ஒரு புறம் தொண்டர்கள் வரிசையாக அணிவகுத்து நின்றார்கள். மற்றோர்புறம் ஸ்பெஷல் போலீசார் தங்கள் தர்பாரில் நின்றார்கள். பஸ்களும், லாரிகளும், வண்டிகளும், வாடகைக்கார்களும் அணிவகுத்து நின்றன. ஜனங்கள்கூட ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு தினுசாக நின்றிருந்தார்கள். எல்லாம் அடுத்தாற்போல் வர விருந்த ஸ்பெஷல் ரயிலில் வரும் மேற்கு வங்க கவர்னர் ராஜாஜியையும், மற்றவர்களையும் வரவேற்கத்தான்!

"சரி, வரவேற்பு வைபவத்தைப் பிறகு பார்க்கலாம்; முதலில் 'குளிக்கோணும்' என்றேன். தொண்டர் படையைச் சேர்ந்த நண்பர் ஒருவர் "அதற்கு நானாச்சு வாருங்கள்" என்றார். படை எடுத்தோம் அந்த நண்பர் வீட்டுக்கு. அருகிலே இருந்த ஒரு பெரிய கிணற்றுக்கு இட்டுச் சென்றார் நண்பர். இரவெல்லாம் கண் விழித்து வந்த சிரமம்தீர ஆனந்தமாய்க் குளித்தோம். கையில் கொண்டு வந்த துணிமணியை வைக்க அந்த நண்பர் வீட்டிற்கு மீண்டும் சென்றபோது சூடான, திக்கான காப்பி கிடைத்தது. இரவெல்லாம் கண் விழித்ததினால் ஏகப்பட்ட பசியாய் இருந்தது. எப்பொழுது காப்பி சாப்பிடுவோம் என்றிருந்த எங்கள் மனமறிந்து அந்த அதிகாலை வேளையில் காப்பி தந்த நண்பரையும், அவர் வீட்டாரையும் 'வாழ்க நீவிர்!' என்று மனமாற வாழ்த்தினோம்!

"வேளை வந்து விட்டது! புறப்படுங்கள் கோவில்பட்டி ஸ்டேஷனுக்கு" என்று எல்லோரையும் கிளப்பிக்கொண்டு சென்றார் நண்பர் புதிதாகப் போட்ட ராஜபாட்டை வழியாக. அங்குலத்திற்கு ஒரு குழியும், அடிக்கொரு மேடும், கஜத்துக்கொரு பள்ளமுமாக இருந்த அந்த ரஸ்தா, கனம் பக்தவத்ஸலம் அவர்களின் பெருவாரியான முயற்சியால் ஒரு அருமையான ராஜபாட்டையாகியிருக்கிறது என்று சொன்னார்கள். இல்லாவிட்டால் கோவில் பட்டியிலிருந்து எட்டு மைல் தூரத்தில் இருந்த எட்டையபுரத்திற்கு அன்று நான்கு நிமிஷத்திற்கு ஒன்று

'ஸ்பெஷல்' போலீஸாக்கும் நாங்கள்!

தொண்டர் படை அணிவகுப்பு

வீதம் போய் வந்து கொண்டிருந்த பஸ்களும், லாரிகளும், கார்களும், வண்டிகளும் ஒழுங்காக — உருப்படியாகப் போய் வந்திருக்க முடியுமா? எப்படியோ "நெல்லுக்கிரைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமாம்" என்றபடி பாரதி மண்டபத் திறப்பு விழாவையொட்டியாவது தங்களுக்கு எட்டு மைல் நீளமுள்ள ஒரு பெரிய ரஸ்தா ஏற்பட வழி பிறந்ததே என்பதில் எட்டையபுர வாசிகளுக்கு ஒரு பெரிய திருப்தி. அவர்கள் பாரதியாரை மறக்கலாம்; பாரதி மண்டபத்தையும்கூட மறந்து விடலாம்; ஆனால் அதன் காரணமாக கனம் பக்தவத்ஸலத்தின் முயற்சியால் போடப்பட்ட ராஜபாட்டையைமட்டும் அவர்கள் மறக்கவே முடியாது.

அந்தப் புதிய ராஜபாட்டையிலே ராஜ நடை நடந்து கோவில்பட்டி ஸ்டேஷனுக்குச் சென்றோம். நாங்கள் போவதற்கும் பாரதி ஸ்பெஷல் ரயில் வருவதற்கும் சரியாக இருந்தது. வெளியே இருந்தவர்கள் – சில காமிராக்காரர்கள் உட்பட – ஸ்டேஷனுக்கு உள்ளே சென்று வரவேற்பு வைபவத்தைப் பார்க்க முடியாமல் திணற சிலர் வண்டியின் மேலேறி பிரபலஸ்தர்களைப் புகைப்படம் பிடிக்க, சிலர் ராஜாஜி இருந்த ஸ்பெஷல் பெட்டியைத் தேடிக் கொண்டு இங்கும் அங்கும் ஓட, இன்னும் சிலர் தொண்டர் படையையும், விசேஷ போலீஸ் ஜரூரையும் பார்த்து விழிக்க, ராஜாஜியும், மந்திரிகளும் வண்டியிலிருந்து மளமளவென்று இறங்கி நடந்து சென்று காரில் ஏறி எட்டையபுரம் சென்றார்கள்.

அருகிலிருந்த நண்பரைப் பார்த்து "நண்பா, எழுவாய். இனி இங்கிருப்பதில் பயனில்லை. நாம் இனி இங்கிருந்து செயப்படுபொருள் யாது?" என்றேன். என் கருத்தை நண்பர் ஏகமானதாக ஆதரித்தார். பஸ் இருந்த பக்கம் நோக்கி நடந்தோம். சற்று முன் அணிவகுத்து நெடுக நின்றிருந்த பஸ்களில் பெரும்பாலானவை இப்போது காணோம். இருந்த இரண்டொரு பஸ்களில் ஏற ஏகப்பட்ட அடிதடியாயும், நெருக்கடியாயும் இருந்தது. நான்கு நிமிஷத்திற்கு ஒரு பஸ் என்று விட்டும்கூட காலையில் பஸ் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. எழுத்தாளர்களுக்கென்று ஏதாவது பஸ் ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று விசாரித்ததில் திருப்திகரமான பதில் கிடைத்தது. ஒரு பஸ் அப்பொழுதுதான் வந்தது. அதில் சிரமமில்லாமல் ஏறிக் கொண்டு எட்டையபுரம் சென்றோம். வழி நெடுக அங்கங்கே ஒரு பர்லாங்குக்கு ஒருவர் வீதம் போலீஸ் பாரா நின்றதும், இடையிடையே வரவேற்பு வளைவுகள் வரவேற்றதும் ஒரு தனி அழகாய்த்தான் இருந்தன.

எட்டையபுரத்தில்:

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிவரையில் குறிப்பிடக்கூடிய வகையில் நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. தமிழ்ப் பெருமக்கள் இரவெல்லாம் கண் விழித்து வரு

எங்கள் வரவேற்பு எப்படி?

இன்னும் வரவில்லையே!

கிறார்களே, பிற்பகல் வரையில் சிரம பரிகாரம் செய்து கொள்ளட்டுமே' என்று வரவேற்புக் கமிட்டியார் கருதியிருக்கலாம். ஆனால் அந்த ஒரு நேரம் அநாவசியமாக வீணடிக்கப்பட்டது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எட்டையபுரத்தில் அன்று சோற்றுக்கும், தண்ணீருக்கும் பஞ்சமிருந்தபோதிலும், சொற்பொழிவாளர்களுக்குப் பஞ்சமில்லாதிருந்தது. பேச சந்தர்ப்பம் கிடைக்கிறது என்று தெரிந்தால் அன்று எத்தனையோ பேர் வலிய வந்து பேசியிருப்பார்கள் பாரதியாரைப் பற்றியும், அவரது கவிதைகளைப் பற்றியும் மணிக் கணக்கில் பேசுபவர்கள் பலர் இருந்தும் கூட அந்தப் பொன்னான சந்தர்ப்பம் நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்ள முடியாமல் கைநழுவி விட்டது. மறு நாள் திறப்புவிழாவின்போது 'சுருக்கமாக, மிகச் சுருக்கமாக' என்றெல்லாம் போடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தமது அடங்கா ஆர்வத்தையும், தணியாத தாகத்தையும் அடக்கிக் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடித்த சண்டப் பிரசண்டப் பிரசங்கிகள், இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பொழிந்து தள்ளியிருப்பார்கள். ஆனால் அதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா?

மாகாண எழுத்தாளர் சங்கத்தலைவர் ஸ்ரீ துரன்கூட "எழுத்தாளர்களாகிய நாம் எல்லோருமாகச் சேர்ந்து ஏதாவது செய்யலாமே இந்த விழாவில்! என்ன செய்யலாம் சொல்லுங்கள்?" என்று சிலரைக் கேட்டார். உருப்படியான பதில் கிடைக்கவில்லை அதற்கு. தரித்திர பக்ஷம் மகாண சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமாவது போடுவோமே என்று முயற்சி செய்தார். ஆனால் அதற்கும் கோரம் சேரவில்லை. கடைசியில் கோரம் சேர்ந்து கூட்டம் நடத்தினர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

விழாக் கமிட்டியார் அந்தக் காலை நேரத்திற்கு ஏதாவது நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தால் சிறப்பாக நடந்திருக்கும். இது விஷயத்தில் பலருக்கு ஏற்பட்ட குறையும் நிவர்த்தியாகியிருக்கும்.

எட்டையபுர ஏற்பாடுகள்:

எட்டையபுரத்தில் எழுத்தாளர்களுக்கும், பத்திரிகைக்காரர்களுக்கும் சாப்பாட்டு வசதி செய்திருந்தார்கள். ஞாயிறு, திங்கள் இரண்டு நாட்களிலும் இரண்டு மூன்று வகைக் காய்கறிகள், அப்பளம் பாயசம், வடை (2வதுநாள்) உள்பட சுகமான சாப்பாடு கிடைத்தது. அந்தச் சமயத்தில் நாம் ரேஷன் காலத்தில் இருக்கிறோம் என்பதுகூட மறந்து போய் விட்டது — என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சாப்பிடச் சாப்பிட ஒரு காகிதப் பொட்டலம் கொடுத்தார்கள். அதைப் பிறகு பிரித்துப் பார்த்தபோது தான் அந்த ஏற்பாட்டைச் செய்தவர்களை பாராட்டத் தோன்றியது. வெற்றிலை பாக்கு, சீவல், கிராம்பு, ஏலக்காய் இத்தியாதிக ளெல்லாம் இருந்தன அதில். வாய் மணக்க, உதடு சிவக்க வெற்றிலை பாக்கை மென்று கொண்டு பார்வையாளருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாகைகளைப் பார்க்கச் சென்றேன்.

மூங்கில் பாய்களால் வரிசை வரிசையாய், அறை அறையாய் உருவாகியிருந்தன ஜாகைகள். அவற்றில் ஒவ்வொரு பகுதியும் கோவை, சென்னை, திருநெல்வேலி, மதுரை என்றெல்லாம் ஊர் வாரியாகப் பிரிக்கப் பட்டிருந்தன. செலவும் இதற்கெல்லாம் பிடித்துத்தான் இருக்கும். ஆனால் அந்த ஜாகை வசதியைப் பூரணமாக வந்திருந்தவர்கள் பயன் படுத்திக் கொள்ள முடியாமல் செய்து விட்டார் வருண பகவான்.

எழுத்தாளர்களுக்கும், பத்திரிகைக் காரர்களுக்குமாக ஒரு பள்ளிக்கூடத்தை ஜாகையாக ஏற்படுத்தியிருந்தார்கள். வசதியாகத்தான் இருந்தது அந்த இடம். 'சரி, மண்டபத்தைப் பார்த்து வருவோம் வாருங்கள்" என்று நண்பரை அழைத்துக்கொண்டு புறப்பட்டேன். வழியிலேயே பழைய நண்பர் ஒருவர் வந்தார்.

"நேற்றே வந்து விட்டீர்களல்லவா?" என்று கேட்டார்.

"இல்லையே, இன்று காலையில்தான் வந்தேன்" என்றேன்.

"அடடா, துரதிருஷ்டசாலி நீங்கள்" என்று அந்த நண்பர் பிரமாதமாக வருத்தப்பட்டுக் கொண்டு "நேற்று மாலை

பாரதியார் பிறந்த வீட்டிலே நம்ம தூரன் அவர்கள் கொடியேற்றி வைத்துப் பேசினார் பாருங்கள்! அடடா, அவர் பாரதியாருடனே நேருக்கு நேர் பேசியது போல் இருந்தது. பாரதி படத்தின் முன் நின்று "என் குருநாதா, எங்களை மனிதராக்கு. விடுதலையை எங்களுக்கு வாங்கித்தந்த எங்கள் தவச் செல்வமே, நாங்கள் உன்னை மறக்கவில்லை — மறக்க மாட்டோம். இன்று நீ வாங்கித்தந்த சுதந்தரத்தால் 'சுதந்திரக் கொடியை — சுதந்திர புருஷர்களாய் உன் வீட்டில் ஏற்றுகிறோம். அதைப் பார்த்துப் பரவசமடை" என்றெல்லாம் அவர் உணர்ச்சி பொங்கக் கூறியது எங்கள் எல்லோருக்கும் உடலிலும் உள்ளத்திலும் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. ஒவ்வொருவர் கண்களிலும் கண்ணீர் துளிர்த்து விட்டது. அதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் தேகம் புல்லரிக்கிறது. உங்களுக்கு அந்த சம்பவத்தைப் பார்க்க அதிர்ஷ்டமில்லை" என்று அங்கலாய்த்துக்கொண்டார். அத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை — வாய்ப்பை — பார்க்கக் கொடுத்து வைக்காத நான் அபாக்கியசாலிதான் என்பதை இதய பூர்வமாய் ஒப்புக்கொண்டேன். நண்பர் அன்று இரவு நடந்த 'ஆனந்தி—ராதா' நடனத்தைப் பற்றியும் சிலாகித்துப் பேசியபோது நாம் அதிர்ஷ்டக் கட்டைதான் என்பது ஊர்ஜிதமாகி விட்டது.

மேற்கொண்டும் மனிதர் ஏதாவது சொல்லி நம் அதிர்ஷ்டத்தை மேலும் பரீக்ஷை பார்த்து விடுவாரோ என்ற எண்ணத்தில் அந்த நண்பரிடம் விடை பெற்றுக் கொண்டு, கூட வந்த நண்பருடன் மண்டபத்தை நோக்கி நடந்தேன்.

"உயரம் சிகரக் கும்பம் தெரியுதாம்
அதைக் கண்டபேர்க்கு
உள்ளம்குளிரக் கருணைபுரியுதாம்!"

என்று அன்று நந்தன் பாடிய பாட்டு நினைவுக்கு வந்து, உள்ளம் குளிர்ந்தது. 'கவிக்குயில் பாரதிக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்று எத்தனையோ பேர் கண்ட கனவு — செய்த தவம் — பலித்து விட்டது! ஆசியாவிலேயே முதல் தடவையாக ஒரு கவிஞனுக்கு ஒரு நினைவுச்சின்னம் நிறுவியபெருமையைத் தமிழர்கள் அடைந்தார்கள்' என்ற இந்த எண்ண அலைகளில் மிதந்தபடியே மண்டபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இனிமையான நாதசுர நாதம் காற்றில் மிதந்து வந்து காதில் விழுந்தது. அதை அனுபவித்துக் கொண்டே கூட்டத்தை விலக்கியபடி மண்டபத்தைப் பார்த்தேன். வெள்ளை வெளேறென்று கண்ணைப் பறிக்கும் அழகிய சிறு மண்டபம். சுற்றிலும் போடப்பட்டிருந்த பந்தலின் காரணமாக மண்டபத்தின் அழகு பூரணமாக வெளிப்படவில்லை. பிரதானமாய் இருக்க வேண்டிய மண்டபம் ஒருபுறம் ஒதுக்கப்பட்டு, விழா மேடை ரொம்பப் பிரதானம் பெற்று விட்டது.

ஏறக்குறைய இருபதாயிரம் பேர் உட்காரும் அளவுக்கு விஸ்தாரமாகப் போடப்பட்டிருந்தது பந்தல். மண்டபத்திலிருந்து சற்று அதிகமாகவே தள்ளினாற்போல் ஒரு பெரிய சிமண்ட் மேடை அமைந்திருந்தது. அதிலிருந்து கொண்டுதான் குளிக்கரை பிச்சையப்பா தமது சகபாடியுடன் சேர்ந்து நாதசுர இன்னிசை விருந்து அளித்தார். பத்திரிகைக்காரர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் என்னையும் ஒருபுறமாக ஒதுக்கிக் கொண்டு கூட வந்த நண்பரைத் திரும்பிப் பார்த்தேன். அவர் காணுமல் போய் விட்டார்!

எட்டையபுரம் அப்படி ஒன்றும் பிரமாதமான ஊர் அல்ல. ஒரு ஜமீன் கிராமம். கரிசல் பூமி. மழை பெய்தால் சேறும் சகதியும் ஆளை அமுக்கிவிடும் சக்தி பெற்று விடும். சாதாரண காலத்தில் குடிக்கத் தண்ணீர் கிடைப்பதுகூட சிரமம் என்று சொன்னார்கள். அதை அனுபவத்திலும் காண முடிந்தது. மறுநாள் விடியற்காலையில் பல் தேய்த்துக் கொண்டு தண்ணீர் கிடைக்காமல் திண்டாடினது எனக்கல்லவா தெரியும்? காப்பிக் கடைகளில் காலையாகாரமும், மத்தியான சாப்பாடும் எதிர்பார்த்து பல கும்பல்கள் 'க்யூ' வரிசையில் நின்று தவம் கிடந்ததை கண்ணாரக் கண்டேன், எட்டையபுரத்தில்தான்! அதே 'க்யூ' வரிசை முறை குழாயருகிலும் நின்றது தண்ணீர் பிடிக்கவும், குடிக்கவும் முகம் கைகால் கழுவவும். கோயமுத்தூர் கிணறுகள் சாதாரணமாக ஆழத்திற்குப் பேர் போனவை. ஆனல் எட்டையபுரத்திலிருந்த கிணறுகளும் அப்படித்தான் என்று தெரிந்தது. தண்ணீருக்கு இவ்



பிரமாண்டமான விழாப் பந்தலும், கூட்டத்தின் ஒரு பகுதியும்

வளவு சிரமமுள்ள எட்டையபுரத்தில் சமையலுக்கும், குடிப்பதற்கும் தண்ணீர் சேகரித்தார்களே அந்த தீரர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்கள் நீடூழி வாழ்க!

'குடிக்கத் தண்ணீர் இல்லை; சாப்பாடு கிடைக்கவே கிடைக்காது கையோடு கொண்டு வந்தாலொழிய' என்பதையெல்லாம் துலாம்பரமாகத் தெரிந்தும்கூட அதைப் பொருட்படுத்தாமல் ஐம்பதாயிரம் பேர் அந்தச் சின்னஞ்சிறு எட்டைய புரத்திலே வந்து கூடினார்கள் என்றால் பாரதியார் மேலும் அவர் கவிதைகளின் மேலும் அவர்களுக்கு இருக்கும் அதீத பக்திதான் பிரதான காரணமாய் இருந்திருக்க வேண்டும். அப்படிக் கூடின பெருங்கூட்டம்தான் பந்தலில் நிறைந்து நாதசுரக் கச்சேரியை அனுபவித்துக் கொண்டிருந்தது.

இசைவிருந்து:

கச்சேரியின் இடையிடையே லேசான சந்தடிகள் கேட்டன. எல்லாம் முன்னால் இருப்பவர்கள் மறைப்பதின் காரணமாகவும், திடீர் திடீர் என்று எழுந்து நின்று பின்னால் இருப்பவர்களுக்குத் தொல்லை கொடுப்பதின் காரணமாகவும் தான். இந்தச் சந்தடியை அடக்க காரைக்குடி சா. கணேசன் அவர்கள் ரொம்பவும் சிரமப் பட்டார். "தயவுசெய்து சப்தம் போடாதீர்கள்" என்று பல முறை சப்தம் போட்டார். "இருக்கும் இடத்தை விட்டு நகராதீர்கள்" என்று பலமுறை தாம் இருந்த இடத்தை விட்டு எழுந்து வந்து ஒலி பெருக்கியில் வேண்டிக் கொண்டார். நடந்து கொண்டிருந்த நாதசுரக் கச்சேரியை நிறுத்திவிட்டு அமைதியாய் இருக்க வேண்டிய அவசியம் பற்றி ஒரு சிறு சொற்பொழிவுகூட ஆற்றினார். இப்படியெல்லாம் செய்து தொண்டை கம்மிப் போகும்படி தொண்டு ஆற்றியும் அங்கங்கே லேசான கசமுச சப்தமும் கேட்டுக் கொண்டு தானிருந்தன. இதற்கிடையே பிச்சையப்பாவின் நாதசுரக் கச்சேரி இனிது முடிவுற்றது!

அடுத்த கச்சேரி திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியுடையது. ஏற்கனவே ஜனங்கள் நிறைந்து வழிந்த பந்தலில் நிமிஷத்திற்கு நிமிஷம் நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருந்தது. பந்தலைச் சுற்றிலும், வெளியே ரோடுகளிலும் கும்பலாய் நின்று கொண்டு ஜனங்கள் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சென்னை மாகாணத் தமிழ் மந்திரிகளும், பிரமுகர்களும் முன்னிடம் தேடி அமர்ந்தார்கள். காமிராக்காரர்கள் நினைத்து நினைத்துப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்குப் பிறகு ராஜாஜியும், டி. கே. சி. யும் வந்து மேடையின் ஒரு புறத்திலே நாற்காலிகளிலே கம்பீரமாக வீற்றிருந்து கச்சேரியை அனுபவித்தார்கள். கடைசியாக சௌடையா, கல்பாத்தி ராமநாதன், ஆலங்குடி ராமச்சந்திரன் ஆகியோர் அடங்கிய ஜமாவுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. "பாரததேசமென்று பெயர் சொல்லுவார்" என்ற பாடலை எம். எஸ். பாட ஆரம்பித்ததும் "ஆஹா! பாரதி நினைவு மண்டபத் திறப்பு விழாவையொட்டிய கச்சேரி, பாரதி பாடலுடனேயே ஆரம்பமாகியிருப்பது

எவ்வளவு பொருத்தம்" என்று எனக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டேன். ஆனால் அப்படி நினைத்தது எவ்வளவு தவறு என்று போகப் போகத்தான் தெரிந்தது.

பாரதி நினைவைக் கொண்டாடும் ஒரு பெரிய விழாவிலே ஆரம்ப முதல் கடைசி வரையில் பாரதி பாடல்களாகவே பாட வேண்டியதல்லவா பொருத்தம்? அதை விட்டு விட்டு 'பக்கல நிலபடி' என்ற தியாகையர் கிருதியைப் பாடுவானேன்? ராப நாடகக் கீர்த்தனைக்குத்தான் அங்கு என்ன வேலை? அன்றைய கச்சேரியில் சங்கராபரண ஆலாபனையும், நிரவல், ஸ்வரங்களும் அருமையாய், ஆனந்தமாய் இருந்தன. அதற்கு முன் திருமதி எம். எஸ். அப்படிப் பாடி நான் கேட்டதில்லை. சபையோரும் பலமுறை கரகோஷம் செய்து அதைத்தான் தெரிவித்தார்கள். என்றாலும் எனக்கென்னவோ குறை குறையாகத்தான் பட்டது. குறைபட்ட மனதுக்கு 'வாழ்க நீ எம்பானும்' பாடகி வழக்கமாகப் பாடும் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' யும் தான் ஓரளவு திருப்தியளித்தன அன்றைய கச்சேரியில் சௌடையாவின் வாசிப்பும் அவ்வளவு சுகப்படவில்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

இடை வேளைக்குப் பிறகு இரவு $9\frac{1}{2}$ மணிக்கு மேல் எம். எம். தண்டபாணி தேசிகரது கச்சேரி 'சித்திவிநாயகனே' என்ற பாடலுடன் ஆரம்பமாயிற்று. தேசிகர் வழக்கம் போல் கனிந்துருகி நல்ல வேளையாக எல்லாம் தமிழ்ப்பாட்டுகளாகவே பாடினார். திருமதி எம். எஸ். கச்சேரியில் குறிப்பிட்ட குறை இவர் கச்சேரியிலும் இருக்கத்தான் செய்தது. "பாட்டுக் கொரு புலவன் பாரதியடா" என்ற கவிமணியின் பாட்டைப் பாடி பிரமாதமான கரகோஷம் பெற்றார். இப்படியாகத் தானே 12-ம் தேதியாகிய ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. மீதமிருந்த நான்கு ஐந்து மணி நேரத்தைக் கடத்தும் நோக்கத்துடன் பலர் பந்தலிலேயே படுத்தார்கள். பலர் தூக்கம் வராமல் அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள். நானும் 'சரி கட்டையைச் சற்று கீழே போடுவோம்' என்று பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தேன் அதற்குள் அதுவரையில் காணாமற் போயிருந்த நண்பர் வந்து சேர்ந்தார். அவர் காணாமற் போன விபரத்தைக் கேட்டுக் கொண்டே பள்ளிக்கூடத்திற்கு வந்தேன். நல்ல வேளையாக ஒரு நீண்ட பெஞ்சு காலியாகக் கிடந்தது. அதில் கால்மாடு தலைமாடு மாறி இருவரும் படுத்தோம். தூக்கம் இமைகளைத் தழுவியது.

விழா நிகழ்ச்சிகள் :

வெடிகள் அதிர முழங்க, மறு நாள் (திங்கட்கிழமை) பொழுது புலர்ந்தது! அதற்கு முன்பே நானும் நண்பரும் 'ரெடியாகி' மண்டபத்துக்குப் புறப்பட்டுச் சென்று முன்னிடம் தேடிக் கொள்ள விரும்பினோம். ஆனால் அங்கு சென்ற பின்தான் நாங்கள் கொஞ்சம் 'லேட்' என்று தெரிந்தது. அதற்குள்ளாகப் பந்தலில் ஆண்களும், பெண்களும், பத்திரிகைக்காரர்களும், காமிராக்காரர்களும், போலீஸ் தொண்டர்களுமாக



வரவேற்புக்கு நாங்கள் தயார்! புறப்படலாமா?

பந்தலிலும், மேடையிலும் பெண்களின் கூட்டம்

நிறைந்து விட்டார்கள். சௌகரியமாய் நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்க்கும்படியான இடத்தில் உட்கார்ந்து கொண்டேன். (இந்தக் கட்டத்தில் நண்பர் மீண்டும் காணுமற் போய் விட்டார்) அலைமோதின கூட்டத்தில் ராஜாஜி மண்டபத்தைத் திறக்கும் வைபவத்தைக் காண நம்மை விடமாட்டார்கள் என்று தோன்றியதால் மானசீகமாக அக்காட்சியைக் கற்பனை செய்து கொண்டு திருப்தியடைந்தேன். நாதசுர நாதம் பரவியது; சங்குகள் ஊதப்பட்டன; பேரிகை கொட்டினார்கள்; துத்தாரி, தாரை தப்பட்டை வாத்தியங்களும் சேகண்டிகளும் முழங்கின. "திறப்பு விழா நடை பெறுகிறது" என்று எண்ணிக் கொண்டு அமைதியாய் வீற்றிருந்தேன். மேடை மேலும் பந்தலின் மேலும் என் கவனம் சென்றது. ரொம்ப வியப்பாய் இருந்தது நாம் நேற்று இரவ கச்சேரி கேட்டோமே அதே பந்தல்தானு இது? என்று சந்தேகம் வந்துவிட்டது. காரணம் மேடையையும் பந்தலையும் அப்படி அலங்கரித்திருந்தார்கள்.

எட்டையபுரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பார்க்க முடியாத வாழைகள், கமுகு, கூந்தற்பனை முதலியவைகளும் ஏராளமான மாலைகளும், தோரணங்களும் சேர்ந்து பந்தலை அப்படி அழகு படுத்தின என்றும் அப்படி அழகு படுத்தியது காரைக்குடி சா. கணேசன் அவர்கள் என்றும் பின்னுல் தெரிய வந்தது. அந்த அழகையும், எப்பக்கம் திரும்பினுலும் ஒரே தலை மயமாய்த் தென்பட்ட அந்த ஜன சமுத்திரத்தின் அழகையும் பார்த்துக் கொண்டிருக்கையில் ராஜாஜி வருகிருர் என்ற ஆரவாரம் மேடையில் வலுத்தது!

ராஜாஜி மேடைக்கு வந்து சபைக்கு ஒரு நமஸ்காரம் செய்து விட்டு தலைவர் ஸ்தானத்தில் அமர்ந்தார். திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, பாரதியின் "பொழுது புலர்ந்தது" "யாமறிந்த மொழிகளிலே" பாடி, பின் மேடையின் ஒருபுறத்தில் அமர்ந்தார். ஸ்ரீ சோமயாஜுலு பாரதி மண்டபம் திறந்து வைக்கப் பட்டது பற்றியும், ராஜாஜியின் கவர்னர் பதவி பற்றியும், குறிப்பிட்டு, ராஜாஜியை வரவேற்று விழாவை ஆரம்பித்து வைத்தார். ராஜாஜியைச் சுற்றிலும் சென்னை மாகாணத் தமிழ் மந்திரிகளும், பிரமுகர்களும் எட்டையபுரம் மகாராஜா உள்பட மேடையில் அமர்ந்திருந்தார்கள். அதனுல் கீழே உட்கார்ந்திருந்தவர்கள் ராஜாஜியைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. இதன் காரண

மாக சற்று லேசான சப்தம் எழுந்து கொண்டிருந்தது!

ராஜாஜி 'மைக்'கின் முன் வந்து பேச ஆரம்பித்தார். "என்ன நிறைவு இருந்தாலும் அதிலும் ஒரு குறை இருக்கத்தான் செய்யும் என்பதை வேடிக்கையாக அறிவுறுத்தினர். "பாரதியின் கவிதைகளை எல்லோரும் படிக்க வேண்டும் என்றும், அவரது நாட்டுப் பாடல்கள் என்றும் மறக்க முடியாத பாட்டுகள் என்றும், பாரதியின் சேவைக்கு நிகரில்லை என்றும் பாரதி ஒரு அகஸ்திய முனிவர்" என்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

'துக்கம் நிலையில்லை' என்பதைத் தமிழர்கள் உணர்ந்தவர்கள் என்றும், எதையும் சிரித்துக் கொண்டே சகித்துக் கொள்ளும் மனப் பக்குவம் அவர்களுக்கு இருக்கிறது என்றும் இது தமிழ் நாட்டுக்கு மட்டுமே சொந்தமான அரிய பண்பாடு என்றும் குறிப்பிட்டார். கடைசியாக தமது கவர்னர் பதவி பற்றிப் பேசுகையில் 'அது ஒரு ஒன்றேகால் மணி நேர ஆட்சிதான்' என்றும் வங்கத்திலிருந்து நான் சீக்கிரம் நல்ல பெயருடன் திரும்ப வேண்டும் என்று நீங்கள் எண்ண வேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

"வந்தே மாதரம்; அல்லாஹு அக்பர்; ஜெய் ஹிந்த்; மகாத்மா காந்திக்கு" என்றெல்லாம் கோஷமிட்டுப் பேசத் தொடங்கிய மௌலானா சாஹிப் பாரதியின் பாடல்களை "அடாமிக் 'பாம்'கள்" என குறிப்பிட்டார்.

பிறகு பாரதியாரோடு பயின்றவரும் பழகியவருமான ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் ஆசியாவிலேயே முதல் தடவையாக எட்டைய புரத்திலே ஒரு கவிஞனுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப் படுகிறது என்பதை நினைவூட்டி பாரதிக்கு எல்லா ஊர்களிலும் நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்தபடியாகப் பேச வந்த நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளைக்குத் தமது கையாலேயே மாலை சூட்டினர் ராஜாஜி. "பாரதி பரம்பரைக்கு ஏகப் பிரதிநிதி நான்தான்" என்று தமது வெண்கலக் குரலில் கூறிக் கொண்டு நிமிர்ந்த நெஞ்சுடன், பாரதியாரைத் தாம் சந்தித்தது பற்றிக் கூறினர். கடைசியில் பாரதி பாடாமல் விட்டுப் போனவற்றை "பாண்டியா நீ பாடு" என்பதை யொட்டி நான் பாடி வருகிறேன் என்று பெருமிதத்துடன் சொல்லி 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற பாப்பா பாட்டுதான் பாரதி பாட்டின் ரகஸ்யம் என்று கூறி முடித்தார்.

ஸ்ரீ பெ. தூரன் அவர்கள் அடுத்தபடியாகப் பேசினர். அவர் பேச்சில் உருக்கம் நிறைந்திருந்தது. இரண்டு நிமிஷம்



ராஜாஜியும், டி. கே. சி. யும் சங்கீத மேடையில்



நினைவுச் சின்னம் மற்றொரு தோற்றம்

பேசினாலும் உணர்ச்சி ததும்பப் பேசினார். பாரதியின் கனவைப் பற்றியும் தமிழ், தமிழர், தமிழகம் இந்த மூன்றின் மேலும் அவருக்கு இருந்த ஆர்வப் பற்றியுப் குறிப்பிட்டு பாரதியின் எழுத்துக்களில் சில இன்னும் வெளிவராமல் இருக்கின்றன; அவை வெளிவர வழிகாண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பாரதி மண்டபத் திறப்பு விழாவிலேயே அதிகமான கரகோஷம் வாங்கி சக்கைப்போடு போட்ட பிரசங்கி ஸ்ரீ ப. ஜீவானந்தம் ஒருவர்தான்! 'இந்த மணி மண்டபம் புதிய உலக மணிமண்டபத்தின் ஒரு பங்குதான் என்றும் இம்மண்டபம் அறிவின் மணிமண்டபம் ஆகவேண்டும்' என்று பிரஸ்தாபித்து, பாரதியாரின் பொது உடைமைக் கொள்கை பற்றிக் குறிப்பிட்டு பாரதி பாடல்களிலிருந்தே அதற்கு உதாரணங்களும் எடுத்துக்காட்டி "பாரதி பாடல்கள் பணக்காரனுக்கல்ல; ஏழைகளுக்குத்தான்! பாரதி பாடியது முதலாளிக்கல்ல; தொழிலாளிக்குத்தான்" என்றெல்லாம் அடித்துக்கூறி பாரதி பாடல்களைப் பொது உடைமையாக்க வேண்டும் என்றும்கூறி பலத்த கரகோஷத்திடையே தமது சொற்பொழிவை முடித்துக் கொண்டார் ஜீவா.

உணவு மந்திரி கனம் டாக்டர் ராஜன் "தாம் ஒரு முறை மண்டபம் கட்ட அஸ்திவாரமிட்டு அது ஆற்றோடு அடித்துக் கொண்டு போய் விட்டதைப் பற்றிச் சொல்லி ராஜாஜி மணி மண்டபத்திற்கு அஸ்திவாரமிட்ட கதையை வேடிக்கையாகக் குறிப்பிட்டு தமது பிரசங்கத்தை ராஜாஜி குறிப்பிட்டபடி 'மிகச் சுருக்கமாக' முடித்துக் கொண்டார்.

பிறகு ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் "எப்படி எப்படிச் சொன்னாலும்" என்ற பாடலை விளக்கி, பாரதியாரும் அப்படிப் பாடியிருக்கிறார் என்று காட்டினார்.

ஸ்ரீ சிவஞான கிராமணியார் தமக்கே உரிய கம்பீரக் குரலில் அடுத்தபடியாக கட்ட பொம்மு, பாரதி, வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகி. மூவரையும் ஒப்பிட்டுப் பேசினார். வழக்கம்போல் தாம் காணும் தமிழ்க் குடியரசுக் கனவு பற்றியும் குறிப்பிட அவர் மறந்துவிடவில்லை!

பாரதியாரின் இளைய புதல்வி திருமதி சகுந்தலா தமது உள்ள உணர்ச்சியை ஒரு ஆசிரியப்பாவாக வெளிப் படுத்தினார்.

அடுத்தபடியாக ராஜாஜி அவர்கள் சென்னை மாகாணப் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களை பாரதி சிலையைத் திறந்து வைத்துப் பேசும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்ரீ ரெட்டியார் சிலையைத் திறந்து வைத்து பாரதியாரைப் பற்றி சற்று நேரம் பேசினார்.

ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதி, நாமக்கல் கவிஞர் பாரதியாரைப் பற்றி எழுதியிருந்த பாடலை உணர்ச்சியுடன் தெளிவாக பொருள் விளங்கும்படி சொல்லிக் காட்டினார்.

திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பாரதி மண்டபத்திற்கு அன்பளிப்பாக வந்த இரண்டு வெள்ளிக் குத்து விளக்குகளை ஆதீனத்தின் சார்பில் கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் உரியவர்களிடம் சமர்ப்பித்தார்.

பிறகு பாரதியின் மாமா ஸ்ரீ சாம்பசிவ அய்யர் "முருகா முருகா" என்ற பாடலை பக்தி சிரத்தையோடு பாடினார்.

கடைசியாக பாரதி மண்டபவிழா இவ்வளவு விமரிசையாக நடை பெறுவதற்கு மூல காரணமாயிருந்த ஸ்ரீ 'கல்கி' அவர்கள் நகைச் சுவை நனி சொட்டச் சொட்ட பாரதி மண்டபம் எழவும், பாரதி மண்டபத் திறப்பு விழா நடத்தவும் உதவி புரிந்து ஒத்துழைத்த எல்லோருக்கும் வந்தனோபசாரம் சொல்லி அனைவரது பாராட்டுதலையும், கரகோஷத்தையும் பெற்றுக் கொண்டார்.

முடிவுரை பேச எழுந்த ராஜாஜி அவர்கள் புதுச்சேரியில் பாரதியின் பெயரால் ஒரு தெருவு ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, பாரதிக்கு புகலிடம் கொடுத்த புதுச்சேரியில் அத்தகைய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பாராட்டி தமது முடிவுரையை முடித்துக் கொண்டார்.

ஸ்ரீ டி. கே. ஷண்முகம் உச்சஸ்தாயியில் பாடிய பாரதியின் "ஜெய பேரிகை கொட்டடா" என்ற பாட்டுடன் பாரதி

கல்கி, ராஜாஜி முதலியோர் மேடையில்.

மண்டபத் திறப்புவிழா இனிது முடிவுற்றது.

முடிவுரை:

விழாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன் எட்டையபுரத்தில் சக்கைப் போடு போட்ட மழை விழாவுக்கு முதல் நாளும், விழா வன்றும் வருவதாக பாவனை காட்டி பின் வராமல் இருந்து விட்டதும், சென்னை மாகாணத் தமிழ் மந்திரிகள் எல்லோரும் விழாவில் உற்சாகமாகக் கலந்துகொண்டு தங்களால் செய்ய முடிந்த உதவியையெல்லாம் செய்ததும், எட்டையபுரம் மகாராஜா எல்லாவகையிலும் விழாவிற்கு உதவி செய்து, ஒரு சாதாரண பொது ஜனம்போல் மகிழ்ச்சியோடு விழாவின் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டதும், திருச்சி ரேடியோ நிலையத்தார் இரண்டு தின நிகழ்ச்சிகளையும் விழாவிற்கு வரமுடியாதவர்களும் கேட்டு இன்புறும் வகையில் ஒலிபரப்பியதும், பாரதி மண்டபத் திறப்புவிழா பொதுக் காரியதரிசி ஸ்ரீ சோமயாஜுலு விழா சம்பந்தப் பட்ட பல முக்கியமான பொறுப்புகளையெல்லாம் தன் தலைமேல் தூக்கிப் போட்டுக் கொண்டு, அவற்றை வெற்றிகரமாக நடத்திக் காட்டியதும், பிரபலஸ்தர்கள் பலரிடமிருந்து ஆசிதந்திகளும், பாராட்டுக் கடிதங்களும் வந்திருந்ததும், குறிப்பாக — இந்திய அரசாங்கத்தின் நிதி மந்திரி ஸ்ரீ ஆர் கே. சண்முகம் செட்டியாரவர்களிடமிருந்து "பாரதி பாடல்களை எல்லோரும் வாங்கிப் படிக்கதக்கஏற்பாடு செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டு வந்திருந்ததும் குறிப்பிடத் தக்க முக்கிய விஷயங்கள்.

பிரமாண்டமான கூட்டத்தின் காரணமாக என்னுடன் வந்த நண்பர் அடிக்கடி காணமல் போய் பின் திரும்பி வந்ததும் 'வசந்த'த்திற்கு என்று விசேஷமாகப் படம் எடுக்க வந்த நண்பர் ஸ்ரீ கே. முத்துராமலிங்கம் அவர்கள் என்னையும், நான் அவரையும் அடிக்கடி தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டதும், விழா முடிந்த பின்னும்கூட இருவரும் சந்திக்க முடியாமலேயே பிரிந்து போக நேர்ந்ததும்கூட குறிப்பிட வேண்டிய விஷயங்கள்தான்!

ஒரு குறை:

பாரதி மண்டபத் திறப்புவிழாவிலே, பழுத்த பாரதி பக்தரான வ. ரா. வும், கவிஞர் பாரதிதாசனும், பாரதியாரின் அருமைத் தம்பி பரலி சு. நெல்லையப்ப பிள்ளையும் பங்கெடுத்துக் கொண்டிருந்தால் — பாரதியின் குடும்பத்தார் அங்கு கூடியிருந்த ஜனசமுத்திரத்திற்கு நல்ல முறையில் அறிமுகப் படுத்தப் பட்டிருந்தால் — அவர்கள் இன்னும் சிறப்பாகவும், பிரதானமாகவும் கௌரவிக்கப் பட்டிருந்தால் விழாவின் சிறப்பு இன்னும் கூட நூறு மடங்கு உயர்ந்திருக்கும். பலருக்குப் பிரதானமான குறையாகப் பட்ட இக்குறையும் தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த ஒரே ஒரு குறை நீங்கலாக மற்றபடி பாரதி மண்டபத் திறப்புவிழா மறக்க முடியாத மகத்தான விழாவாக முடிந்தது என்று பெருமிதத்தோடு சொல்லலாம்.

பாரதிக்கு நினைவுச் சின்னம் ஏற்படவும், அச்சின்னமான பாரதி மண்டபத் திறப்பு விழா சிறப்பாக நடக்கவும் ஜீவநாடியாக இருந்து எழுதியும், பேசியும், ஊர்சுற்றியும் அரிய பணியாற்றிய ஸ்ரீ 'கல்கி' யையும் அவர் சகபாடிகளையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம்கூட தாராளமான பண உதவி செய்து பாரதி பிறந்த எட்டைய புரத்திலே அவருக்கு ஒரு அழகிய நினைவுச் சின்னம் — ஒரு மணி மண்டபம் — நிறுவக் காரணமாயிருந்த அத்தனை பாரதி யன்பர்களும் தமிழனின் பெருமையை — கௌரவத்தை நிலை நாட்டி விட்டார்கள். தமிழும், தமிழ் நாடும் உயர்ந்தது. தமிழர்களும் உயர்ந்தார்கள். பாரதி நாமம் வாழ்க!

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு.

★

புகைப்படங்கள்:
கே. முத்துராமலிங்கம் எம். ஏ., பி. எல்.

கங்கைக் கரையில்....

['துஷ்யந்தன்']

உன் அஹல்யா கல்லாகி விட்டாள். தாமரை மலர் போன்ற கரங்களினுல் புல் கொடுத்து உன்னை அன்போடு வளர்த்து வந்த அவள் இப்போது உணர்ச்சி யற்றுப்போய் நிற்கிருள். நீ விடும் கண்ணீர்கூட அவளை அசைக்காது. கங்கைக் கரையிலிருந்து அவள் நீர் எடுத்து வரும்போது எத்தனையோ நாட்கள் நீயும் அவள் பின்னே ஓடிவந்திருக்கிருய். நளின மலர்ப் பாதம்நோக அவள் நடந்து வரும்போது குதித்தோடி வழி மறித்து நின்ற நாட்கள் இனி வருமா? நீர் வழிந்தோடுகிறது உன் கண்களில்.

நீ அழுகிருய், கண்ணீர் விடுகிருய், கதறுகிருய், ஆமாம், நீ அழத்தான் செய்வாய். அவள் அன்பு உன்னை ஆட்டி வைக்கிறது. அதோபார்! என்றுமே அவளைப் பிரிந்தறியாத அவள் மயில் கூட ஏங்கிப்போய் நிற்கிறது. அவளுடைய அரவணைப்பையும், ஆதரவையும் இனி யாரிடமிருந்து நீங்கள் பெறப் போகிறீர்கள்?

சின்னஞ் சிறுவயதில் உங்களை வளர்த்து விட்டவள் அவள். அவளுக்காக நீங்கள் மட்டுமா அழுகிறீர்கள்?

வானம் அழுகிறது. வையகம் அழுகிறது. ஏன்? கானகம் கூடத்தான் கண்ணீர் வடிக்கிறது, கல்லாகி விட்ட இந்த அஹல்யாவை நினைத்து.

பெருக்கெடுத்தோடும் உங்கள் கண்ணீருக்கு மட்டும் அவள் பாதத்தைக் கழுவி விடும் சக்தி யிருக்குமானல்......? தினம் தினம் அவள் ஆசையோடு குதித்து நீந்தி விளையாடி மகிழ்ந்த அந்த கங்கைக்கு மட்டும் இவளுடைய பாபத்தைப் போக்கி விடும் சக்தி யிருந்து விட்டால்...? ஆமாம், உங்களால் அவள் பாபத்தைக் கரைத்து விட முடியாது.

அப்படி யென்ன பாபத்தைச் செய்து விட்டாள் என்று கேட்கிருய்!

உனக்குத் தெரியாது. நீ கள்ளங் கபட மற்ற மான் இனத்தைச் சேர்ந்தவள். மனித இதயத்தின் ஆழத்தை அறியாதவள். உனக்கு அஹல்யாவை மட்டும் தான் தெரியும். அவள் உள்ளத்தில் நடந்து கொண்டிருந்த போராட்டத்தை நீ அறியமாட்டாய். அவள் பெண்! நீயோ மான்! அவளை அறிந்து கொள்ள மற்ருெரு பெண்ணுலேயே முடியவில்லை. நீ மட்டும் தெரிந்து கொண்டிருக்கப் போகிருயா?

கல்லாகிக் காத்திருக்கும் உன் அஹல்யாவைக் கேட்டுப்பார். அவள் சொல்வாள். தன்னை இந்த நிர்க்கதிக்குக் கொண்டுவந்த மஹாராஜன் யார் என்று அவளே சொல்வாள். கல்லாகச் சபித்து விட்ட மஹான் யார் என்றும் சொல்வாள். ஏன்? ......சொல்ல மாட்டேன் என்கிருளா? வா, போவோம். இந்திரனை உனக்குத் தெரியுமா? அவனையே கேட்போமே. இதோ, வருகிருன். அவன் சொல்வதைத்தான் கேட்டுப் பாரேன்.

அஹல்யாவுக்காகவா நீ வந்திருக்கிருய்? ஆமாம், உன்தோழிக்காக நீ அழுகிருய் ஏன் சுவாமி, நீங்கள் செய்தது நியாயமா; தர்மமா என்று கேட்கிருய். அஹல்யாவின் கண்களைப் போலவேயிருக்கும் உன் மோகனக் கண்களில் நீர் வழிந்தோடுகிறது. அவள் கல்லாகி விட்டாளே என்று கதறுகிருய். உன்னைத் தேற்ற என்னுல் முடியாது. ஆனல் நான் செய்தது பாபமா என்று நீயே சொல். நான் சொல்வதை முழுவதும் கேட்டுவிட்டுப் பேசு.

நீ மான். அதிலும் இளங் கன்று. உனக்கு இந்த அமரலோக வாழ்க்கையைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருக்காது.

இங்கு எப்போதுமே ஒரே இன்ப வாழ்வுதான். வாழ்க்கையில் மாறுதல் என்பதே கிடையாது. நித்யத்வம் சலித்து விட்டது எனக்கு. புதுமை வேண்டும் என்று விரும்புவது பாவமா? நீயேசொல். இது இயற்கையின் நியதிதானே? இதைத் தான் நானும் நாடினேன்.

இந்த தேவலோக வாழ்வில் எனக்கு சலிப்பு ஏற்பட்டு, சலிப்பு வெறுப்பாக மாறி விட்டது. வெறுப்பும் வளர்ந்து கொண்டே வந்தது. ஏன் என்று உனக்குத் தெரியாது. இங்கிருப்பவர்களைக் கேள்; சொல்வார்கள். என்னமோ மேனகையும், திலோர்த்தமையும், ரம்பையும், ஊர்வசியும் என்று சொல்கிறார்கள். அவர்கள் அழகிகள்தான். நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் காலமெல்லாம் இவர்களுடனே இருந்து பழகிப் போய் விட்ட எனக்கு அவர்களின் அழகில் லயிப்பு இல்லை. அவர்களது எழிலும், புன்னகையும் என்னை வசீகரிக்க வில்லை. அவர்களைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டேன்.

அமிர்தம் இல்லையா என்பாய். ஆமாம், இருக்கிறது. ஆனால் அதுகூட எனக்குப் புளித்து விட்டதே! இந்த தேவலோகமே எனக்குப் பிடிக்கவில்லை. நரகம் போலத் தான் இருக்கிறது இதுவும். கற்பகத் தருவும், காமதேனுவும் என்று நினைக்கிறாய். அவைகள் மீது உன் பூலோக வாசிகளுக்குத்தான் ஒரு பிரமை. ம்......யாருக்கு வேண்டும், இந்த அமரத்துவம்? ஒரே யந்திர வாழ்க்கை. பொழுது விடிந்தால் பொழுது போனால் நாட்டியம், கேளிக்கை, இன்பம், அமிர்தம்......சே, எல்லாம் யுக யுகாந்திரமாக அநுபவித்த அதே புளிப்புத்தானே! விஷயங்கள்தானே. அதே அப்ஸரஸ்கள்தான்? அவர்களின் நடனக் கூத்துதான்! போதும் போதும் என்றாகிவிட்டது எனக்கு.

புதுமை புதுமை யென்று கூவியது என் மனம்.

புதுமையைத் தேடி யலைந்து கொண்டிருந்தேன். மதுவைத் தேடி யலையும் வண்டைப்போல எங்கெல்லாமோ சென்றேன். நீர்ச் சுனையைத் தேடியலையும் மானைப்போல நீ திகைக்கிறாய். உனக்குத் தெரியாது அந்தக்கஷ்டம். நீ என்றுமே அலைந்த தில்லை. அஹல்யா உனக்கு தனது தாமரைக்கரங்களால் வாரிவாரிக் கொடுத்தாள் தண்ணீரை. அலைபாய்ந்து ஓடிவரும் கங்கையின் அமுதப்பெருக்கெல்லாம் உன் அஹல்யாவின் கைகளைத் தொட்டுமகிழ்ந்து செல்லும். நான் அறுகையாகத்தான் இருந்தேனா? அவள் உனக்குப் பிய்த்துக் கொடுக்கும் புல்லாகத்தான் பிறந்தேனா? நான் அவ்வளவு பாக்கியம் செய்யவில்லையே!

பித்தனைப்போலத் திரிந்து கொண்டிருந்த அந்த நாளிலேதான் அவள் என் கண்ணிற்பட்டாள். அவளை எனக்குச் சிறு வயது முதல் தெரியும். ஆனாலும் இப்போது அவள் அழகு என்னை என்னவோ செய்தது. மனதைக் கலக்கியது. உள்ளத்தை இறுக்கிப் பிழிந்தது. அழகின் பூரணத்வத்தை அவளிடம்தான் கண்டேன். வண்ண மலரைப்போல, எத்தனையோ தேனைச் சேகரித்து வைத்திருக்கும் காட்டுப் பூவைப்போல, மதுவைக் காட்டி மயக்கியிழுக்கும் சுகந்த புஷ்பம் போல என்னை இழுத்துவிட்டாள் அவள்.

மலரைத்தேடி, மலரின் மதுவைத் தேடி வருவது வண்டின் குற்றமா, நீயே சொல். எழிலெல்லாம் வெளியே காட்டி, வாசமெல்லாம் வீசி விட்டுப் புன்னகை பூத்து நின்று, காற்றிலே அசைந்தாடி வா வா என்று அழைக்கும் புஷ்பத்தைக் கண்டும் கூட ஒரு வண்டு அந்த மலரிடம் வராமல் பறந்து போய்விடுமா?

எத்தனையோ நாளாகத் தேடியலைந்த புது மலரைக் கண்டதும் மயங்கிவிட்டேன். மலரின் மதுவைக் குடித்து விட்டேன். இன்பத்தின் போதையிலே, மோஹத்தின் லாகிரியிலே நான் எதிர் காலத்தைக் காணவில்லை.

மலர் கருகிப் போய்விடுமே என்ற சிந்தனையே எழவில்லை. பூத்திருந்த புதுமலரைப் பாழடித்து விட்டேன். இதுதான் நான் செய்த குற்றம். நீ சொல்வது போல, பாவம். இதற்கு என்னதண்டனை எனக்குக் கிடைத்தது தெரியுமா? ம்...

என்னைப் பற்றிக்கூட நான் வருந்த வில்லை. ஆனால் எனக்கு மதுவை வாரிக் கொடுத்த அந்த மலரை நினைக்கும்போது! பாவம்... அவள் கல்லாகி விட்டாள். அவளைக் கல்லாக்கியது என் குற்றமா?

மென்மையான அவள் தேகத்தைக் கல்லாக்கி விட்ட பாபத்தைச் செய்தது நான் மட்டும் தானா?

நீ அழுகிறாய். போ, உன் அஹல்யாவைக் கல்லாகச் சபித்து விட்ட அந்த கோதமனைப் போய்க்கேள். அவளைக் கல்லாக்கிய அவன் மனம் கூடவா கல்லாகப் போயிருக்கும்? அவனிடம் போய் கண்

ணீர்விட்டுஅழு. உன் கண்ணீராவது அவன் கல்லான இதயத்தை இளகச் செய்யட்டும். உன் அஹல்யாவுக்காக நீயாவது அவனிடம் வாதாடு போ!

ஆமாம், அப்போது என் மனதைக் கல்லாகத்தான் செய்து கொண்டேன். இல்லாவிட்டால் அவள் பட்ட மனவேதனையைப் பார்த்து சகித்திருக்க முடிந்திருக்காது. உன் மனத் துயருக்குக் காரணம் உண்டு. உன் அஹல்யா இப்போது உன்னுடன் விளையாடவில்லை. அவள் கல்லாகி நிற்கின்றாள். அவளைக் கல்லாக்கியது நானல்ல, உலகம் தான்!

அஹல்யா என் பத்தினி. என் ஆசிரமத்தைப் பாதுகாத்து வந்த தேவதை. சிசுருஷை செய்து வந்த பணிவிடைப் பெண், வாழ்க்கைத் துணைவி. இந்தக் கங்கைக் கரையின் இணையற்ற அழகி.

அவளது பிரிவால் இந்த ஆசிரமமே சூன்யமாகி இருண்டு கிடக்கிறது. ஹோமகுண்டம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அதோ பார்! அவள் கையால் வைத்துப் பயிரிட்ட செடி கொடிகள் எல்லாம் கருகி வாடித் துவண்டு போகின்றன. 'அவள் இல்லை,! அவள் இல்லை'! என்று ஒவ்வொரு பொருளும் என்னைப் பார்த்து சொல்வது போலிருக்கிறது. என் வாழ்வே மங்கி விட்டது. என் நியம நிஷ்டைகளில் ஒழுங்கில்லை. மனதிலே அமைதியில்லை.

நீ கண்ணீர்விட்டுக் கதறி அழுது விடுகிறாய். என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. நான் அவளைக் கல்லாக்கியது என்னவோ உண்மைதான். ஆனால் என் மனதைக் கேட்டுப்பார், அது உனக்குச் சொல்லும். அஹல்யாவை நான் அறிவேன். அவளது மனதை அறிந்து வைத்திருக்கிறேன். அவள் மாசற்றவள், பளிங்கு போன்றவள்; ஆனால் அவள் பெண்!

நான் அவளை மன்னித்திருப்பேன். ஆனால் இந்த உலகம் என்னையும் அவளையும் வாழ விட்டிருக்காது. இது எனக்குத் தெரியும். ஏன்? அவளுக்கும் தெரியும். அவள்தான் துடித்தாள். அமைதியின்றி அங்கலாய்த்தாள். சாந்தியற்றுப்போய்க் கலங்கினாள். அவள் தவித்துத் துடிப்பதைக் காணச் சகிக்காமலேயே அவளை உனர்வற்ற கல்லாக்கினேன். அவளுக்கு வந்த அபவாதம் பெரியது. அது மாற வேண்டுமானால், களங்கம் போகவேண்டுமானால் அவளுக்குத் தண்டனை அவசியம் என்று தோன்றியது. அவள் மனப்புண் ஆறவும் காலம் வேண்டியிருந்தது. இதற்காகவே அவளைக் கல்லாக்கி வைத்தேன். உலகத்தின் சாபத்தினின்றும் அவளுக்கு விடுதலை கொடுத்தேன். யாருமே அவளையணுகி அவள் மனப்புண்ணைக் கிளறிவிடாமலிருக்க, அவளைக் கல்லாக்கி வைத்தேன். அமைதியற்றுக் கிடந்த அவள் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஓய்வு வேண்டியிருந்தது. இதற்காகவே அவற்றை உணர்வின்றி உறைந்து போகச் செய்து விட்டேன். அவள் இதயம் இனிக் குமுறாது, கொந்தளிக்காது.

இன்னும் ஏன் அழுகிறாய்? காலமெல்லாம் அவள் கல்லாக நின்றுவிடப் போகிறாளே என்றா? இல்லை. அவளுக்கு விமோசனம் உண்டு. ராமன் வருவான், அவளுக்குப் புத்துயிரளிக்க. சூன்யமாகிக் கிடக்கும் என்வாழ்க்கையில் மீண்டும் அவள் வந்து விடச்செய்வான். இருண்டு கிடக்கும் இந்த இடத்தை ஒளிபெறச் செய்துவிடுவான். மறுபடியும் உனக்கு உன் அஹல்யாவைக் கொடுப்பான் அவன். காத்திரு, காலம் வரும். ஓடி வருவாள் அவள் உன் கண்ணீரைத் துடைக்க.

கல்லாகி இறுகிப்போய்விட்ட என் உள்ளத்தையும் உடலையும் உன் கண்ணீரால் கரைத்து விடலாம் என்று நீ நினைத்தாயோ என்னவோ! ம்... உனக்கென்ன தெரியும் என் மன நிலை? என்னைப் பிரிந்திருக்க உன்னால் முடியவில்லை. நீ அழுதாய்; எங்கெல்லாமோ சென்றாய். எனக்காக யார் யாரிடமோ வாதாடினாய். மீண்டும் நான் உன்னுடன் விளையாடி மகிழவேண்டும் என்று நினைத்தாய், உன் எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. ஆசை நிறைவேறி விட்டது. ஆனால்......

எனக்கு மட்டும் என்னவோ மனச் சாந்தியே இல்லை. ஏதோ ஒரு ஏக்கமும் கலக்கமும் என்னை வாட்டி வதைக்கிறது. முன்போல இருக்க முடியவில்லை. களங்கமற்ற வனத்துப்பெண்ணாக இருந்த நான் இப்போது... அச்சமும் பயமும் என்னை எங்கிருந்தோ வந்து பிடித்துக் கொண்டு விட்டன. பயமற்று எங்கும் திரிந்து வந்த என் வாழ்க்கை மாறிப்போய் விட்டது. கங்கைக்கு நீராடப்போகும் போது கூட என் மனம் நிம்மதியாயில்லை.

ஒருவரையும் ஏறெடுத்துப் பேச முடிய வில்லை. 'பாபி' 'பாபி' என்று அவர் கள் கண்கள் என்னைக் குற்றஞ் சாட்டு வது போலிருக்கிறது.

அவர் என்னவோ என்னை முன்போ லவேதான் அழைக்கிறார். இருந்தாலும் என் உள்ளம் துடிக்கிறது. அவரது புனித மான பாதத்தைத் தொட்டு நமஸ்கரிக்கக் கூட என்மனம் துணிவு கொடுக்கவில்லை. என் பாபக் கரத்தால் எங்கே அவருக்கு அபசாரம் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகிறேன். இதனால்தான் அவர் என்னைக் கல்லாக்கியபோது அவரை என் மனமார வாழ்த்தினேன்.

இவையெல்லாம் உனக்குப் புதிராக இருக்கும். என் மனதைப் புரிந்து கொள்வது உனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அன்று நான் எந்த நிலையில் இருந்தேன் என்பது உனக்குத் தெரியாது.

ஆமாம், எதையோ நினைத்து நினைத்து, ஏங்கிப்போய் காத்துக் கிடந்தேன் நான் எத்தனையோ காலமாக. என் கண வர் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. தெய்வமாக இருந்தார் அவர். ஆனால் நான் ஒருபெண் என்பதை மட்டும் மறந் தே போய்விட்டார். என் மனதில் ஒரு பெரும் போராட்டம் நடந்து கொண் டிருந்தது. அப்போது தான் வந்தான் இந்த இந்திரன்.

எதை நினைத்து ஏங்கி யிருந்தேனே அந்த எண்ணத்தைக் கிளப்பிவிட்டான். எதை மறந்து போய் விடவேண்டும் என்று அல் லும் பகலுமாக முயன்று வந்தேனே அந்த விபரீத ஆசையை, என்னுள்ளே எங்கோ ஒரு மூலையில் உறங்கிக் கிடந்த அந்த உணர்ச்சியை, தட்டி எழுப்பி விட்டு விட் டான் அவன். எந்த தாகத்தை நீக்கி விட்டுத் தூய்மையாயிருக்க வேண்டு மென்று நினைத்து என் மனதோடு நான் போராட்டம் நடத்தி வந்தேனே அந்தப் போராட்டம் வெற்றி பெறுமலிருக்கச் செய்து விட்டான். நான் தோற்றுப் போய்விட்டேன். தடுமாறி விழுந்து விட்டேன் பாபச் சேரியிலே. சித்தந் தடு மாறியது. பேதை நான் அவன் வலையில் விழுந்து போய்விட்டேன். அறிந்தும் அறியாமலே, தெரிந்தும் தெரியாமலே... நான் பெண்... ம்... மறக்க முயன்றாலும் முடியவில்லையே! நான் என்ன செய்வது.

பெண் இனத்தின் போர்வைக்குள்ளே மறைந்து கிடந்தாலும், என்னை உலகம் மறந்து விடவில்லை. இது நான் செய்த பாபம். பாபத்திற்காக தண்டனை யடைந் தேன், அநுபவித்தேன். விமோசனம் பெற்றேன். இருந்தும்கூட இன்னும் என்னைப்பற்றி என்ன வெல்லாமோ சொல்கிறார்கள். கல்லாக இருந்தபோது நான் கவலையற்றிருந்தேன். அதனால் தான் நினைக்கிறேன் காலமெல்லாம் கல் லாகவே இருந்திருக்கக் கூடாதா என்று. எந்தக் கோவிலாவது எனக்கு அப்போது அடைக்கலம் கொடுத்துக் காத்திருக்குமே! என்றுமே எழில் குறையாத நிறையுருவ மாக நின்றிருப்பேன். அதற்குக் கூடக் கொடுத்து வைக்கவில்லையே!

கேட்டாயா அவள் சொல்வதை? என்ன வோ ஏங்கித் துடித்தாயே அவளுக்காக. "காலமெல்லாம் கல்லாகவே இருந்திருக் கக் கூடாதா?" என்கிறாள். ம்... என்ன மோ, இந்தப் பெண்களே இப்படித்தான் அவள் சொல்வது உனக்குப் புதிதாக மட்டுமல்ல, புதிராகவு மிருக்கிறது. இல் லையா? உனக்கும் எனக்கும் அப்படித் தானிருக்கும். பெண் உள்ளத்தும், பெரு வெள்ளத்தின் அடியிலும் மறைந்திருக்கும் நீர்ச் சுழல்களை எங்கே பார்க்கிறோம்? மேலே எப்போதாவது தென்படும் நீர்க் குமிழிகளைத் தானே நாம் பார்க்கிறோம்!

அவளுடையது என்றுமே தீராத ஒரு பிரச்னை. உனக்கும் எனக்கும் புரியாதது. இதற்காக நீயேன் கஷ்டப்படுகிறாய்? போ, அவள் கங்கைக்குப் போகும் நேரம் வந்து விட்டது.

★

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

தா. நாகலிங்கம்

அத்தியாயம் இருபத்தொன்று

மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை வீட்டில் முத்துசாமி, விழாத்தலைவர் முதலியோருக்கு மத்தியான விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. அறுசுவை யுண்டி உண்டுவிட்டு சிவகுருநாத பிள்ளையும், முத்துசாமி முதலியோரும் சற்று சிரமபரிகாரம் செய்து கொண்டு மீண்டும் விழாப் பந்தலுக்குச் செல்லத் தயாரானர்கள். அதற்குள் அங்கு வந்த ஜெயா மீண்டும் முன்போல் அவர்களை விழாப்பந்தலுக்கு அழைத்துச் சென்ருள்.

மாதர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சிறுமிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் ஒரு அரைமணி நேரம் நடக்கும் என்றும், அதன்பின் மீண்டும் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும் சொல்லி தலைவர், முத்துசாமி ஆகியோரை மேடையின் முன் தனி நாற்காலிகள் போட வைத்து அதில் அமரச் செய்தாள் ஜெயா. சற்று நேரத்தில் கதம்ப நிகழ்ச்சிகள் ஆரம்பமாகத் தொடங்கின.

மேடையை மறைத்துக் கொண்டிருந்த திரை மெல்ல விலகிற்று. மலர் மாலைகளால் அலங்கரித்து வைக்கப்பட்ட ஒரு பெரிய கலைவாணி படத்தின் முன்னே சபையை நோக்கியபடி வீணையும் கையுமாக உட்கார்ந்திருந்தாள் ஒரு சிறுமி, தங்கப் பதுமை போல். பதுமையின் கை லேசாய் அசைந்தது. வீணையை மீட்டின ஒலி செவிகளில் ரீங்கார மிட்டது. ஆனந்த பைரவியின் சாயலைச் சற்றுக் காட்டி 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்' என்ற பாரதி பாடலை இனிமையாய்ப் பாடிக் கொண்டே வீணையை இசைத்தாள் சிறுமி. வீணைத் தந்திகளிலே அவளது சிவந்த விரல்கள் விளையாடின. வீணையின் நாதமும், அவள் குரலும் வேறுபாடின்றி ஒன்று கலந்து அச் சபையில் ஒரே நாத வெள்ளமாகப் பரவிற்று. சபையோர் மெய் மறந்து அந்த இசை வெள்ளத்தில் மிதந்தார்கள். அந்தப் பாட்டு முடிந்ததும் எழுந்த கரகோஷத்தினிடையே, விலகிய திரை மீண்டும் விழுந்தது!

ஒலி பெருக்கியிலிருந்து "அடுத்த நிகழ்ச்சி பாரதியின் கண்ணன் பாட்டிலிருந்து ஒரு சுவையான கட்டம்—கண்ணன்–என்–சேவகன்" என்ற குரல் கேட்டது! அடுத்துத் திரை விலகியது.

ஒரு திண்டில் சாய்ந்தபடி வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கும் ஒரு கனவான், வெற்றிலையை மென்று சுவைத்துக் கொண்டே "சே, சே! என்ன வீடு, என்ன வேலைக்காரர்கள்! இந்த வேலைக்காரர்களே இப்படித்தானே?" என்று தொடங்கி வேலைக்காரர்களையும், அவர்களின் குணதிசயங்களையும் பற்றி ஒரு புராணம் பாடுகிருர். புராணம் முடிந்தும் முடியாமலும் இருக்கும் போதே அடக்க ஒடுக்கமாக வந்த ஒருவன் கன

வானுக்கு ஒரு கும்பிடு போட்டு பணி வாக நிற்கிறான். அவனிடம் ஊர், பேர், விபரமெல்லாம் கேட்டு அவன் சொன்ன பதில்களால் திருப்தியுற்று, கண்ண னென்ற பெயருடைய அவனைத் தன் சேவகனாக — வேலைக்காரனாக — ஏற்றுக் கொள்கிறார் கனவான்.

காட்சி மாறுகிறது. வேலைக்காரனாக வந்த கண்ணனின் செல்வாக்கு உயர்ந்து அக்குடும்பத்தின் பிரதான புருஷனாகி விடுகிறான். குழந்தைகளுக்குத் தாயாகவும், ஆசானாகவும், வைத்தியனாகவும் உதவி புரிந்து நண்பனாய், மந்திரியாய் நின்று அக்கனவான் குடும்பத்தைக் கண்ணை இமை காப்பது போல் வண்ணமுறக் காக்கின்றான். அவனது கண்காணிப் பிலும், பராமரிப்பிலும் குடும்பத்தின் செழிப்பையும் மேன்மையையும் உணர்ந்து கண்ணனைத் தெய்வமாகப் போற்றுகிறார் கனவான். இரண்டாவது காட்சி இத்தோடு முடிந்து திரை விழுந்தது.

"திக்குத் தெரியாத காட்டில் — ஒரு இசைச் சித்திரம்" என்று அறிவித்தது ஒலி பரப்பி. திரை விலகியதும் 'திக்குத் தெரியாத காட்டில்' என்ற பாரதி பாடலை யாரோ கணீரென்ற குரலில் இனிமையாகப் பாடினார்கள். அதற்கு ஏற்றாற் போல் ஒரு சிறுமி கண்ணைப் பறிக்கும் வண்ண உடை யணிந்து அபிநயம் பிடித்து ஆடினாள்.

கால் கை சோர்ந்து விழுந்ததும் தோன்றிய வேடனைக் கண்டு அஞ்சும் கட்டத்திலும், அவனை அண்ணா முறை வைத்து நியாயம் சொல்லும் இடத்திலும், பிறகு வேடன் நின்ற இடத்தில் கண்ணனைக் கண்டு உள்ளம் பூரிப்பதுமான கட்டங்களில் சிறுமி பாவ பூரணமாக அபிநயம் பிடித்து, பலத்த 'அப்ளாஸ்' வாங்கினாள். இரண்டு நிமிஷத்தில் அதே காட்சி வேறொரு காட்சியாக மாறியது. உழவன் உழத்திகளாக வேடம் பூண்ட எழெட்டுச் சிறுமிகள் ஒன்று சேர்ந்து 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாடலுக்கு ஏற்றபடி அழகாக நடனமாடினார்கள். பாட்டும் அபிநயமும் முடிந்ததும் கொட்டகையில் எழுந்த ஆரவாரமும், கலகலப்பும் அந்தப் பந்தலையே அதிரச் செய்தன.

அதைத் தொடர்ந்து, "பெரியோர்களே, தாய்மார்களே! கதம்ப நிகழ்ச்சி இத்துடன் முடிவு பெற்றது. அடுத்தாற் போல் சொற்பொழிவுகள் இருக்கின்றன. ஸ்ரீ முத்துசாமி அவர்கள் பேசப் போகிறார்கள். இன்னும் சற்று நேரத்தில் சொற்பொழிவுகள் ஆரம்பமாகும். அது வரையில் சபையோர் அமைதியாக இருக்க வேண்டும்" என்ற ஜெயாவின் குரல் ஒலி பரப்பியில் ஒலித்தது.

சிலர் "இனியென்ன சொற்பொழிவு வேண்டியிருக்கிறது?" என்று எழுந்து பந்தலை விட்டு வெளியே சென்றனர். வேறு சிலர் பந்தலை விட்டு எழுந்து சென்றவர்கள் முத்துசாமியின் பிரசங்கம் இருக்கிறது என்பதைக் கேட்டுத் திரும்பி வந்து முன்னிடம் தேடி உட்கார்ந்தனர். பந்தலில் ஏற்பட்ட இரைச்சல் அடங்க பத்து நிமிஷத்துக்கு மேலாயிற்று. மேடை மேல் மேஜை நாற்காலிகள் முன் போல் போடப்பட்டன. சிவகுருநாத பிள்ளையும், முத்துசாமி முதலியோரும் எழுந்து மேடைக்குச் சென்று தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர்.

ஜெயா முன் வந்து, "பெரியோர்களே, நமது தலைவர் பேராசிரியர் சிவகுருநாத பிள்ளை அவர்கள் தலைமையில் இதோ, மீண்டும் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. பாரதி படத் திறப்பு விழா அடுத்தபடியாக நடைபெற வேண்டியிருக்கிறது. அதற்கிடையே இந்த விழாவுக்கு காரணஸ்தர்களான இந்த ஜெவந்திபுர மாதர் முன்னேற்றக் கழகத்தாரைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அதன் காரியதரிசி என்ற முறையில்" என்று ஆரம்பித்து கழகத்தின் தோற்றம், நடைமுறை, வளர்ச்சி இவைகளைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

தலைவர் எழுந்து அன்றைய கதம்ப நிகழ்ச்சிகளின் சிறப்பைப் பற்றி அபாரமாக வர்ணித்து விட்டு அதன் தயாரிப்பு விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்ட ஒவ்வொருவரையும் மனமாரப் புகழ்ந்து பாராட்டினார். பின் மகாகவி பாரதியாரின் படத்தைத் திறந்து வைக்கும்படி மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

படத்தைத் திறந்து வைக்க எழுந்த செல்வநாயகம் பிள்ளை, 'பாரதியாரின்

படத்தைத் திறந்து வைக்க, பாரதி பக்தன் என்ற ஒரு உரிமையைத் தவிர வேறு உரிமை தனக்குக் கிடையாதென்றும், பாரதி கண்ட எத்தனையோ கனவுகள் இன்னும் பலிக்கவில்லை என்றும், அவை விரைவில் பலிக்கும் நல்ல காலம் நெருங்கி வருகிறதென்றும், பாரதி பாடலை எல்லோரும் பாட வேண்டும் என்றும் குறிப்பிட்டு விட்டு மேடையின் அருகே ஒரு புறமாக வைக்கப்பட்டிருந்த பாரதி படத்தைத் திறந்து வைத்து, தமக்கு அத்தகைய ஒரு பாக்கிய மளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தம் இடத்திற்குச் சென்று அமர்ந்தார்.

அடுத்தபடியாகத் தலைவர் முத்துசாமியைப் பற்றி சுருக்கமாகவும், அழகாகவும் அறிமுகம் செய்து வைத்து அவரைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

முத்துசாமி எழுந்து மைக்கின் முன் வந்ததும் கரகோஷம் எழுந்தது சபையில். அவர் பேச ஆரம்பித்ததும் கழுத்தில் மாலை விழுந்ததை யொட்டி அதே கரகோஷம் இரட்டித்தது. கரகோஷத்தைப் பணிவுடன் ஏற்றுக் கொண்டு பேச ஆரம்பித்தார் முத்துசாமி.

"இன்று அதிகாலை முதல் என் மனம் எங்கோ கனவுலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. பாரதி ஜெயந்தி விழாவாகிய இந்த விழாவின் ஆரம்பத்தி லிருந்து எங்கும் பாரதி மணம் கமழ்வதை உணர்கிறேன். உண்மையிலேயே வேறு எந்த இடத்திலும் இதுபோல் பாரதி விழாக் கொண்டாட முடியாது என்பது என் திடமான நம்பிக்கை."

இப்படிச் சொன்ன போது எழுந்த கரகோஷம் அந்தக் கொட்டகையையே ஒரு உலுக்கு உலுக்கிற்று. முத்துசாமி பேச்சை மீண்டும் தொடர்ந்து பாரதியார் யார் என்பதைப் பற்றியும், அவரது வரலாற்றைப் பற்றியும் சுருக்கமாகவும் உருக்கமாகவும் குறிப்பிட்டு விட்டு, அவரது கவிதா நயம் பற்றியும், அதன் உயர்வு பற்றியும் விரிவாகப் பேசினர். பாரதியாரது தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, குயில் பாட்டு முதலிய பகுதிகள் பற்றிப் பேசிய போது அங்கங்கே உதாரணங்களாக சில பாடல்களை உணர்ச்சியுடன் அனுபவித்து இனிமையாகப் பாடிக் காட்டிப் பல முறை கரகோஷம் பெற்றுர் முத்துசாமி. கடைசியாக பாஞ்சாலி சபதத்தில் திரௌபதி ஆடை குலைவுற்று நிற்கும் பகுதி முதல் சபதக் கட்டம் வரை உள்ள பகுதியின் சிறப்பைப் பற்றி வர்ணித்து விட்டு அப்பகுதியை ஓங்கிய குரலில் உணர்ச்சி ததும்பச் சொல்லிய போது சபையோர் வைத்த கண் வாங்காமல், திறந்த வாய் மூடாமல் மகுடியின் நாதத்தில் மயங்கி நிற்கும் நாகம் போல் மெய்மறந்து அனுபவித்தார்கள். அந்தச் சமயத்தில் முத்துசாமி தாழ்ந்த குரலில் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு பிரசங்கத்தை முடித்துக் கொண்டதைக் கூட சற்று நேரத்திற்குப் பிறகுதான் சபையோர் தெரிந்துகொள்ள முடிந்தது. முத்துசாமி அப்படிப் பிரசங்கத்தைச் சீக்கிரம் முடித்துக் கொண்டது- முத்துசாமி ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் பேசியும் கூட - பலருக்கு ரொம்பவும் ஏமாற்றமளித்தது. 'இன்னும் கொஞ்ச நேரம் பேசியிருக்கலாமே அவர்' என்று சிலர் அங்கலாய்த்துக் கொண்டார்கள். மூலைக்கு மூலை பிரசங்கத்தைப் பற்றிய அபிப்பிராயங்கள் பரவி கொட்டகையில் கலகலப்பை ஏற்படுத்தின. "அடுத்தபடியாக திருமதி கற்பகவல்லி அம்மாள் அவர்கள் பேசுவார்கள்" என்ற தலைவரின் அறிவிப்பு, பந்தலின் கலகலப்பைக் கலைத்துக் கொண்டு மேலெழுந்தது.

'ஒரு நல்ல பிரசங்கம் கேட்டாயிற்று. இனி யார் பேசினல் என்ன' என்று எழுந்தவர்கள் ஒரு திருமதி பேசுகிருர் என்று அறிந்ததும் அவரைப் பார்க்கவும், அவர் எப்படித்தான் பேசுகிருர் என்று தெரிந்துகொள்ளவும் சற்று நிதானித்து உட்கார்ந்தார்கள்.

திருமதி கற்பகவல்லி மைக்கின் முன் வந்து பேச ஆரம்பித்தார். அதற்குள் கழுத்தில் விழ வந்த மாலையைக் கையில் வாங்கி மேஜை மேல் வைத்துவிட்டு, "தலைவரவர்களே, பெரியோர்களே! பாட்டுக்கு ஒரு புலவனை பாரதியாரைப் பற்றி ஏதாவது பேச வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தது உண்மை. ஆனல் அது எனக்கு முன் பேசிய ஸ்ரீ முத்துசாமி அவர்கள் பேசுவதற்கு முன். அவர் பேசிய பின் நான் பேச வேண்டிய அவசியம் கொஞ்சங்கூட ஏற்படவில்லை. பாரதியாரைப் பற்றி நான் அவருக்கு

மேல் அறிந்தவளல்ல. பாரதியாரைப் பற்றி ஸ்ரீ முத்துசாமியைப் போல் எனக்குப் பேசவும் தெரியாது, பேசவும் முடியாது. ஸ்ரீ முத்துசாமி யவர்களைத் தவிர வேறு யாரும் பாரதியாரைப் பற்றி இவ்வளவு சிறப்பாக, அருமையாக, ஆனந்தமாகப் பேச முடியாது என்பது என் தாழ்மையான எண்ணம். ஆக எனது பேச்சை இத்துடன் முடித்துக் கொள்வதுடன், எனக்கு இங்கு பேச சந்தர்ப்பமளித்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்று தமது பேச்சை முடித்துக் கரகோஷம் வாங்கினார் திருமதி கற்பகவல்லி.

''பரவாயில்லை. இந்தப் பெண்களே இப்படித்தான்! எப்படியோ சமயோஜிதமாய்ப் பேசி, நடந்து நல்ல பெயர் வாங்கிக் கொள்கிறார்கள்'' என்றார் ஒருவர்.

''பேச்சை வெட்டியாக வளர்த்தாது ரத்தனச் சுருக்கமாக முடித்துக் கொண்டாரே இந்த அம்மையார்!'' என்று வியந்தார் மற்றொருவர்.

வேறொருவர் ''அதெல்லாம் ஒன்றுமில்லை! முத்துசாமி அவர்களின் பிரசங்கத்திற்குப் பிறகு இந்த அம்மாளின் பிரசங்கம் – அது எவ்வளவு நன்றாக இருந்தாலும் சரி-எடுக்காது என்பது அந்த அம்மாளுக்கே நன்றாகத் தெரியும். அதனால் தான் சாமர்த்தியமாக இரண்டே நிமிஷத்தில் பேச்சை முடித்துக் கொண்டார்'' என்று தமது மேலான அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

இந்த அபிப்பிராயப் பறிமாறல்களுக்கிடையே தலைவர் எழுந்திருந்து ''அன்பர்களே, அடுத்தாற் போல் பேசவிருந்த நண்பர்கள், ஸ்ரீ முத்துசாமி பேசிய பிறகு தாங்கள் பேச வேண்டிய அவசியமே இல்லை என்று பேச மறுத்து விட்டார்களாதலால் தலைவர் முடிவுரை என்ற கட்டத்திற்கு நாம் போக வேண்டியிருக்கிறது'' என்று தமது முடிவுரையை ஆரம்பித்து பாரதி திருவிழா முற்றிலும் பாரதி மணம் கமழ சிறப்பாக நடந்தது பற்றியும் அதில் கலந்து கொண்டவர்களைப் பற்றியும் குறிப்பிட்டு, தமக்கு விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமளித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்து விட்டு கடைசியில் அடுத்தாற் போல் திருமதி சம்பூர்ணம் கோஷ்டியாரால் இசையரங்கு நடைபெறப் போகிறது என்றும் அதில் ஆரம்ப முதல் முடிவு வரையில் முழுதும் பாரதி பாடல்கள் பாடப் பெறுவது குறிப்பிடத்தக்க விசேஷம் என்றும், எல்லோரும் இருந்து அனுபவித்து விட்டுப் போக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு தமது முடிவுரையை முடித்து கரகோஷத்திடையே தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

அடுத்தபடியாக மாதர் முன்னேற்றக் கழகக் காரியதரிசி ஜெயாபாய் விரிவாக வந்தனோபசாரம் கூறுகையில் பாலிலிருந்து பச்சைத் தண்ணி வரையில் அந்த விழாவுக்குக் கொடுத்து உதவியவர்களைப் பற்றியும், விழா சிறப்பாக நடைபெற எல்லா வகையிலும் ஒத்துழைத்து ஆதரவளித்தவர்கள் பற்றியும், குறிப்பிட்டு, விழாவுக்கு வந்து சிறப்பித்த எல்லோருக்கும் நன்றி செலுத்தி பலத்த கரகோஷம் வாங்கிச் சென்றார்.

இரவு எட்டரை மணிக்கு ''வாழிய செந்தமிழ்'' என்ற மங்களத்துடன் முடிவடைந்த சம்பூர்ணம் கோஷ்டியாரின் இசை விருந்தோடு பாரதி ஜெயந்தி விழா இனிது முடிவுற்றது.

மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை 'தாம் பாரதியாரைப் பற்றிப் பலர் பேசக் கேட்டிருப்பதாகவும் ஆனால் அதுவரையில் ஸ்ரீ முத்துசாமியின் பிரசங்கத்தைப் போல் வேறொருவரும் பேசவில்லை' என்றும் சொல்லி முத்துசாமியைப் பாராட்டியதோடு, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர் அடிக்கடி ஜெவந்திபுரத்துக்கு வந்து செல்ல வேண்டும் என்றும் விநயமாகக் கேட்டுக் கொண்டார் அன்று இரவும் அவர் வீட்டிலேயே முத்துசாமி முதலியோருக்கு தடபுடலான . விருந்து நடைபெற்றது. விருந்துச் சாப்பாட்டுக்குப் பின் பத்தரை மணி வண்டிக்குக் கிளம்பிய சிவகுருநாத பிள்ளையையும், முத்துசாமியையும் செல்வநாயகம், ஜெயாபாய், மற்றும் மாதர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சிலர் ஆகியோர் மாலைகள் போட்டுப் பாராட்டி 'ஜே' கோஷம் போட்டு வழியனுப்பினார்கள். பாரதி விழா பற்றிய எண்ணங்களே நிறைந்து வழிந்த நெஞ்சத்துடன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டார்கள் முத்துசாமியும், சிவகுருநாத பிள்ளையும். ஒரு முறை கீச்சிட்டுவிட்டு திருநெல்வேலி ஜங்ஷனை விட்டுக் கிளம்பியது ரயில்!

(தொடரும்)

●

சுதந்திரச் சுழல்: ஆசிரியர்: என். ஆர். பத்மநாபன்; பிரசுரம்: அருள் நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா; விலை: ரூ. 5—0—0.

இந்திய மக்களின் பெரு மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான இந்தியத் தலைவர்களில் நேத்தாஜி சுபாஷ் பாபு முதன்மையாய்க் குறிப்பிடத் தகுந்தவர். அவரது தேச வெறியும், சுதந்திர உணர்ச்சியும் எத்தனை எத்தனையோ இளைஞர்களையும், பெண் திலகங்களையும் வீறு கொண்டெழ வைத்திருக்கிறது. அத்தகைய ஒரு வீர புருஷனின் வாழ்க்கைச் சித்திரத்தை, அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க சம்பவங்களை நல்ல முறையில் ஆராய்ந்து தொகுக்கப்பட்டிருக்கும் அரிய அரசியல் பொக்கிஷம் இந்நூல். சரளமான நடையில் அங்கங்கே உணர்ச்சி ததும்பும் வகையில் இதனை எழுதியிருக்கிறார் இதன் ஆசிரியர் என். ஆர். பத்மநாபன். நேத்தாஜி தொடர்புடைய சில நல்ல புகைப்படங்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

●

பகவத் கீதை. தமிழாக்கம்: சுத்தானந்த பாரதியார்; பிரசுரம்: புதுயுக நிலையம், புதுச்சேரி; விலை: ரூ 1—4—0.

வாழ்வுப் போரை வென்று மனிதன் பேரின்பம் பெறும் வழியைக் கண்ணன் காட்டினான் அர்ஜுனனுக்கு. அதைத் தெளிவாகச் சொல்லும் நூல் பகவத் கீதை ஒன்று தான். அதை நமது தாய் மொழியில் மூலத்தின் சுவை அணுவளவும் குன்றாமல் நமக்கு மொழி பெயர்த்துத் தருகின்றார் சுத்தானந்த பாரதியார் அவர்கள். இதற்கு முன் பகவத் கீதையைப் பலர் மொழி பெயர்த்திருந்தாலும், அவையெல்லாம் சுத்தானந்தர் உருவாக்கியிருக்கும் இந்நூலுக்கு நிகராகாது என்று துணிந்து சொல்ல முடிகிறது.

●

மின்னொளி. ஆசிரியர்: சரஸ்வதி தியாகராஜன்; பிரசுரம்: ரமணா பிரசுராலயம், 49, சர் தியாகராயா ரோடு, தியாகராய நகர், சென்னை 17; விலை: ரூ 2-0-0

உள்ள உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் நல்ல சிறு கதைகள் எழுதுபவர் சரஸ்வதி தியாகராஜன். அவர் அவ்வப்போது எழுதிய எட்டுக் கதைகளின் தொகுப்பே இப்புத்தகம். இத்தொகுதியில் வெளி வந்திருக்கும் கதைகளில் 'மின்னொளி' 'வெற்றி.' 'விதியின் செயலா' என்ற மூன்றும் குறிப்பிடத்தக்கவை.

●

குண்டூசி. ஆசிரியர்: 'குண்டூசி' (பி. ஆர். எஸ். கோபால்); காரியாலயம்: தியாகராய நகர், சென்னை விலை: ரூ 0—8—0.

தமிழ் சினிமா உலகிற்கு வெகு காலமாகவே நல்ல முறையில் சேவை செய்து வருபவர் சினிமா அனுபவம் மிக்க 'குண்டூசி' என்ற புனை பெயரில் பதுங்கியிருக்கும் பி. ஆர். எஸ். கோபால் அவர்கள். அவரது புனைபெயரிலேயே அவர் ஆரம்பித்திருக்கும் 'குண்டூசி' யின் முதல் ஊசி சிறந்த முறையில் நிறைந்த விஷயங்களைத் தாங்கி வெளி வந்திருக்கிறது. 'பாவுறமா பானுமதி,' ரசிக்கத்தக்க சுவையான வாழ்க்கைச் சித்திரம். 'குண்டூசி டைரி' வரவேற்கத்தக்க புது அம்சம். 'குண்டூசி' க்கு வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம்.



முழுதாக ஒரு வருஷம் ஓடி விட்டிருந்தும் அந்த சம்பவம் இன்று தான் நடந்தது போலிருந்தது. பசு மரத்தில் பதித்த ஆணி போல் அது என் மனதில் பதிந்து விட்டிருந்தது.

வழக்கறிஞர்களின் கழகத்து வருஷாந்திர விழாவை அன்று கொண்டாட ஏற்பாடாகியிருந்தது. அரசியல் பிரமுகர் ஒருவர் வருகையை ஒட்டி அந்த விழாவை வைத்துக் கொண்டதால், ஏற்பாடுகளெல்லாம் தடபுடலாகவே செய்யப் பட்டிருந்தன. காரியதரிசி கனகசபை, தான் நேராக நின்றே எல்லாக் காரியங்களையும் மேற் பார்வையிட்டு விட்டு, உப காரிய தரிசி கல்யாண சுந்தரத்தின் வருகைக்காக காத்திருந்தார். விழாவை ஐந்து மணிக்கு ஆரம்பிக்க நிச்சயமாகியிருந்தது. சுமார் நாலரை மணி ஆனதுமே அங்கத்தினர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். சில நிமிஷங்களில் சபை நிரம்பி விட்டது. தலைவர் வரவேண்டியது தான் பாக்கி. கனக சபை முகத்தில் பரபரப்பு தென்பட்டது. கல்யாணம் வந்திருக்கிறாரா என்று சுற்று முற்றும் பார்த்தார். கூட்ட ஆரம்பத்திலேயே சென்ற வருஷ நிர்வாக அறிக்கையைப் படிக்க வேண்டியது, உப காரியதரிசியின் வேலையாக நிகழ்ச்சிக் குறிப்பில் போடப்பட்டிருந்தது. கனக சபை என்னைக் கூப்பிட்டார். "சாம்பசிவம்! கல்யாணத்தின் வீட்டிற்கு ஒரு ஆளை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் நேரமாகிறது" என்றார்.

சரி என்று தலையை அசைத்து விட்டு ஹாலை விட்டு வெளியே வந்ததும், அங்கு கல்யாணத்தின் வீட்டு வேலைக்காரனை நின்று கொண்டிருந்தது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. "டேய்! உங்க யஜமான் எங்கேடா?" என்று அவனைக் கேட்டேன். நடு நடுங்கும் குரலில் "ஐயா! ஒரு அவசர விஷயம். கனக சபை எங்கே இருக்காங்க?" என்று எனக்கு பதில் கேள்வி போட்டான் அவன். அவன் முகத்தை உற்று நோக்கினேன். ஏதோ பேய் பிசாசைக் கண்டு அரண்டு போனவன் போலிருந்தான். முகம் வெளிறிப் போய் ரத்தமே இல்லாமல் இருந்தது. அந்த பயந்த

முகம் எனக்குச் சற்று அதிர்ச்சியைக் கொடுத்தது. கனக சபை இருந்த இடத்தை சுட்டிக் காண்பித்து விட்டு, அவனைப் பின் தொடர்ந்தேன். அவன் சொல்லப் போகும் அவசர விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அடக்க முடியாத ஓர் ஆவல். அவசரமாகத் திரும்பும் என்னை அட்வகேட் விநாயகராவ் பிடித்துக் கொண்டார். என்றைக்கோ சிலருடன் தள்ளப்பட்ட ஓர் அப்பீல் கேசைப் பற்றி அபிப்பிராயம் கேட்க, கை காட்டியை இழுக்காமல், எக்ஸ்பிரஸ் வண்டியைக் காக்க வைக்கும் சின்ன ஸ்டேஷன் போல என்னை நிறுத்தி விட்டார். அவரைத் தட்டிக் கழித்து கனக சபையை அணுகுவதற்குள் ஐந்து நிமிஷங்கள் ஆகி விட்டிருந்தன,

கனக சபையின் முகத்தைப் பார்த்தேன். கல்யாணத்தின் வேலைக்காரன் முகத்திலிருந்த பயங்கரக் குறிகளெல்லாம் கனகசபை முகத்திலும் பரவியிருந்தது. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் தான் முதலில் பேசினார். "சாம்பசிவம்! இன்றைய விழாவை நடத்தும் பொறுப்பு முழுதும் உன் தலையில் தான் விழுந்திருக்கிறது. தவிர்க்க முடியாத ஓர் அவசர காரியத்தினால் நான் வெளியே போக வேண்டியிருக்கிறது. என் ஸ்தானத்திலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள். கல்யாணமும் வரமாட்டான். சென்ற வருஷத்து அறிக்கையை நீயே படித்துவிடு. நான் இருக்க முடியாததற்காக சபையோரிடமும் தலைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள். விழா கொஞ்சம் கூட விக்கினமின்றி நடக்கட்டும்" என்று சொல்லிவிட்டு கல்யாணத்தின் வேலைக்காரனைப் பின் தொடரும்படி சமிக்ஞை செய்து விட்டு நகர ஆரம்பித்தார். மிகவும் முக்கியமான விஷயமாய் இல்லாவிட்டால் கனக சபை இந்த மாதிரி போக மாட்டார் என்பது நிச்சயம். அவர் முகத்தைப் பார்த்த போது அந்த முக்ய சம்பவம் ஓர் பயங்கரமான சம்பவமாகவும் இருக்கலாம் என்று தோன்றியது. அவர் கூடவே இரண்டு எட்டுகள் நடந்தேன். "கனகசபை! என்ன விஷயம்? என்னிடம் சொல்லி தங்கள் மனப் பாரத்தைக் குறைத்துக் கொள்ளலாமா?" என்று இரக்கம் த்வனிக்கும் குரலில் தயக்கத்துடன் கேட்டேன். அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! சுற்று முற்றும் பார்த்தார். காதோடு காதாய் என்னிடம் சில வார்த்தைகள் சொன்னார். அவ்வளவு தான்! என் தலை சுற்றியது. பிரமிப்பிலாழ்ந்தேன். நான் பிரமையிலிருந்து விடுபடு முன்பு, கனகசபை வெகு தூரம் போய் விட்டிருந்தார். அந்த சமயத்தில் என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தால் நான் பயந்து அலறியிருப்பேன். அத்தனை பயங்கரமான விஷயத்தைத் தான் கனகசபை என் காதுகளில் போட்டிருந்தார்.

முகத்தை கழுவிக் கொண்டு பலவந்தமாக புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு மற்ற காரியங்களில் ஈடுபட்டேன். அன்று ஓர் நீண்ட பிரசங்கம் செய்ய இருந்த கணேசய்யரிடம் போய், சில காரணங்களை முன்னிட்டு, பிரசங்கத்தை வெகுவாகக் குறுக்கிக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டேன். நிகழ்ச்சிக்குறிப்பில் இடையிலுள்ள இரண்டொரு இடை வேளை சங்கீதங்களை நீக்கினேன். ஒரு தினுசாக கூட்டம் முடிந்தது. அனேகம்பேர்களுக்கு, கனகசபையும் கல்யாணமும் வராமலிருந்தது மன்னிக்க முடியாத குற்றம் போல் தோன்றியது. ஆனால் ஒருவருக்கும் காரணம் தெரியவில்லை. இவ்வளவு பொறுப்பற்ற நபர்களை அடுத்த வருஷ தேர்தலில் நிற்க விடக் கூடாது என்று சிலர் பேசிக் கொண்டது கூட என் காதில் விழுந்தது.

தலைவருக்கு உபசார வார்த்தைகள் கூறி அனுப்பி விட்டு, அவசரம் அவசரமாக என் காரை கல்யாணத்தின் வீட்டை நோக்கி ஓட்டினேன். போகும் வழியில் என் நண்பர் டாக்டர் கங்காராமையும், கூட காரில் ஏற்றிக் கொண்டேன். கல்யாணத்திற்கு ஏதோ உடம்பு சரியாக இல்லை என்று மாத்திரம் சொன்னேனே தவிற வேறொன்றும் சொல்லவில்லை. கல்யாணத்தின் வீட்டை அடைந்த போது, வாசலில் நின்று கொண்டிருந்த வேலைக்காரன், வாய் திறந்து பேசாமல் எங்களை மாடி ஹாலுக்கு அழைத்துக் கொண்டு போனான். வீட்டில் அசாதாரண அமைதி நிலவிற்று. மாடியில் கட்டிலில் படுத்திருந்த கல்யாணத்திற்கு அருகில் சிந்தனையிலாழ்ந்திருந்த கனகசபை உட்கார்ந்திருந்தார். சற்று தூரத்திலிருந்து பார்க்கும் போதே கல்யாணம், இனிமேல் விழித்துக்கொள்ள முடியாத தூக்கத்தை

அடைந்து விட்டான் என்று தெரிந்தது, சற்று வேகமாகவே கட்டிலை நோக்கி நடந்த கங்காராம் திடுக்கிட்டு நின்றார். "என்ன சாம்பசிவம்! அப்போதே சொல்லக் கூடாதா! விஷயம் முடிந்து போய் மணிக்கணக்கிலாகியிருக்கும் போலிருக்கிறதே" என்றார். "ஆமாம்! மூன்று கிராம் பொட்டாசியம் சயனைட். 'வாழ்க்கை ரசிக்க வில்லை' என்று மாத்திரம் எழுதி வைத்திருக்கிறான்." என்று நிதானமாக பதிலளித்தார் கனகசபை. அவர் கையில் ஏதோ காகிதத் துண்டு கசங்கிப் போய் இருந்தது.

"கனகாம்பரத்திற்கு ஆள் அனுப்பியிருக்கிறீர்களா? அல்லது போன் செய்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன் நான். திகைப்படைந்த கங்காராம் எங்கள் சம்பாஷணையை கவனித்தவாறே பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். "நம்பிக்கைக்குப் பாத்திரமான வேறு வேலையாள் இல்லாததால். ஸ்டுடியோவிற்கு போன் செய்தேன். ஸ்டுடியோ முதலாளியே பேசினார். 'கனகாம்பரத்தை உடனே அனுப்பவும். மிக

வும் அவசரம்' என்று மாத்திரம் சொன்னேன். படப் பிடிப்பு மிகவும் முக்கியமான கட்டத்திலிருந்த போதிலும், எப்படியும் இன்னும் அரைமணி நேரத்திற்குள், அவனை அனுப்ப ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். மேலும் வற்புறுத்தி வீண் சந்தேகங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாமென்று போனை வைத்து விட்டேன். நீ இப்போது கீழ் ஹாலில் போய் உட்கார்ந்திரு. அவள் வந்ததும், அவள் மனோ நிலைக்குத் தகுந்தாற் போல், விஷயத்தைச் சொல்லி, மனதை திடப்படுத்தி இங்கே அழைத்துவா. நேராக இங்கு வந்தால் அவளுக்கு பகர்தான அதிர்ச்சி ஏற்படும்'' என்றார் கனகசபை. கழக விழாவைப் பற்றி அவர் ஒரு வார்த்தை கூடக் கேட்காதது ஆச்சர்யமாக இருந்தது. கனகாம்பரத்திற்கு இந்த விஷயம் அதிர்ச்சி அளிக்கும் என்று இவர் நினைத்ததில் ஆச்சர்யம் இல்லை. ஏனென்றால், கனகாம்பரத்தின் மனோபாவம் அவருக்கு தெரியாது.

கங்காராமையும் கனகசபையையும் தனியே விட்டு விட்டு கீழே ஹாலுக்கு வந்தேன். அங்குள்ள சோபாவில் பிரமை பிடித்தாற் போல் உட்கார்ந்து விட்டேன்.



கல்யாணம் எங்கள் ஆப்த நண்பன். நான், கல்யாணம், கனகசபை, மூவரும் ஒன்ருகப் படித்து ஒன்ருக வக்கீல் தொழில் செய்ய ஆரம்பித்தவர்கள். கனக சபையும் கல்யாணமும் தூர பந்துக்கள். வெகு நாட்கள் கழித்து கல்யாணம், தன் நிலைக்கு, மீறிய ஒரு பெரிய இடத்துப் பெண்ணை கல்யாணம் செய்து கொண்டான். கனகவல்லி அழகி தான். அத்துடன் நல்ல குணமுள்ளவளாகத் தானிருந்தாள். ஆனல் அவளை, "நீ அழகி! அழகி!" என்று மிதமிஞ்சிய முகஸ்துதி செய்து அவளுக்கு, கர்வத்தையும் அகம்பாவத்தையும் அதிகரிக்கச் செய்தான். கடைசியில் அவள் அழகு வீணுகப் போகக் கூடாது என்று, அவளை வற்புறுத்தி அவளை சினிமாவில் நடிக்கச் செய்தான். கணவனுக்கு அடங்கிப் பணிவாய்க் குடித்தனம் நடத்தி வந்த கனகவல்லி, ஒரே நாளில் பிரபல சினிமா நடிகை கனகாம்பரமாக பிரகாசிக்க ஆரம்பித்தாள். மனைவியின் புகழ் தனக்கு மகத்தான பெருமையளிக்கும் என்ற முழு நம்பிக்கையில் தான் அவன் அவளை சினிமா வானில் நக்ஷத்திரமாக மாற்றினன். ஆனல் அவள் புகழை யாரோ அனமதேய டைரக்டர்களும், முதலாளிகளும் பங்கு போட்டுக் கொள்ள, சமூகமும், ரசிகர்களும் அனுமதித்தார்களே ஒழிய, அவள் கணவனுக்கு எள்ளளவு பெருமையைக் கூட மறுத்தனர். மனமுடைந்த கல்யாணம், கனகாம்பரத்தை பழைய கனகவல்லியாக்க முயன்ருன். ஆனல் கனகாம்பரம் அந்த மாறுதலுக்கு தயாராக இல்லை. அவள் இன்னும் ஒரு படி முன்னேறினள். அவள் புகழ் ஏணியில் கல்யாணத்தை ஓர் உடைந்த இடைக் கட்டையாகக் கருதினள்.

அன்று ஒரு நாள், சமீபத்தில் தான், கல்யாணத்தை, தொழில் முறையில் சந்திக்க அவன் வீட்டிற்குப் போயிருந்தேன். எங்கள் அன்யோன்ய நட்பின் காரணமாக, நான் எப்போதும் முன்னறிவிப்பில்லாமலே வீட்டினுள் போவேன். அன்று மாடிப் படிகளில் ஏறும் போதே, மாடி ஹாலிலிருந்து வந்த சப்தத்தினல், கல்யாணமும் கனகாம்பரமும் எதைக் குறித்தோ தீவிரமாக சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள் என்று புலப்பட்டது. அவர்கள் தாம்பத்ய சண்டைகளையும், ரகஸ்யங்களையும், ஒரு நாளும் தெரிந்து கொள்ள விரும்பாத நான். அன்று என்னையறியாமலேயே சில நிமிஷங்கள் அவர்கள் விவாதத்தைக் கேட்டுக் கொண்டு நின்று விட்டேன். உள்ளிருந்து வார்த்தைகள் வெகு தெளிவாக என் காதில் விழுந்தன.

"நான் ஒரு தீர்மானமான முடிவிற்கு வந்து விட்டேன்" என்ருள் கனகாம்பரம்.

"எந்த விதமான முடிவு? கனகா!" இது கல்யாணத்தின் கேள்வி.

"நான் சொன்ன பின் நீங்கள் வருந்திப் பயனில்லை"

"எப்படி இருந்தாலும் சொல்லி விடு"

"நீங்கள் என்னிடமிருந்து பிரிந்து போக வேண்டியது தான்."

"என்ன! என்ன! நான் உன்னை விட்டுப் போவதா? நான் உன் கணவன். அக்னி சாட்சியாக உன்னை மணந்தவன் என்பதைக் கூட மறந்து விட்டாயா?"

"இல்லை! அது நன்ருக ஞாபகமிருக்கிறது. அந்த ஞாபகத்துடன் தான் சொல்லுகிறேன்."

"உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக நாம் வாழ்க்கை நடத்தியதையும், உன்னை என் தெய்வமாக இதயத்தில் வைத்து பூஜித்ததையும் சற்று சிந்தித்துப் பார் கனகா!"

"காலம் ஒரே நிலையிலில்லை! மாறிக் கொண்டே இருக்கிறது என்பது தங்களுக்குத் தெரியுமே!"

"உன் நெஞ்சம் அவ்வளவு கடினமா?"

"ஆம். என் புகழ் ஏணியின் நடுவே, எந்த விதமான கடின இடையூறு இருந்தாலும், அதைக் கடந்து தான் தீரவேண்டியிருக்கிறது."

"நீ புகழ் ஏணியில் ஏற உதவி செய்தது நான் என்பதற்காகவாவது, உனக்கு எள்ளளவு நன்றியுணர்ச்சி கிடையாதா? நான் அனுமதித்திராவிட்டால் நீ புகழ் ஏணியில் காலைவைத்திருக்க முடியுமா?"

"அந்தச் சிறு உதவிக்காக, நான் என்றென்றைக்கும் தங்கள் அடிமையாக இருக்க விரும்புகிறீர்களா?"

" தர்ம சாஸ்திரத்தின்படி மனைவி, கணவனுக்கு அன்புத்தளையால் கட்டப்பட்ட அடிமை "

" புதுமை என்னும் கோடாலியினால் அந்த அன்புத்தளை தறிக்கப்பட்டால்? "

" அப்படியானால் நீ என்னை நேசிக்கவில்லையா? "

" அது வேறு கேள்வி! புகழ், கணவன், இரண்டிலும் நான்புகழைத்தான் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன் "

" இரண்டையும் அடைவதில் உனக்கு என்ன கஷ்டம் கனகா? "

" இரண்டும் ஜன்ம வைரிகள்! "

" உன்னை நட்சத்திரமாக்கியது நான் தானே கனகா? "

" அது உங்கள் தவறு. உடல் அப்படியே இருந்தாலும், உள்ளம் மாறி விடும் என்று தெரிந்து கொள்ளாதது உங்கள் பிசகு! அந்த பிசகை இப்போது திருத்திக் கொள்ள இயலாது. "

" சமூகத்தில் நாலு பேர் இகழ்ச்சிக்கு ஆளாக விரும்புகிறாயா? "

" அந்தக் குறிப்பிட்ட நாலு பேர்களைத் தவிற மீதி உள்ளவர்களின் புகழ்ச்சிக்குப் பாத்திரமாக விரும்புகிறேன். "

" அந்தப் புகழ்ச்சிக்காக கட்டின கணவனைத் தியாகம் செய்யப் போகிறாயா? "

" இதற்குப் பெயர் தியாகமில்லை. ஆசைக் கோளாறு. அதற்கு அஸ்திவாரம் தாங்கள். "

" என் மனைவி சினிமா நக்ஷத்திரம் ஆக வேண்டும் என்று நான் ஆசைப்பட்டது தவறா? "

" அது தவறு என்று அப்போது தெரியவல்லை. ஆனால் அவள் எப்போதும் உங்கள் விருப்பத்தின்படி நடக்க வேண்டுமென்று நினைப்பது தவறு. "

" என்னையே உன் தெய்வமாக கருதி வந்த நீ, உன் மனதை மாற்றிக் கொண்டதற்குக் காரணம்? "

" தாங்கள் கொடுத்த இடம். அடைந்துகிடந்த என்னை அம்பலத்திற்குக் கொண்டு வந்த ஆர்வம்? சினிமா உலகமே குடும்ப ஸ்திரீகளால் புனருத்தாரணம் ஆக வேண்டுமென்ற தங்கள் விருப்பம்; ஆசையென்னும் அகோரப் பேயை, என் இதயத்தினுள்ளே எங்கோ அமுங்கிக் கிடந்த பிசாசை, வெளியே அவிழ்த்து விட்டீர்கள். அது விஸ்வ ரூபம் எடுத்து விட்டது. அதைத் திருப்பி உள்ளே அடைக்க முடியாது. அதன் நிரந்தர முடிவு, நீங்களும் நானும் பிரிய வேண்டியது தான். எனக்குப் புகழ் அவசியம். உங்களுக்கு சமூகத்திலே கண்யம் அவசியம். அதற்குப் பிரிவு தான் மருந்து. "

" உன் தீர்மானம் முடிவானது தானா? "

" ஆம் "

" அதற்குப் பின் நம் உறவு? "

" உலகத்திலேயே இதற்கு முன் அறிமுக மில்லாத இரண்டு ஆத்மாக்கள்! "

இதற்குப் பின்னும் நான் அந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு நிற்க கஷ்டப்படவில்லை. கல்யாணத்தை சந்திக்காமலேயே வீடு திரும்பினேன், அவன் நிலைமையை சிந்தித்துப் பார்த்த போது எனக்கு மிகவும் பச்சாத் தாபமாக இருந்தது. " ஐயோ! பாவம் அவன் ஆசைப் புயல் இப்படி அலக்கழித்து விட்டதே!' என்று வேதனையடைந்தேன். ஒரு நாள் திடீரென்று, அவர்கள் தாம்பத்திய உறவு என்னும் பலூன் டபார் என்று வெடித்து விடும் என்று தீர்மானித்தேன். ஆனால் கல்யாணம், இப்படி தற்கொலை மூலம் தனக்கு விடுதலை தேடிக் கொள்வான் என்று நான் நினைக்கவில்லை. அவன் அவ்வளவு கோழை என்றும் நான் மதிக்கவில்லை.

என் சிந்தனையைக் கலைப்பது போல் வாசலில் மோட்டார் ஹாரன் சப்தம் கேட்டது. கனகாம்பரம் காரைவிட்டு இறங்கினாள். மனோதத்துவ ஆராய்ச்சியில் வெகு நாள் ஈடுபட்டிருந்த நான், இந்த சம்பவத்தைத் தெரிந்து கொள்வதினால் அவள் முகம் எப்படி மாறுகிறது என்று ஆராய்ச்சி செய்ய, ஓர் கொடூர ஆசையின் மேல், அவளை அணுகி சமாச்சாரத்தை மெதுவாக வெளியிட்டேன். நான் எதிர் பார்த்தாற் போல் அவள் முகத்தில் கொஞ்சம் கூட, ஆச்சர்யமோ, துக்கமோ ஏற்படவில்லை. சர்வ அலக்ஷியமாக " ப்பூ! அவருக்கு இந்த ஒருவழி

தான் தெரிந்த தாக்கும்! எனக்குத் தீராத அபக்கியாதி உண்டாக்கி வைத்து விட்டாரல்லவா? கனகாம்பரத்தின் கணவர் தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்ற அழியாத புகழை எனக்குத் தேடி வைத்தார் போலும்! பேஷ்!'' என்றாள். அந்த சமயத்தில் கூட அவள் ஏதோ சமூகப் படத்தில் நடிப்பவள் போல் தான் காணப்பட்டாள். உள்ளூர தான் விடுதலையடைந்து விட்டோமென்று அவள் உள்ளம் எக்களித்திருக்க வேண்டும்!

கல்யாணத்தின் கௌரவத்திற்கு கொஞ்சம் கூட ஹானி வரக் கூடாது என்று விரும்பும் நண்பர்களாகிய நாங்கள் சம்பவத்தின் போக்கையே மாற்றி விட்டோம். மறு நாள் பேப்பர்களில் 'அட்வகேட் கல்யாணம் மாரடைப்பால் காலமானார்' என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் வெளியாயிற்று. கனகாம்பரம் எங்களை மிகவும் வாழ்த்தியிருக்க வேண்டும்.

இதெல்லாம் இப்போது என் நினைவிற்கு வருகிறதென்றால், இன்று தான் எங்கள் கழக வருஷாந்திர விழா. மேற்சொன்ன சம்பவங்கள் நடந்து ஒரு வருஷமாயிருந்த போதிலும் அவைகள் எங்கள் மனதில் பதிந்திருந்தன. நானும் கனகசபையும் அடிக்கடி அதை நினைத்துக் கொண்டோம். மேலும் நாங்கள் இருவரும் கழகத்திற்கு வரும் போது வழியிலுள்ள 'டீலக்ஸ்' தியேட்டரில் வைக்கப்பட்டிருந்த பிரமாதமான விளம்பரங்கள் எங்கள் கவனத்தைக் கவர்ந்தன. ஏராளமான பொருட் செலவின் பேரில் தயாரித்ததும், சினிமாராணி கனகாம்பரம் நடித்ததுமான 'சதி சாவித்திரியின்'' மகத்தான ஆரம்ப விழா இன்றைக்குத்தானாம்!

கழக ஹாலில் மாட்டியுள்ள கல்யாணத்தின் புகைப்படம் எங்களைப் பார்த்து நகைப்பது போலிருந்தது.

★

கூவிடுவாய்...

ராகம்: ஆபேரி — தாளம்: ஆதி.

கூவிடுவாய் குயிலே! நீ
கூவிடுவாய் குயிலே!

ஆவியினைப் பறித்தன்றென்
னகத்தினையும் பறித்தகன்ற
ஓவியத்தி லெழுதவொணா
ஒருவனையே உளத்தெண்ணி [கூவிடு]

மரநிழலின் அடியில்
மகிழ்ந்தெனது குழலில்
மலர்சூடும் பொழுதில்
வருடியெனைத் தழுவி
உரைத்தமொழி யனைத்தும்
எனதுள்ளத்தில் கனத்திங்
குறுத்துவதை மாற்ற
உளமுருகக் காற்றில் [கூவிடு]

— 'செந்தாமரை'

புறவே பற!

[கே. சி. எஸ். அருணுசலம்]

எல்லேயில்லதோர் நீலப் பரப்பினிடையில் உன் கோலச் சிறகடித்து மணிப்புறவே நீ பற!

சாதிக் கொடுமையிலும், சமயப் பூசலிலும் அலேந்து, ஏற்றத் தாழ்வும் இறுமாப்பும் மேலோங்கி, தண்மை நிறைந்த மதியை, சோலேயைப் போர்க்களமாக்கி, தன்னேயும் அழித்துப் பூண்டற்றுப் போகும் வஞ்சனேக்காரக் கூட்டங்களின் கை கடந்து எட்டிப் பற!

புறவே நீ பற!

விரிந்து கிடக்கும் வான வெளியிலே, கட்டின்றி, அடிமை எண்ணமின்றி, ஆதிக்க வெறியின்றி, நிலவின் கலேகளில் நனேந்து, மலர்த்தென்றலில் தவழ்ந்து, உன் வண்ணச் சிறகை மெல்ல அடித்துப் பற!

ஏழ்மையின் கண்ணீரைக் காணுமல், அனுதைகளின் மதப் போரில் சுழன்று வெம்பும் அகதிகளின் ஓலக்குரலேக் கேளாமல், வஞ்சகன், காட்டிக் கொடுப்போன், விபசாரி, தரகன், சோம்பேறி, இவர்களின் போலி வடிவத்தைக் காணுமல்;

முடிவற்றதாய், தீமையற்றதாய், எழில் மிக்கதாய் எண்ணங் கடந்த பெரும் பரப்பிலே, புறவே நீ பற!

மனிதன் மனிதனுகி, சமூகத்திடையுள்ள வேற்றுமைப் பட்ட உள்ளம் புரட்சிப் புயலால் நிறைந்து, கலேயும் புதுமையும் அன்பும் வளர்ந்து, இந்த நஞ்சேறிய சமுதாயத்தின் பரம்பரையில் ஒரு புது உலகம் பிறக்கும் வரையிலே, இந்தப் பாவ மண்ணிலே இறங்காமல் வண்ணச் சிறகடித்து, சுதந்திரத்தின் இன்னிசை பாடி, புறவே நீ பற!!

முன் இதழ் தொடர்ச்சி:

இருபத்தாறு ஆண்களும்

மூல ஆசிரியர்:

மாக்ஸிம் கார்க்கி

அவள் அடிக்கடி பல விஷயங்களை முன்னிட்டு எங்களிடம் வருவாள்: உதாரணமாக கொஞ்சம் விறகு உடைத்துக் கொடுக்கச் சொல்லுவாள்; அல்லது கெட்டியாய் சாத்தப்பட்டிருக்கும் அறைக்கதவைத் திறந்து கொடுக்கும்படி சொல்லுவாள். அவற்றை நாங்கள் பெருமையுடனும், சந்தோஷத்துடனும் செய்து கொடுப்போம். ஆனல் ஒரு தரம், எங்களில் ஒருவன் அவளிடம் தன் சட்டை ஒன்றை தைத்துக் கொடுக்கும்படி சொன்னதற்கு அவள் நையாண்டியோடு "உம், அப்புறம்? அதன் நோக்கம்!" என்று சொல்லி விட்டாள்.

அவளை நாங்கள் எல்லோரும் பரிகாசம் பண்ணினேம்; ஆனல் மறுபடி நாங்கள் அவளை யாதொன்றும் கேட்டதே இல்லை. அவளை நாங்கள் காதலித்தோம்; எல்லாம் அந்த ஒரு வார்த்தையோடு முடிந்து விடுகிறது. மனிதன் எப்பொழுதுமே, எதையாகிலும் ஒன்றைக் காதலிக்க விரும்புகிருன்; அவன் காதலிக்கும் அந்த 'இலக்கு' சரியில்லாதிருப்பினும், அல்லது அது கெட்டுப் போயினும் சரி; அவனது நெருங்கிய அருமையான அந்த வாழ்க்கையை, அவன் காதல் விஷமாக்கினும் சரி; அவன் குறிக்கோள் இல்லாதபடி காதலிக்கிருன். எங்களுக்கு வேறு ஒருவருமே இல்லை; ஆகவேதான் தான்—யாவை நாங்கள் காதலிக்கலானேம்.

அது முதல், அது என்ன காரணத்திற்காகவோ, எங்களில் ஒருவன் திடுமென்று இப்படிப் பிதற்ற ஆரம்பித்து விடுவான்:

"அந்தப் பெண்ணை நாம் ஏன் அப்படிக்கெடுக்க வேண்டும்? அவளிடம் என்ன இருக்கிறது? அல்ப விஷயத்திற்கு அவளிடம் நாம் ஏன் அப்படி இருக்க வேண்டும்?"

அப்படி அவளைப் பற்றி அவ்வளவு தைரியமாகச் சொன்னவன் மீது நாங்கள் ரொம்பவும் ஆத்திரப் படுவோம். எங்களுக்கு நேசிக்க ஏதேனும் வேண்டியிருந்தது; அதற்குரிய ஒன்றை நாங்கள் கண்டதும் அதை நாங்கள் நேசிக்கலானேம். நாங்கள் இருபத்தாறு பேர்களும் ஒருவருக்கொருவர் கிஞ்சிற்றும் விகற்ப மன்னியில் ஏதோ ஓர் புனிதவஸ்து போன்று நேசித்தோம். எங்களில் எவனேனும் எங்களுக்கு மாருக நடப்பானுகில், அவனை எங்கள் ஜன்மப் பகைவனுகக் கருதுவோம்......

எங்கள் காதல் ஓர் வெறுப்பைவிட அவ்வளவு தாங்க முடியாத ஓர் பாரத்தைப் போன்றிருந்தது......பெருமை பிடித்த ஒரு சிலர் எங்களிடம் எங்கள் காதலைக் காட்டிலும் வெறுப்புத்தான் மிக அதிகமாகத் தெரிவதாகச் சொன்னர்கள்...

3

எங்கள் முதலாளி எங்கள் கிடங்குடன் மற்றோர் ரொட்டிக் கிடங்கும் வைத்து நடத்தினர். அதுவும் அதே கட்டடத்தில் தான் இருந்தது. அந்த இரண்டுக்கும் நடுவே ஒரே ஒரு சுவர் தான் தடுத்து நின்றது. ஆனல் அந்த ரொட்டிக் கிடங்கில் நான்கு பேர் வேலை பார்த்தார்கள். அவர்கள் எங்களை விட்டுத் தனியேதான் தனித்து இருந்தார்கள். அவர்கள் வேலையைப்பற்றிய வரையில், அவர்கள் எங்களுடையதைக் காட்டிலும் கொஞ்சம் மேலாக நினைத்தார்கள்; அதே மாதிரி அவர்களும் எங்களைவிட கொஞ்சம் உயர்வாக நினைத்தார்கள். நாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அவர்கள் வர மாட்டார்கள்; நாங்கள் நடக்கும் பொழுது எங்களைப் பார்த்து கெ...க்...கெக்...கே என்று சிரிப்பார்கள். ஆனல் நாங்களும் அங்கே போக மாட்டோம். நாங்கள் போய் அந்த அழகிய ரொட்டிகளை திருடி விட்டால் என்ன செய்வதென்று பயந்து—எங்கள் முதலாளி எங்களை அங்கே போக விடாதபடி தடுத்துவைத்திருந்தார்.

ஒரு பெண்ணும்

மொழி பெயர்ப்பு :

அ. சிங்காரவேலு.

எங்களுக்கும் அங்கு வேலை பார்ப்பவர்களைப் பிடிக்காது. அவர்கள் மீது எங்களுக்குப் பொறுமையாக இருந்தது. ஏனெனில், அவர்கள் வேலை எங்களுடையதைக் காட்டிலும் கொஞ்சம் இலகுவானது; அவர்களுக்கு எங்களை விட சம்பளமும் அதிகம்; அதோடு அவர்கள் வேலை பார்க்கும் அந்த இடத்தில் அதிக வெளிச்சமும், நல்ல காற்றோட்ட வசதியும் இருந்தது. அவர்கள் எங்களைக் காட்டிலும் அதிகம் ஆரோக்கிய முடையவர்களாயும், நாகரீகமாயும் இருந்தார்கள். நாங்களோ மஞ்சளாயும், சாம்பல் நிறம் கொண்டவர்களாயும் இருந்தோம். எங்களில் மூன்று பேருக்கு மேகநீர் சம்மந்தப்பட்ட வியாதி; மற்றும் பலர் சொரி சிரங்கால் கஷ்டப்படுவார்கள். அதிலும் ஒருவனுக்கு சூலை முற்றி சங்கடப் பட்டான்.

ஓய்வு நேரங்களிலும், விடுமுறை தினங்களிலும் அவர்கள் நல்ல சட்டைகளும், கால்களில் 'பூட்ஸ்' களும் அணிந்து கொண்டு தோட்டத்திற்கு உல்லாசமாக உலவப் போவார்கள். அவர்களில் இருவர் இசைக் கச்சேரிக்குச் சென்று ஹார்மோனியம் வாசிக்கச் செல்வார்கள். நாங்களோ, அழுக்கடைந்த ஆபாசமான கந்தல் துணிகளை உடுத்திக் கொண்டு, கால்களில் மிதிறிக் கட்டைகளேயோ அல்லது பட்டைச் செருப்பு களையோ போட்டுக்கொண்டிருப் போம் நாங்களும், அந்தத் தோட்டத்திற்குப் போக நினைத்தாலும் கூட, அந்தத் தோட்டக் காவல்காரன் எங்களை அந்தத் தோட்டத்திற்குள் நுழைய விடமாட்டான். அப்படியிருக்கும் போது, நாங்கள் எப்படி அவர்களைப் போல் இருக்க முடியும்?

ஒரு நாள் அவர்களில் தலைமையாக உள்ள ஒருவன் குடித்து விட்டு வந்து விட்டானும்; உடனே எங்கள் முதலாளி அவனை வேலையிலிருந்து தள்ளி விட்டு, வேறு ஒரு ஆளை அந்த வேலைக்கு சேர்த்திருப்பதாக நாங்கள் சொல்லிக் கேட்டோம். அவன் ஓர் சிப்பாயாக இருந்தவன்; நீண்ட 'கோட்டு'ப் போட்டுக் கொண்டு, தங்கச் சங்கலியில் கட்டிய கடிகாரம் ஒன்று வைத்திருந்தானும். அவ்வளவு ஆடம்பரத்துடன் உள்ள ஒருவனை பார்க்க வேண்டு மென்ற ஆவல் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது. அவனைப் பார்க்க வேண்டி நாங்கள் ஒவ்வொருவராக வெளியே ஓடிவரலானோம்.

எப்படியோ, அவனுகவே நாங்கள் வேலை பார்க்கும் இடத்திற்கு வரலானன். காலால் கதவை உதைத்துத் தள்ளித் திறந்துகொண்டு, அந்த வாசற்படியிலே நின்று சிரித்தபடி எங்களிடம் சொன்னன்:

"கடவுள் நமக்கு உதவி புரிவாராக! எப்படி யிருக்கின்றீர்கள். சௌக்கியந் தானே, நண்பர்களே?"

திறந்த அந்த வழியாகக் குளிர்காற்று உள்ளே வந்து பலமாக அடிக்கலாயிற்று. அழகிய தலைமயிரும், மஞ்சள் நிறப் பற்களும், முறுக்கி விடப்பட்ட பெரிய மீசையுடனும், அவன் அங்கேயே எங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த நீண்ட சட்டை, உண்மையில் சாதாரணமாகத் தோன்றவில்லை. நீல நிறமாயும், பூ வேலை செய்யப்பட்டும் நேர்த்தியாகக் காணப்பட்டது. அதில் உள்ள பொத்தான்கள் சிகப்புக் கற்களாலோ அல்லது வேறு எதனலோ செய்யப்பட்டதைப் போன்றிருந்தது. அவன் தங்கச் சங்கிலியில் கடிகாரத்தைக் கட்டியிருந்தான்...

அந்த சிப்பாய் இளம் வயதாயும், நல்ல உயரமாயும் பார்ப்பதற்கு லக்ஷணமாக இருந்தான். சிவந்த கன்னங்களும், பிரகாசம் பொருந்திய பெரிய கண்களின் பார்வையும் அவனது தோழமையை வெளிக் காட்டிற்று. அவன் தலையில் உயர்ந்த ரக வெள்ளைத் தொப்பி தரித்திருந்

தான். பாலிஷ் செய்யப் பட்ட நல்ல பூட்ஸ்கள் அவன் கால்களில் கிடந்தன.

எங்கள் மேஸ்திரி அந்தக் கதவைச் சாற்றி விடும்படி அவனிடம் அமரிக்கையாகச் சொன்னார். அவன் அதன்படி தாமதம் செய்யாமல் கதவைச் சாற்றி விட்டு எங்கள் முதலாளியைப் பற்றி எங்களிடம் விசாரிக்கத் தொடங்கினான். நாங்கள் உடனே எல்லோருமாய்ச் சேர்ந்து பேசலானோம். எங்கள் முதலாளி ஓர் தந்திரமான போக்கிரி மனிதன், துஷ்டன், வஞ்சகன், கொடியவன் என்பதாக எல்லாம் அவனிடம்நாங்கள் தெரிவிக்கத் தயங்கினோம். அவனிடம் எங்கள் முதலாளியைப் பற்றிச் சொல்ல முடிந்த விஷயங்களை எல்லாம், அவற்றை இங்கே எழுதுவது அசாத்திய மெனினும்கூட அவனிடம் சொன்னோம். அந்த சிப்பாய் சிநேக பாவத்துடன் கேட்டுக்கொண்டே மீசையை முறுக்கியபடி எங்களைப் பார்த்த வண்ணம் இருந்தான்.

சட்டென்று எங்களிடம் "எப்படியென்றாலும், இங்கே, உங்களுக்கு பெண்கள் எதேஷ்டமாய் இருப்பார்கள்" என்றான்.

உடனே எங்களில் ஒரு சிலர் வாய் விட்டுச் சிரிக்கலானார்கள். நாங்களும் மௌனமாகச் சிரிக்கலானோம். ஒருவன் மட்டும் அவனிடம் சொன்னான்: "எங்களிடம் ஒன்பது பெண்கள் இருக்கின்றார்கள்" என்பதாக.

அதற்கு அந்த சிப்பாய் ஒரு தினுசாக "நான் நினைக்கிறேன்......நீங்கள் அவர்களை..." என்றான்.

நாங்கள் மீண்டும் சிரிக்கலானோம். ஆனால் உரக்க சத்தம் போட்டு அவன் திகைத்துப் போய் விடும்படி சிரித்துவிடவில்லை. அவனிடம், நாங்கள் அந்தப் பெண்களும் அவனைப் போன்று ரொம்பத் துடுக்காக இருக்கின்றார்களென்று சொல்ல நினைத்தோம். ஆனால் அப்படிச் சொல்வதற்கு எங்களில் யாருக்கும் தைரியம் ஏற்படவில்லை. எங்களில் ஒருவன் தணிந்த குரலில் சொன்னான்: "எங்கள் ஜன்மத்தில் ஒன்றும் அப்படி நடக்கப் போவதில்லை" என்று.

"ஆமாம், அது உண்மையிலேயே உங்களுக்கு இல்லாத விஷயந்தான்." அந்த சிப்பாய் எங்களைப் பார்த்து இவ்விதம் தன் தீர்ப்பைச் சொல்லலானான்: "உண்மையில் தான்; உங்கள் தோற்றம்,...... நடை......அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காதுதான். ஓர் பெண் ஓர் மனிதனின் ஆடம்பரத்தில்தான் பிரியப்படுவாள். அதிலும் ஆனால் நன்றாக, பார்ப்பதற்கு லக்ஷணமாயும், எல்லா வசதிகளும் கூடியவனாயும், இப்படி இருப்பவன் பேரில்தான் பிரியப்படுவாள். இன்னும் வேறென்ன? அவன் கொஞ்சம் பலசாலியாக இருக்க வேண்டு மென்றும் நினைப்பாள். அப்படிப் பட்ட ஒருவனைத் தான் அவள் விரும்புவாள்!"

அந்த சிப்பாய் உடனே சட்டைப்பைக்குள்ளிருந்த அவன் கையை எடுத்து தங்க நிறம் போன்ற நிறம் செறிந்த அவனது வெள்ளை வெளேரென்றிருக்கும் கையையும், அதன் மேல் 'கையுரை' போடப் பட்டிருப்பதையும் எங்களிடம் காட்டினான்.

"கால்கள், மார்பு, எல்லாமே நல்ல திடகாத்திரமா யிருக்க வேண்டும். அதோடு நாஸூக்காக உடையுடுத்திக் கொண்டு நன்றாக இருக்க வேண்டும். என்னை எடுத்துக்கொள்ளுங்கள். எல்லாப் பெண்களும் என்னைப் பார்த்து ஆசைப் பட்டு என்னைக் காதலிக்கிறார்கள். நான் ஒருத்தியைக்கூட நானாகப் போய் வலிய கூப்பிடுவதே இல்லை. அவர்களாகவே வந்து ஒரே சமயத்தில் ஐந்து பேர்கள் என் கழுத்தைக் கட்டிக் கொள்வார்கள்!" என்றான்.

பின் மாவு மூட்டை ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு அவனைப் பெண்கள் எப்படிக் காதலித்தார்கள் என்றும், அவன் எப்படி அவர்களிடம் நடந்து கொண்டானென்றும் எங்களிடம் ரொம்ப சாங்கோபாங்கமாக சொல்லிக் கொண்டிருந்தான். பிறகு எழுந்து சென்று விட்டான். அவன் போன பின், நாங்கள் நீண்ட நேரம் வரை அப்படியே அவனைப் பற்றியும் யோசித்தபடி உட்கார்ந்திருந்தோம். அவனை எங்கள் எல்லோருக்குமே பிடித்திருந்தது. அவன் நல்ல சுபாவமுடையவனாயும், கபட மற்றும் இருந்தான். எங்களிடம் அவன் போன்று அவ்வளவு தோழமையுடன் பேசுவதற்கு வேறு யாருமே வந்ததில்லை. நாங்கள் அவனைப்

பற்றியும், பூ வேலை செய்யும் அந்தப் பெண்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம்......

சட்டென எங்கள் மேஸ்திரி கவலை நிறைந்த குரலில் சொன்னான்: "ஆனால் அவன் தான்யாவை மட்டும் கை வைத்து விடக்கூடாது" என.

இதைக்கேட்டு நாங்கள் மௌனமடைந்தோம். தான்யாவைப் பற்றிய எண்ணங்கள் எங்கள் மனதை விட்டு அகல்வதாயின. அந்தப் பலவானான சிப்பாயின் உருவம் எங்கள் மனதின் மற்றோர் புறத்தில் பதியலாயிற்று.

பின் எங்களுக்குள் ஓர் ருசிகர விவாதம் ஏற்பட்டது. எங்களில் ஒரு சிலர் தான்யா அப்படிப் போய்விட மாட்டாளென்று சொன்னார்கள். மற்றும் ஒரு சாரார் அவள் அவனை எதிர்த்து நிற்க முடியாதென்று நினைத்தார்கள். மூன்றாவது சாரார் கடைசியாக, அவன் மட்டும் தான்யாவை ஏதேனும் தொந்திரவு செய்வானேயானால், அவனை செம்மையாய் உதைத்து விடுவதென்று முடிவு கட்டினார்கள். ஆகவே இந்த முடிவே ஓர் இறுதி தீர்மானமாகியது. நாங்கள் அவனுக்கு விரோதமாக தான்யாவை எச்சரித்தோம்.

4

இதன் பிறகு சுமார் ஒரு மாதம் இருக்கலாம். அந்தச் சிப்பாய் வெள்ளை ரொட்டியை எடுத்துக் கொண்டு பூவேலை செய்யும் பெண்கள் இருக்குமிடத்திற்கு அடிக்கடி செல்வான். ஆனால் அவனது காதல் வெற்றியைப் பற்றி எங்களிடம் ஒரு வார்த்தையும் சொல்வதில்லை. மீசையை முறுக்கிக் கொண்டு, உதடுகளை நாவால் வருடிக் கொண்டு போய் விடுவான். தான்யா ஒவ்வோர் நாள் காலையிலும் எங்களிடம் ரொட்டிக்கு வரும்பொழுது, முன்னைவிட அதிக சந்தோஷமாயும், சிநேகத்துடனும் இருந்தாள். நாங்கள் இரண்டொரு தடவைகளில் அந்த சிப்பாயைப் பற்றி அவளிடம் பேச முயன்றோம். ஆனால் அவள் "வெறிக்கும் — கிடா" என்றெல்லாம் அவனைக் கிண்டல் பெயர் சொல்லி நையாண்டி செய்து விட்டுப் போய் விடுவாள் நாங்கள் அவளைப் பற்றிப் பெருமை கொண்டோம். அவள் நடப்பு எங்கள் எல்லோருக்கும் கௌரவத்தை யளித்தது. அவள் முன்னை விட ரொம்பவும் அருமையாக இருந்தாள். பிரதி காலையிலும், ரொம்ப அன்புடனும், நேசத்துடனும் அவளை நாங்கள் வாழ்த்தியனுப்புவோம்.

ஒரு நாள். அந்த சிப்பாய் கொஞ்சம் குடித்து விட்டு எங்களிடம் வந்தான். உட்கார்ந்து கொண்டு அவனாகவே சிரிக்கலானான். அவன் ஏன் சிரிக்க வேண்டுமென்பதை சொல்லுமாறு கேட்டதற்கு, அவன் சொன்னான்:

"என், லேட்காவும், குருஸ்காவும் — அவர்கள் இரண்டு பேரும் எனக்காக ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டார்கள். அவர்கள் சண்டையை நீங்கள் பார்த்திருக்க வேண்டுமே! ஹா! ஹா! ஒருத்தி மற்றவளின் தலை மயிரைப் பிடித்திழுத்து கீழே தள்ளி விட்டு அவள் மேல் உட்கார்ந்து விட்டாள்! ஹா...ஹா ஹா!...அவர்கள் ஒருத்தி முகத்தை ஒருத்தி பீறிக்கொண்டார்கள். அதே ஒருத்தியை சிரித்தே சாகடிக்க போதுமானது! அவர்களுக்கு ஏன் நன்றாக சண்டை போடத் தெரியவில்லை? அவர்கள் ஒருவரை ஒருவர் ஏன் கிள்ளிக் கொள்ள வேண்டும்?"

சொல்லி விட்டு சிரித்துக் கொண்டே ரொம்ப உல்லாசமாக பெஞ்சியில் உட்கார்ந்தான். உட்கார்ந்து கொண்டு மறுபடியும் கடகடவென்று சிரிக்கலானான். நாங்கள் வாய் திறவாமல் மௌனமாயிருந்தோம். அந்தத் தடவை அவன் எங்களை ஓர் விதமாகப் பார்த்தான். பார்த்து விட்டு:

"எனக்கு என்ன அதிர்ஷ்டம் தெரியுமா? ஆஹா! என்ன ஜோர்! ஓர் கண்ணடி அடித்தால் போதும். அவர்கள் உடனே என்னுடன்தான்!" என்று சொல்லிக் கொண்டே அவன் வெண்ணிறக் கைகளைத் தூக்கி அவன் தொடைகளில் தட்டிக் கொண்டான். அவன் கண்கள் பெண்களுடன் அவனுக்குள்ள அந்த நல்லதிர்ஷ்டத்தை பிரதி பலிப்பதைப் போல் ஆச்சரியத்துடன் பிரகாசித்தன. அவனது பருத்த முகம் அவனது சந்தோஷத்தை வெளிக் காட்டுவதைப்போல் எங்கள் வெளிப் பார்வைக்குத் தெரிந்தது. அவன் எப்பொழுதையும் விட அதிகமாக நாக்கால் உதட்டை ரொம்பவும்வருடிக் கொண்டான்.

எங்கள் மேஸ்திரி கோபத்தோடு வேகமாக துடுக்கைத் தூக்கி தரையில் எறிந்துவிட்டு, ரொம்பவும் ஏளனக் குரலில் சொன்னான்:

"சின்னக் கம்புக் குச்சியை ஒடிப்பதற்கு அவ்வளவு பெரிய பலம் தேவையில்லை. ஆனால் ஓர் நல்ல தேவதாரு மரத்தை — முயன்றுபாரேன்!"

"என் — நீ என்ன அர்த்தத்தோடு அதை எனக்குச் சொல்லுகின்றாய்?" என்றான் சிப்பாய் பதிலுக்கு.

"அர்த்தத்தோடுதான்......"

"அது என்ன அப்படி?"

"ஒன்றுமில்லை......அது உன் கையிலிருந்து நழுவி விட்டது?"

"இல்லை, ஒரு நிமிஷம் பொறு! அது என்ன சமாச்சாரம். எதைக் குறித்து அப்படிச் சொல்லுகிறாய்?"

எங்கள் மேஸ்திரி பதில் ஒன்றும் சொல்லவில்லை. துடுப்பை எடுத்துக் கொண்டு அடுப்பண்டைக்குப் போய் மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்தான். அவனது வேலையின் மும்முரம் அந்த சிப்பாயையும் அந்த சம்பாஷணைகளையும் அவன் மறந்து விட்டதைப்போல் காணப்பட்டது. ஆனால் அந்த சிப்பாய்க்கு அது சஞ்சலத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும். அவன் எழுந்து அடுப்பண்டைக்குச் சென்று "இல்லை, சொல்லு.........அது யாரை? என்னை எதிர்க்கக் கூடியவர்கள் யாரும் இல்லை. கிடையவே கிடையாதே! இருந்தும் என்னை ஏன் அப்படி ஜாடை பேசுகிறாய்!" என்றான்.

அவன் உண்மையிலேயே ரொம்பவும் மனதில் சங்கடமடைந்தவனைப் போலத்தான் காணப்பட்டான். பெண்களை வசியப் படுத்துவதைத் தவிர அவனுக்குப் பெருமை படக்கூடிய விஷயம் வேறொன்றுமில்லை. அது தவிர அவனிடம் வேறெதுவும் இருப்பதாகவும் தோன்றவில்லை. அது ஒன்றுதான் அவனை ஓர் வாழும் மனிதனாக அவனுக்கு உணர்ச்சியூட்டி வந்தது.

மனிதர்களில், அவர்கள் வாழ்க்கையில் ஏதேனும் அழகிய, அதி உயர்வான ஓர் விஷயம் என்பது, அது நோய் போன்று அவர்கள் உடலிலோ அல்லது அவர்கள் ஆத்மாவிலோ பீடித்து நிற்கின்றது. அவர்களின் வாழ்காலம் பூராவும் அது அவர்களுடன் இயங்கி வருகின்றது; அவர்களும் அதிலே வாழ்ந்து, அதனாலேயே வருந்தி, அந்த வேதனை தாளாது அதைப் பற்றியே மற்றவர்களிடமும் புலம்புவார்கள். அப்படிப் புலம்பி அவர்களது அனுதாபத்தையும், அவர்கள் கவனத்தையும் கவர்ந்து விடுவார்கள். அந்த நோயின் காரணமாகவே அவர்கள் பிறரின் அனுதாபத்தைக் கோருவது; அதைத்தவிர அவர்களுக்கு வேறொன்றும் இல்லை. அவர்களிடமுள்ள அந்த நோயை அகற்றி, அவர்களை அவற்றினின்றும் சொஸ்தப் படுத்தி விடக்கூடுமானால், அவர்கள் சந்துஷ்டியற்றே போய் விடுவார்கள். ஏனெனில், அவர்களது வாழ்க்கையிலுள்ள அந்த ஒரு "லக்ஷியத்தை" அவர்கள் இழந்து விடுகின்றார்கள் — அது இன்றி அவர்கள் வாழ்க்கை வெறுமையாகி விடுகின்றது. சில சமயங்களில், மனித வாழ்க்கை வறுமை வாய்ப்படும் பொழுது, அவன் இழி நிலமைக்காளாகி, அந்த இழி குணங்களுடனேயே வாழ வேண்டியவனாகின்றான்; சமுதாயத்தின் அநீதிகளால் மனிதன் அடிக்கடி இழிநிலைமைக்காளாகி வருகின்றான் என்பதும் உண்மையே.

அந்த சிப்பாய் ரொம்பவும் ஆத்திரத்துடன் எங்கள் மேஸ்திரியிடம் சென்று கடிந்த குரலில் கேட்டான்:

"இல்லை, எனக்குச் சொல்லு – யாரை!"

"உனக்குச் சொல்லணுமா?" எங்கள் மேஸ்திரி சட்டென்று திரும்பி பதில் சொன்னான்.

"ஆமாம்"

"தான்யாவை உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும்"

"சரி, வேறென்ன! பாரேன் பார்ப்போம்.

"நானா"

"நீதான்!"

"அவளையா! ப்பூ! அதொன்றும் பிரமாதமல்ல.

"பார்ப்போம்"

"நல்லாப் பாருங்கள்"

"அவள் உனக்குக் காண்பிப்பாள்!"

"ஒரே மாசம் 'டயம்' கொடு!"

"நீ வீண் ஜம்பம்தான்!"

"இரண்டு வாரம் கொடு போதும்! நான் உனக்குக் காண்பிக்கிறேன்! அந்த தான்யாதானே? ப்பூ!"

"சரிதான் போ! நீ வழிக்கு வந்து விட்டாய்"

"இரண்டே வாரம், காரியம் முடிகிறதா, இல்லையா என்று பார்!"

"உன்னைத்தான் 'போ'வென்று சொல்லி விட்டேனே."

எங்கள் மேஸ்திரி ரொம்பவும் கோபாவேசத்துடன் துடுக்கைக் கையில் எடுத்து ஆட்டிக் கொண்டிருந்தான். அந்த சிப்பாய் பிரமித்துப்போய், திரும்பி எங்களை மௌனமாகப் பார்த்து விட்டு மெலிந்த குரலில் "நல்லது, நான் வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு அவன்போய் விட்டான்.

அந்த வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்த பொழுது, நாங்கள் வாய் பேசாது அவற்றை கிரகித்துக் கொண்டிருந்தோம். சிப்பாய் வெளியே போய் விடவும் எங்களிடையே ஒரே பேச்சு சத்தம் ஆரம்பமாகி விட்டது. ஒருவன் மேஸ்திரியிடம் சத்தம் போட்டான்:

"பவேல்! நீ செய்த காரியம் ரொம்ப தப்பானது" என.

மேஸ்திரி அதற்கு "உன் வேலையைப் பார்" என்று ஆத்திரத்துடன் கடிந்தான்.

அந்த சிப்பாய் ரொம்பவும் மனம் நொந்து போயிருப்பானென்றும், அந்தக் காரியத்தால் தான்யா ரொம்பவும் பீதியடைந்திருப்பாளென்றும் நாங்கள் எண்ணினோம். அதே மாத்திரத்தில் எங்கள் எல்லோருக்கும் எங்கள் உள்ளத்தை அரிக்கக்கூடிய பேராவல் உணர்ச்சியொன்றும் ஏற்படலாயிற்று. என்ன நடக்கும்? தான்யா இந்த சிப்பாயை எதிர்த்து நிற்பாளா? என்றெல்லாம் எங்களுக்குள் எண்ணலானோம். எங்களுக்குள் சொல்லிக் கொண்டோம்: "தான்யா! அவள் அவனுடன் எதிர்த்து நிற்பாள்! அவன் கையால் அவளைத் தீண்டக்கூட முடியாது!" என.

எங்கள் காதல் தெய்வத்தின் பலத்தை பரீட்சிப்பதில் எங்களுக்கு ஓர் பயங்கர கவலை உண்டாகியது. நாங்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டோம்: அவளிடம் கற்பு உண்டென்றும், இதில் வெற்றி பெறுவாளென்றும். எனவே நாங்கள் அந்த சிப்பாய் அந்த சம்பாஷணைகளை மறந்து போயிருக்க வேண்டு மென்றும், அவனைத் தூண்டிவிட வேண்டுமென்றும் எங்களுக்குள் கற்பனை செய்யலானோம். அது முதல் எங்கள் வாழ்க்கை அதற்கு முன் என்றுமில்லாத வாறு மாறத் தொடங்கியது. நாள் பூராவும் அதைப் பற்றியே பேசுவோம்; விவாதிப்போம். எங்கள் பேச்சு சுவாரஸ்யமாகி நாளுக்கு நாள் கடுமையடைந்தது. அது எங்களுக்கு ஏதோ ஓர் விளையாட்டைப் போன்று—எங்கள் பக்கம் தான்யாவைப் பணயம் வைத்து சைத்தானுடன் விளையாடும் ஓர் விளையாட்டாக இருந்தது. அந்த சிப்பாய் தான்யா பின்னால் ஓடினன் என நாங்கள் கேள்விப்பட்டதிலிருந்து எங்களுக்கு ஓர் பயங்கர வேதனை உண்டாகத் தொடங்கியது. எங்கள் வாழ்க்கையிலேயே மிகவும் சுவராஸ்யமுள்ள அந்த விஷயத்தில் எங்கள் மனம் லயித்து விட்டதால், எங்கள் முதலாளி எங்களைப் பழி வாங்கும் நோக்கத்துடன் தினம் 500 பவுண்டு மாவு பிசையும்படி எங்கள் வேலையை அதிகப்படுத்துவதை நாங்கள் கவனிக்கத் தவறி விட்டோம். அப்படி உழைப்பு அதிகரித்துங்கூட, எங்களுக்குச் சோர்வு தட்டவில்லை. எங்கள் உதடுகளில் தான்யாவின் பெயர் நாள் பூராவும் அடிபட்டுக் கொண்டிருக்கும். ஒவ்வோர் நாளும் மிக்க பதற்றத்துடன் அவளை எதிர் நோக்கிக் கொண்டிருப்போம். சில சமயங்களில் அவள் எங்களிடம் வருவதைப் போன்று. ஆனல் அவள் பழைய தான்யாவாக இல்லாமல் ஓர் புதிய மாறுதலுடன் வருவதைப்போல் எங்கள் மனதிற்குள்ளாக கற்பனை செய்து கொள்வோம். நாங்கள் அவளிடம் ஒன்றும் சொல்வதில்லை. அந்த சம்பாஷணைகளைப் பற்றியோ, வேறு விஷயங்களைப்பற்றியோ அவளிடம் ஒன்றும் கேட்பதும் இல்லை. எப்பொழுதும்போல் அவளிடம்

அன்பாகவே நடந்து வந்தோம். என்ருலும் தான்யாவைப்பற்றிய ஓர் புது விஷயமும், அதுவும் ஓர் அன்னியனைப் பற்றியதாக உண்டாகவும், அந்த விஷயம் எங்களுக்கு ஓர் அடக்க முடியாத ஆவலைத் தூண்டிவிட்டது.

ஒரு நாள் காலை. வேலை ஆரம்பிக்கும் சமயம். எங்கள் மேஸ்திரி சொன்ஞன்: "தோழர்களே! இன்ருேடு 'டயம்' சரியாய்ப் போச்சு"

அவன் மேற்கொண்டு எதுவும் சொல்லாதபடிக்கே, நாங்களாகவே அதனைத் தெரிந்து கொண்டோம். என்ருலும் ஏதோ ஒரு பயம் மட்டும் எங்களுக்கு உண்டாகியது.

"அவளை நாம் ஜாக்ரதையுடன் கவனிக்க வேண்டும். இன்னும் ஒரு நிமிஷத்தில் இங்கே வருவாள்" என்ருன் எங்கள் மேஸ்திரி.

அதற்குள் ஒருவன் "அப்படியாஞல் நீங்கள் என்ன எதிர்பார்க்கின்றீர்?" என்ருன் உரத்த குரலில்.

மீண்டும் ஓர் பலத்த வாக்குவாதம் எங்களுக்குள் ஏற்படலாயிற்று. அன்று நாங்கள் எப்படிப்பட்ட மாசற்ற தூய்மையான ஒருவளைப் போற்றி எங்களின் மிகச் சிறந்த அன்பின் உருவாக மதித்து வந்தோம் என்பதை நிரூபிக்கும் நாள். அன்று காலை, முதன் முதலாக, அது எங்களுக்குத் தெளிவாகியது. நாங்கள் உண்மையில் அந்த தூய்மையை ஜெயிப்பதற்கு ஓர் பெரிய சூதாட்டம் ஆடுகின்ருேம். அதில் எங்களுக்கு மனத்திருப்தி ஏற்படாவிடில், கடைசியாக அந்தத் தோல்வியின் ஈடாக அவளையும் இழக்க வேண்டியவர்கள்தான்.

அந்த இடைக்கால பதினைந்து நாட்களிலும், தான்யா அந்த சிப்பாயுடன் சேர்ந்து போவதாகக் கேள்விப்பட்டோம். ஆஞல் எங்கள் யாருக்கும் அவள் ஏன் அவனுடன் போக வேண்டுமென்று அவளைக் கேட்க நினைப்பே இல்லை. ஒவ்வொரு நாள் காலையிலும் ரொட்டி வாங்க வருவாள்; எப்பொழுதும்போல் போய் விடுவாள்.

அன்று காலையில் அவள் குரல் வெளியே கேட்டது: "சிறைப் பறவைகளே! நான் இங்கே இருக்கிறேன்"

நாங்கள் கதவைத் திறந்து விட்டோம். அவள் உள்ளே வந்ததும் எப்பொழுதும் போல் நாங்கள் அவளுடன் ஒன்றும் பேசவே இல்லை. எங்கள் கண்கள் மட்டும் அவளைப் பார்த்தபடியிருந்தன. எங்களுக்கு அவளிடம் என்ன பேசுவது, என்ன கேட்பது என்று ஒன்றுமே தெரியவில்லை. வாய் பேசாது, துக்கம் நிறைந்து போய், ஓர் மௌனக் கூட்டம்போன்று அவள் முன்னே நின்ருேம். அவளும் இந்த எங்கள் புதிய மாறுதலைக் கண்டு ஏதோ திகைப்படைந்தவளைப்போல் காணப்பட்டாள். மறுகணம் அவள் முகம் மாறியது. துக்கம் ததும்பும் குரலில் கேட்டாள்:

"நீங்கள் ஏன் — இப்படியிருக்க வேண்டும்?"

"நீ ஏன் அப்படி யிருக்க வேண்டும்?" எங்கள் மேஸ்திரி அவளைப் பார்த்தபடியே கேட்டான்.

"நான் எப்படியிருக்கிறேன்?"

"வேருென்றுமில்லை......"

"சரி, பின் எனக்கு ரொட்டியை சீக்கிரம் தாங்கள்"

அவள் இதற்கு முன் இப்படி அவசரப்பட்டதே இல்லை.

"இன்னும் ரொம்ப நேரமிருக்கிறதே" என்ருன் எங்கள் மேஸ்திரி அவள் மீதுள்ள பார்வையை அகற்ருதபடி.

அவள் பின் எழுந்து வாசல் வழியாகப் போய் விட்டாள்.

எங்கள் மேஸ்திரி தடுக்கை எடுத்துக் கொண்டு அடுப்பண்டை நோக்கியபடி:

"ஆமாம், காரியம் முடிந்து போச்சு! ஒரு சிப்பாய்! ஒரு கெட்டசாதி நாய்!" என்ருன்.

நாங்கள் ஆடுகள் போன்று மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டோம். எங்களில் ஒருவன் சொன்ஞன்.

"ஒரு வேளை, எல்லாவற்றிற்கும்பின்..."

"சரிதான், உன் வேலையைப் பார்" என்ருன் எங்கள் மேஸ்திரி பதிலுக்கு.

எல்லா விஷயங்களிலும் எங்களைவிட அதிகம் தெரிந்த அந்த மனிதனின் தீர்ப்பு

எங்களுக்குச் சரியாகத் தோன்றியது. அவன் குரல் தோரணையிலிருந்து அந்த சிப்பாயின் வெற்றியைத் தெரிந்து கொண்டவுடன் எங்களுக்கு தாளமுடியாத துக்கம் பொங்கி எழுந்தது.

12 மணியிருக்கும். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம். அந்த சிப்பாய் வந்தான். அவன் முன்னைவிட கொஞ்சம் நாகரீகமாகவும், லக்ஷணமாயும் இருந்தான். எப்பொழுதையும் போல் எங்களைக் கூர்ந்து பார்க்கலானான். ஆனால் அவனை ஏறிட்டுப் பார்ப்பதற்கு எங்களுக்கு ஏதோ சங்கோசமாக இருந்தது. அவன் பெருமை நிறைந்த குரலில்:

"ஐயா மார்களே, இப்பொழுது நான் சொல்லட்டுமா? ஒரு சிப்பாயின் சாமார்த்தியத்தை உங்களுக்குக் காட்டவா? வாசல் பக்கம் போய் அந்த இடுக்கு வழியாகப் பாருங்கள் — தெரிந்து கொள்ளலாம்" என்றான்.

நாங்கள் வாசல் பக்கம் போய் ஒருவரையொருவர் இடித்து தள்ளிக்கொண்டு அந்தப் பலகை அடைப்பின் இடுக்கு வழியாகப் பார்க்கலானோம். ரொம்ப நாழி காத்திருக்கவும் இல்லை. தான்யா சீக்கிரமே வேகமாக நடந்து வந்தாள். பனிக்கட்டி சேறு இவைகளை ஒரே தாண்டாய் தாண்டிக் கொண்டு விரைந்து சென்றாள்; சென்று அறைக்குள் நுழைந்தாள். அவள் போன பின்னே அந்த சிப்பாய் சீட்டியடித்துக் கொண்டு வேகமாக தான்யா போன பக்கம் அவனும் சென்றான். அவன் கைகள் அவன் சட்டைப் பைக்குள் இருந்தன. அவன் மீசை துடித்தது.

அப்பொழுது மழை பெய்யத் தொடங்கியது. அந்த மழைத் துளிகள் எப்படி அந்த சிறு குட்டைகளில் விழுகின்றன வென்றும் எப்படி அந்த சேற்றில் கலக்கின்றதென்றும் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். அன்று ஒரே மந்தமாயும், குளிராயும் இருந்தது. கூரைகளெங்கும் பனி படர்ந்து காணப்பட்டது. ஆனால் தரையில் சிறு சிறு சேற்றுப் பகுதிகள் மட்டும் கொஞ்சம் கொஞ்சம் தெரியலாயின. ஈன சத்தத்துடன் மழைத் துளிகள் விழுந்து கொண்டிருந்தன. குளிர் அதிகமாயிருந்ததால், நாங்கள் அதிக நேரம் நிற்பதற்கியலவில்லை.

முதலில் அந்த சிப்பாய் அறையினின்றும் வெளியே வந்தான். அவன் மெதுவாக, சட்டைப் பைக்குள் கைகளை வைத்துக் கொண்டு எப்பொழுதும்போல் நடந்து வந்தான்.

அதற்குப்பின் தான்யா வந்தாள். அவள் கண்கள் சந்தோஷத்தாலும், மகிழ்ச்சியாலும் பிரகாசமாய்த் துலங்கின. அவள் உதடுகளில் புன்முறுவல் மிளிர்ந்தது. நிலையற்று, கால்கள் தடுமாறிக் கொண்டு ஏதோ கனவில் வருபவளைப் போல் அவள் நடந்து வந்தாள்.

அது எங்களுக்குப் பொறுக்க முடியவில்லை. நாங்கள் உடனே எழுந்து எல்லோருமாய் மோதியடித்துக் கொண்டு வாசலுக்குச் சென்று அவளைப் பார்த்து நிந்தித்தோம் — வாயில் வந்தபடி பேசி அவளை அவமானம் செய்தோம்.

அவள் எங்களைப் பார்த்து விட்டு, அப்படியே சேற்றில் நட்ட கம்பம் போன்று நின்று விட்டாள். நாங்கள் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டு கண்டபடி பேசி அவளை அவதூறு செய்யலானோம்.

நாங்கள் அவளிடம் பலமாகவோ அல்லது வேகமாகவோ பேசவில்லை. அவள் எங்களிடம் சிக்கிக் கொண்ட பிறகு, அவள் எங்களைவிட்டு நகர முடியாதென்று தெரிந்தவுடன், அவளைப் பார்த்து ஏளனம் செய்தோம். அப்படி அவளை ஏளனம் செய்தது ஏனென்பது எனக்கும் தெரியாது. ஆனால் நாங்கள் அவளை அடிக்கவில்லை. எங்கள் வசவுகளை கேட்டுக் கொண்டு தலையை இப்படியும் அப்படியுமாய்ச்சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி, அவள் எங்கள் மத்தியிலேயே நின்றாள். நாங்கள் மேலும் மேலும் எங்கள் ஆத்திரம் தணியும்படி அவளைக் கண்டபடி பேசி தூஷித்தோம்.

அவள் முகத்தின் நிறம் மாறியது. சற்று முன்பு ஆனந்தத்தால் பிரகாசித்துக் கொண்டிருந்த அவளது நீல விழிகள், அகன்று விரியலாயின. அவள் மார்பு விம்மியது; அவள் உதடுகள் துடித்தன.

அவள் எங்களைத் திருடிவிட்டதைப் போல் அவளை வட்டமாகச் சுற்றி வளைத்துக்கொண்டு பேசி எங்கள் வஞ்சத்தைத் தீர்க்கலானோம். அவள் எங்களுக்குப் பாத்தியப் பட்டவள். எங்களிடமுள்ள

மிகச் சிறந்த பொருளை எல்லாம் — அது ஏழையின் ஒரு சிறு துண்டு உயர்ந்த ரொட்டியே யாயினும் — அவளுக்குக் கொடுத்து வந்தோம். அவள் ஒருவள்; நாங்கள் இருபத்தாறு பேர்கள். எனவே அவள் செய்த குற்றத்திற்கு சமமாக நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவள் மௌனமாகவே நின்றாள். அவளது கலங்கிய விழிகள் எங்களை நோக்கியபடி இருந்தன. அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

நாங்கள் அவளைப் பார்த்து எளனமாய்ச் சிரித்தோம்; வாயாரப்பேசினோம்; கூச்சலிட்டோம். இன்னும் சிலரும் எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள். ஒருவன் அவள் ரவிக்கையைப் பிடித்து இழுக்கலானான்.

அவள் கண்கள் ஜ்வலித்தன; கைகளை எடுத்துத் தலையைத் தடவியபடி எங்களைப் பார்த்து உரத்த குரலில் சொன்னாள்:

"துரதிர்ஷ்டம் பிடித்த அடிமைக் கூலிகள் நீங்கள்" என்று சொல்லிவிட்டு விரைந்து போகலானாள். அவளுடைய அந்த வேகத்தை அதற்கு முன் நாங்கள் என்றும் அப்படிப் பார்த்ததே இல்லை. எங்களில் யாரும் அவளை வழி மறிக்கவில்லை.

அப்பால் கொஞ்ச தூரம் சென்று எங்களைத் திரும்பிப் பார்த்து விட்டு "நீங்கள் நாற்றப் பிண்டங்கள், கெட்டஜாதி மிருகங்கள்" என்றாள்.

பின் போகவே போய் விட்டாள்.

நாங்கள் அந்தச் சூர்யப் பிரகாசமற்ற, மந்தகாசமான விதானத்தின் கீழே, மழையில், அந்த வெளி வாசலில் நிற்கலானோம்.

பின் வாய் பேசாது, எங்கள் ஓதம் நிறைந்த கிடங்குக்குள் சென்று விட்டோம். முன்னர் போன்று அந்த சூரியன் ஜன்னல்கள் வழியாக உள்ளே பாயவுமில்லை; தான்யா மீண்டும் அங்கே வரவுமில்லை!

★

அட்டைச் சித்திரம்

ஓங்கி உயர்ந்து, செழித்து வளர்ந்திருக்கும் ஒரு மா மரம். அதன் பரந்த கிளைகளிலே அமர்ந்து துயிலும் கிளியும் கொஞ்சுகின்றன. அதன் கீழே அமர்ந்து இயற்கை இன்பத்தில் லயித்துக் கொண்டிருக்கிறாள் காதலி. பக்கத்திலிருக்கும் தடாகத்திலிருந்து அப்பொழுது தான் பறித்து வந்த ஒரு செந்தாமரை மலரை, காதலியின் அருகே அமர்ந்து அவளது கருங் குழலிலே சூட்டி மகிழ்கிறான் காதலன். அம் மகிழ்ச்சி காதலியின் உள்ளத்திலும் பிரதிபலிக்கிறது.

அறுபத்து நான்காம் பக்கத்தில் வெளியாகி யிருக்கும் 'துயில்' பாட்டில் வரும் இந்த இன்பக் காட்சிதான் இந்த இதழின் அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

ஓவியம்: **'ஜோதி'**

ஸ்ரீ காந்தன்

மூல ஆசிரியர்
சரத்சந்திரர்

மொழி பெயர்ப்பு
ர. ஷண்முகசுந்தரம்

அத்தியாயம் மூன்று

"தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது. இனி வீட்டிற்குப் போகலாம் அப்பா" என்றேன்.

இந்திரன் மிகுந்த அன்புடன், "தூக்கம் வந்து கொண்டுதான் இருக்கிறது. என்ன செய்கிறது ஸ்ரீகாந்தா! இன்று சிறிது நேரம் ஆகத்தான் ஆகும். இன்னும் எவ்வளவோ வேலை இருக்கிறது. சரி, ஒரு காரியம் செய். இங்கேயே கொஞ்ச நேரம் படுத்துக் கொள்" என்றான்.

வேறு ஒன்றும் பேசிக் கொள்ளாமல் நான் அதே இடத்திலேயே சுருண்டு படுத்துக் கொண்டேன். பாதிக் கண் மூடியவாறு நான் மல்லாந்து படுத்துக் கொண்டு மேகஞ் சூழ்ந்த ஆகாயத்தையும் சந்திரனையும் பார்த்துக் கொண்டிருந்தேன். சந்திரன் ஒளிந்தது, மறுபடி வெளிக்கிளம்பியது. பிறகு ஒளிந்து திரும்பியும் வெளிக்கிளம்பி சிரித்தது. காதில் ஜலப்பிரவாகத்தின் பேரொலி ஒலித்துக் கொண்டிருந்தது. அன்று நான் அனைத்தையும் எவ்வாறு மறந்துவிட்டு மேகத்தையும் சந்திரனையும் பார்ப்பதிலே மூழ்கியிருந்தேன் என்பது இன்றும் எனக்கு விளங்கவில்லை. என்னை மறந்து சந்திரனைப் பார்த்து அனுபவிக்கும் வயதல்ல அது. ஆனால் பெரியவர்கள் இயற்கை விநோதங்களைப் பார்த்து விட்டு, 'இந்தச் சந்திரன், மேகங்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை. அனைத்தும் மாயை; பொய். சகலமும் அவரவர் மனம் தான் காரணம். காணப்படுவதெல்லாம் மனத்தின் பிரதிபலிப்பு' என்று சொல்கிறார்கள். நானும் அதே நிலையில் தான் இருந்தேன். இவ்வளவு பயங்கரமான சம்பவத்திற்குப் பிறகு எனது குழம்பிய மனமும் அப்போது ஒரு சாந்தமான காக்ஷியைக்கண்டு ஆறுதல் பெற விரும்பியது போலும்.

நேரம் ஆகிக் கொண்டு சென்றது. சந்திரன் ஒரேயடியாக மறைந்து விட்டது போல எனக்குத் தோன்றியது. திடீரென வலது பக்கம் சென்று கொண்டிருந்த தோணியும் இடதுபுறமாகச் செல்ல ஆரம்பித்தது. சற்றே தலையை உயர்த்திப் பார்த்தேன். தோணி அந்தப் பக்கம் போவதற்குத் தயாராக இருந்தது.

அப்பொழுது எனக்குப் பேசுவதற்குத் தெம்பு இல்லை. ஆகையால் மறுபடியும் பழையபடி படுத்துக்கொண்டேன். மீண்டும் அந்தச் சந்திரனையும், எல்லையற்ற ஜலராசியையும் நோக்கிக் கொண்டிருந்தேன். இம்மாதிரி ஒரு மணி நேரம் சென்றிருக்கலாம்.

சர்... ர்...... என மணலில் தோணி நின்றது. சலிப்புடன் எழுந்து உட்கார்ந்து

கொண்டேன். 'அடே! இக்கரை வந்து விட்டோமே! இது எந்த இடம்? வீடு இங்கிருந்து இன்னும் எவ்வளவு தூரம்? மணல் மேட்டைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லையே! என்ற கேள்விகளைக் கேட்பதற்கு முன்பே அருகில் குலைத்த நாயைக் கண்டு கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டேன்.

"கொஞ்சம் பொறு ஸ்ரீகாந்தா! நான் கொஞ்சம் உலாவி விட்டு வருகிறேன்! இனி எனக்குப் பயமில்லை. பக்கத்தில் தான் வீடுகளிருக்கின்றன" என்ருன் இந்திரன்.

இவ்வளவு கடினமான பரீட்சைகளி லெல்லாம் தேறிவிட்டு கடைசில் தோல்வி யடைய நான் விரும்பவில்லை. உலகத்தின் மிகப்பிரம்மாண்டமான விஷயங்கள் எல்லாம் மனிதனின் வாலிபத்தின் முன் அற்பம்தானே? விதியைத் தடுக்க முடியா விட்டாலும் யுவதிகளின் மனே பாவத்தை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது. அதனல்தான் பிருந்தாவனத்தின் யுவ யுவதிகளின் பால்ய லீலைகள் பன்னெடுங் காலமாக பரம ரகஸ்யமாக இருந்து வருகிறது. அறிவுக்கு எட்டாததால் சிலர் 'நல்லது' என்ருர்கள். வேறு சிலர் 'நீதி' 'ரசம்' என்ருர்கள். இன்னும் சிலரோ ஒன்றும் கூறவில்லை. இந்த வாதப் பிரதி வாதங்களிலிருந்து வெளியேறி விட்டனர். வெளியேறியவர்கள் மறைந்து விட்டார்கள், பைத்தியக்காரர்களாகிவிட்டார்கள். ஆடிப்பாடி அழுது தொழுது உலகத்தையே பைத்தியமாக்கி விட்டார்கள். முதலில் திட்டியவர்களும் இம்மாதிரி ரஸத்தைப் பொழிவது வேறு எங்கும் கிடையாது என்ருர்கள். இந்தப் பைத்தியக் கூட்டத்தைத் தவிர வேறு யாரிடமும் இம்மாதிரி கீதத்தைக் கேட்டதில்லை என்ருர்கள். இந்த பிருந்தாவன யுவ யுவதிகளின் லீலைகளின் எல்லையை யாரால் தேடிக் கண்டு பிடிக்கமுடியும்? யாரும் இது வரையில் அடைந்ததில்லை. இனிமேல் அடைவார்களோ என்னவோ! அந்தச் சமயத்தில் நானும் அதே நிலையில்தான் இருந்தேன் என்று சொல்ல வந்தேன். வாலிபத்தின் தளதளப்பும், உறுதியும் பூரணமாக அப்போது வாராதிருக்கலாம். இருந்தாலும் அதன் வித்து முளைவிடத் தொடங்கியிருந்தது. சுய மதிப்பு இதயத்தில் இடம் பெற்று விட்டது. அந்நிலையில் யார் தான் தோழன் முன்னிலையில் பயங்காளி என்று காட்டிக் கொள்வான்? ஆகையால் உடனே நான் "நான் எதற்கப்பா பயந்து கொள்கிறேன்? நீ போய் வா" என்றேன்.

இந்திரனும் மறுவார்த்தை பேசாமல் போய் விட்டான்.

ஆகாயத்தில் இருளைக் கிழித்துக் கொண்டு நட்சத்திரங்கள் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. எதிரில் எல்லையற்ற மணற் பரப்பு. இது எந்த இடம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது இந்திரன் ஓடிவந்து சேர்ந்தான். "ஸ்ரீ காந்தா! உன்னிடம் இதைச் சொல்லத் தான் ஓடி வந்தேன். யாராவது மீன் வாங்க வந்தால் — ஜாக்கிரதை கொடுக்கக் கூடாது. ஜாக்கிரதை; ஒருக்காலும் கொடுக்கக் கூடாது. என்னைப் போல வேஷம் போட்டுக் கொண்டு யாராவது வந்தாலும் கொடுக்கக் கூடாது. 'ஐயோ! நான் மாட்டேன். பிரியமிருந்தால் எடுத்துக் கொண்டு போ' என்று சொல்லி விட வேண்டும். கையிலெடுத்துக் கொடுத்து விடாதே. நானுயிருந்தாலும் சரி" என்ருன்.

"ஏன்?"

"திரும்பி வந்து சொல்கிறேன்" என்று கூறி விட்டு வந்தது போலவே ஓடி விட்டான்.

இதைக் கேட்டு எனக்கு ரோமம் சிலிர்த்தது. உடலெல்லாம் ஊசி குத்துவது போல் இருந்தது. நான் குழந்தை அல்ல. இருந்தாலும் அவன் கூறியதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனது வாழ்க்கையில் இம்மாதிரி எத்தனையோ சம்பவங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மிக மிக அற்பம் தான். இருந்தாலும் அன்று இரவுப் பயணத்தில் நான் அடைந்த பயத்தை வார்த்தையால் வர்ணிக்க முடியாது. பயத்தின் எல்லையையே அடைந்து விட்டேன். ஒவ்வொரு கணமும் மதகுக்குப் பின் யாரோ இருந்து கொண்டு எட்டிப் பார்ப்பது போலிருந்தது. நான் மருண்டு பார்க்கும் போது ஆள் மறைவது போலிருந்தது.

சிறிது நேரம் தானிருக்கும். அதற்குள் இந்திரன் சென்று வெகு நேரம் ஆனது போலிருந்தது.

ஏதோ மனிதக் குரல் கேட்பது போலிருந்தது. பூணூலை எடுத்து விரலில் சுற்றிக் கொண்டு நன்கு காது கொடுத்துக் கேட்டேன். இரண்டு மூன்று பேர்கள் பேசிக் கொண்டு இந்தப் பக்கம் வருவது தெரிந்தது. அவர்களில் ஒருவன் இந்திரன். மற்றிருவரும் இந்துஸ்தானிக்காரர்கள். அவர்கள் முகத்தைப் பார்க்கு முன் நிலவு வெளிச்சத்தில் அவர்கள் நிழல் பூமியில் விழுகிறதா என்பதை நன்கு பார்த்துக் கொண்டேன். பேய்களின் நிழல் பூமியில் விழாது என்று கேள்விப்பட்டிருந்தேன்.

ஆம்; அது நிழல் தான்! மங்கலாகத் தெரிந்தாலும், அது நிழல் தான். அன்று உலகத்தில் வேறு எந்த மனிதனும் ஒரு பொருளைப் பார்த்து என்னைப் போல் திருப்தி அடைந்திருக்க மாட்டான். பார்வையால் அடையக்கூடிய இன்பம் ஒன்று உண்டானல் அது இதுதான். வந்தவர்கள் பெரிய மீன்களை எல்லாம் தோணியிலிருந்து எடுத்து ஒரு துணியில் கட்டிக் கொண்டார்கள். அதற்குப் பதிலாக இந்திரனிடம் விலையைக் கொடுத்தார்கள்.

இந்திரன் படகை அவிழ்த்து விட்டான். கரை ஓரமாக ஆற்றை எதிர்த்துப் போய்க் கொண்டிருந்தான்.

நான் ஒன்றும் பேசவில்லை. அப்போது அவன் மீது எனக்கு அளவு கடந்த வெறுப்பு உண்டாகி இருந்தது. இவைகள் எல்லாம் என்ன? சற்று முன் தான் சந்திர வெளிச்சத்தில் நிழலைக் கண்டு அளவு கடந்த ஆனந்தம் அடைந்திருந்தது மனம்.

மனிதனுடைய இயற்கைக் குணமே இது தான்! துளிக் குற்றத்தைக் கண்டாலும் முன் நடந்தவைகளை எல்லாம் மறப்பதற்கு என்னேரமாகிறது? சிவ! சிவா! இவ்விதமா அவன் பணம் அடைகிருன்! இது வரையிலும் மீன் திருடியது என் மனதில் ஒரு திருட்டாக இடம் பெறவில்லை! சிறு வயதில் பணம் காசு திருடினுலும் அதைத்திருட்டாகப் பாவிக்க முடிகிறதில்லை. அது குற்றமேயானுலும் ஏனே சிறு குழந்தைகள் அதைக் குற்றமாகப் பாவிப்பதில்லை. அவன் மீனிற்காகப் பணம் வாங்கியதும் இது வரையிலும் அவனிடம் தென்பட்ட வீர பராக்கிரமங்களெல்லாம் பறந்து விட்டது. அந்த மீன்களை கங்கையில் வீசி எறிந்திருந்தாலும் அல்லது வேறு என்ன செய்திருந்தாலும் சரியே, அன்று நாங்கள் செய்த காரியத்தை எவராவது திருட்டு என்று கூறி இருந்தால் கூறியவருடைய மண்டையைப் பிளக்க நான் தயங்கவே மாட்டேன். ஆனல், அட கடவுளே! இது என்ன? ஜெயில் கைதி செய்கிற காரியமல்லவா இது!

"உனக்குக் கொஞ்சம் கூடப் பயமில்லையாடா?" என்றுன் இந்திரன்.

"இல்லை."

"ஆனல், உன்னைத் தவிர அங்கு யாரும் உட்கார்ந்திருக்க மாட்டார்கள், தெரியுமா உனக்கு? உன்னிடம் எனக்கு ரொம்பப் பிரியம். எனக்கு இப்படிப் பட்ட சிநேகிதனே இல்லை. நான் வரும்போதெல்லாம் உன்னைத்தான் அழைத்து வருவேன். ஏன்?"

நான் பதில் பேச வில்லை. ஆனல் அப்போது சந்திர, வெளிச்சம் பட்டுப் பிரகாசித்த அவன் முகத்தைப் பார்த்ததும் இந்நேர வரையிலும் அவன் மீது இருந்த வெறுப்பு, கோபம் அனைத்தும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. உடனே நான் "நீ எப்பவாவது அவைகளைப் பார்த்திருக்கிருயா இந்திரா?" என்றேன்.

"எவைகளை?"

"அது தான் மீன் வாங்க வருபவைகள்."

"இல்லையப்பா? பார்த்ததில்லை. ஆனல் ஜனங்கள் கூறுவதைக்கேட்டிருக்கிறேன்."

"நீ இங்கு தனியாக வருவாயா? இந்திரன் சிரித்துக் கொண்டு, நான் தனியாகத்தானே வந்து கொண்டிருக்கிறேன்" என்றுன்.

"பயமாக இருப்பதில்லையா?"

"இல்லை ராம நாமத்தை உச்சரித்தால் அவைகள் கிட்டக் கூட வராது."

சிறிது நேரம் பொறுத்து அவன் மறுபடியும்," ராம நாமம் என்ன சாதாரண வஸ்துவா? நீ ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டு பாம்பைக் கையால் பிடித்தால் கூட அது ஒன்றும் செய்யாது. வழிதவறிப் போனுலும் ஒன்றும் பயந்து விடக் கூடாது. பயந்தால் ஒன்றும் காரியம் ஆகாது. அப்போது, இவை

கள் எல்லாம் அந்தர்யாமியின் காரியம் என்பது தெரியும்'' என்முன்.

மணல் நிறைந்த கரை முடிந்ததும் வயல் சூழ்ந்த கரை ஆரம்ப மாகிறது. அந்தப் பக்கத்தை விட இந்தப் பக்கம் ஆற்று நீரின் வேகம் குறைவுதான்.

இந்திரன் எதிர்ப்புறத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டு, ''அதோ தெரிகிறதே அந்த மரக் கூட்டங்கள். அவைகளுக் கிடையில் தான் நாம் போக வேண்டும். அங்கு நான் கொஞ்சம் இறங்குவேன். நேரமாகாது. வன் நான் போகட்டுமா?'' என்முன்.

எனக்குப் பிரியமில்லாதிருந்தும் நான் 'சரி' என்றேன். வேண்டாம் என்று சொல்வதற்கு என்னல் முடியவில்லை. இப்போது இந்திரனுக்கும் என்னைப் பற்றிக் கவலை இல்லை. இருந்தாலும் அவன் கூறியது எனக்குப் பிடிக்கவில்லை. தூரத்திலிருந்து அந்த மரக் கூட்டங்களைப் பார்த்தாலே நடுக்கமெடுக்கும் போலி ருந்தது. அந்த இரவில் இருளடர்ந்த மரங்களுக்கு மத்தியில் உட்கார்ந்து கொண்டு ராம நாமத்தின் மகத்துவத்தை பரீட்சிக்க மனம் இடம்தரவில்லை. கையில் மீன் இல்லை. ஆகையால் மீன் கேட்க ஒன்றும் வராதுதான். ஆனல் அவை களுக்கு மீன் ஒன்றின்மேல்தான் பிரிய மிருக்கிறது என்று எப்படிக் கூறுவது! மனிதனின் கழுத்தை முறித்து ரத்தம் குடிக்கும் என்று கேள்விப் பட்டிருக்கி றேனே!

வெள்ளத்தில் படகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும் கரையிலிருந்த மரங்கள் கரு கும்மென எங்களைச் சூழ்ந்து கொண்டது. இடது புறக் கரையிலும் மரங்கள் பிரம் மாண்டமாக வளர்ந் திருந்தது. நான் தனி யாக இருந்திருந்தால் இந்த ராம நாம மொன்றும் பிரயோசனப் பட்டிருக்காது. அவன் சிறிதும் விழித்த கண் மூடாம லிருந்தான்.

''இங்கு துறை இல்லையே. படகை எங்கு நிறுத்தி விட்டுப் போய்வருவாய்?'' என் றேன்.

''எதிரில் இருக்கிற ஆலமரத்தருகில் ஒரு துறை இருக்கிறது.'' என்முன் இந்திரன்.

சிறிது நேரத்திற்குள் எங்கிருந்தோ துர் வாசனை வந்தது. வர வர அந்த வாசனை பொறுக்க முடியாமலிருந்தது. முன்னல் போகப்போக வாசனையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நான் மூக்கில் துணியை வைத்துக் கொண்டு, ''இங்கு ஏதாவது செத்துக் கிடக்கும் இந்திரா?'' என்றேன்.

''ஆமாம். பிணம் அழுகிப் போயிருக் கும். இப்போது காலரா பயங்கரமாகப் பரவி இருக்கிறதே. எல்லோரும் பிணத் தை எரிப்பது இல்லையே. தலையில் கொள்ளி வைத்ததும் ஓடி வந்து விடுகிருர்கள். நாய் நரிகள் தின்கின்றன. மீதி அழுகி விடு கிறது. அவைகளின் துர்நாற்றம் தான் இது.'' என்முன்.

''பிணத்தை எங்கு எறிவார்கள்?''

''அங்கிருந்து இது வரையிலும் தான். இது வரையிலும் சுடுகாடு தானே! எங்கு வேண்டுமானுலும் எறிந்து விட்டு கீழ்த் துறையில் குளித்து விட்டு வீடு போய் விடுவார்கள். அடே! நீ ஏன் நடுங்கு கிருய்? நரிகள் சண்டை இட்டுக் கொள் ளும். சரி, என் அருகில் வந்து உட்கார் ந்து கொள்.''

என் குரல் அடைத்துக் கொண்டது. எப்படியோ நகர்ந்து அவனருகில் போய் உட்கார்ந்து கொண்டேன். அவன் என் னைத் தொட்டு, ''பயம் எதற்கு ஸ்ரீகாந்தா! நான் இங்கு இரவு நேரத்தில் எத்தனையோ தரம் வந்திருக்கிறேன். மூன்று தரம் ராம நாமத்தை உச்சரித்து விட்டால் அப்புறம் ஒன்றும் நம்மை அணுகாது'' என்முன்.

அவன் என்னைத் தொடவும் சிறிது உணர்வு அடைந்தேன். நான் தழு தழுத்த குரலில், ''வேண்டாமப்பா! உன் காலைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளு கிறேன். நீ இங்கு எங்கும் இறங்க வேண் டாம். நேராகப் போய் விடலாம்'' என் றேன்.

மறுபடியும் அவன் எனது தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு, ''இல்லை ஸ்ரீகாந்தா! போய்த்தான் வர வேண்டும். இந்தப் பணத்தைக் கொடுத் தாக வேண்டும். என்னை வழி பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் மூன்று நாளாக வரவில்லை'' என்முன்.

''பணம் நாளைக்குக் கொடுக்கக் கூடாதா?''

"அப்படிச் சொல்லாதே. என்னோடு நீயும் வா" ஆனால் யாரிடமும் இதை சொல்லக் கூடாது.

நான் மெதுவாக 'இல்லை' என்று கூறி விட்டு கற்சிலை போல உட்கார்ந்து கொண்டேன். தொண்டை வறண்டு முள் போல இருந்தது. ஆனால் குனிந்து தண்ணீர் குடிக்கவோ — ஏன் — உடலசைக்கவோ என்னால் முடியவில்லை.

மர நிழலுக்கு மத்தியில் வந்ததும் அருகில் அந்தச் சிறிய துறை தென்பட்டது. நாங்கள் இறங்கிய இடம் வெட்ட வெளியாக இருந்ததால் அந்த மங்கிய வெளிச்சத்தில் நாற் புறமும் நன்கு தெரிந்தது. எனக்கு இந்த வேளையில் இது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. படகு துறைக் கல்லில் போய் மோதி விடாதிருக்க இந்திரன் முதலிலேயே எச்சரிக்கையாக இருந்தான். படகு கரை அடைந்ததும் இந்திரன் கீழே எட்டிக் குதித்தான். குதித்தவன் பயத்துடன் 'அப்பாடா!' என்றான். நான் அவன் பின்னால் படகில் இருந்தேன்.

எனது வாழ்க்கையில் இதற்கு முன் திடீர் விபத்து ஏற்பட்டதே இல்லை. அது எவ்வளவு பெரிய வேதனையைத் தரும் என்பது அன்று நேருக்கு நேர் காண விட்டால் ஒரு போதும் தெரிந்து கொள்ள முடியாது. இருண்ட இரவில் எங்கும் நிசப்தம் குடி கொண்டிருந்தது. இடை இடையே நரிகள் ஊளையிடுவதும், எங்கோ மரத்திலிருந்து மருண்ட பறவை சிறகடிப்பதும், தூரத்தில் ஓலமிடும் நதிப் பிரவாகமும் இருளைப் பன் மடங்கு எடுத்துக் காட்டியது. நாங்களிருவரும் இதன் மத்தியில் அந்தசோகக் காக்ஷியைக் கண்டோம். ஒரு ஆறு ஏழு வயதுப் பையன் கீழே விழுந்து கிடந்தான். அவனது உடல் முழுதும் நீரில் மறைந்திருந்தது. தலை மட்டும் கரையில் இருந்தது. நரி ஒரு வேளை தண்ணீரிலிருந்து இழுத்துப் போட்டிருக்கலாம். எங்களைக் கண்டதும் ஓடிப் போய் எங்காவது ஒளிந்து கொண்டு நாங்கள் போகட்டுமென்று இருக்கலாம். அவன் இறந்து நாலைந்து மணி நேரம் தான் ஆகி இருக்கலாம். அவன் காலராவின் வேதனை அனுபவித்துத்தான் கங்கையின் மடியில் துயின்று கொண்டிருந்தான். மாதா கங்காதேவியும் அவனுடைய கோமளமான உடலை அணைத்துத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். இவ்விதம் நீரிலும் நிலத்திலும் உறங்கிக் கொண்டிருந்த பாலனைப் பார்த்தோம்.

நிமிர்ந்து பார்த்தேன். இந்திரனுடைய கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. "நீ சற்று இங்கேயே இரு ஸ்ரீகாந்தா! நான் இந்தப் பையனை படகில் வைத்து தூரத்தில் கொண்டு போய் போட்டு வருகிறேன்" என்றான்.

அவன் கண்ணீர் விட்டதைப் பார்த்ததும் நானும் அழுதது உண்மை தான். ஆனால் அதைத் தொடுவது என்றதும் எனக்கு வெறுப்பாக இருந்தது. பிறருடைய துக்கத்தைக்கண்டு துக்கமடைந்து கண்ணீர் விடுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் பிறர் துக்கத்தைப் பங்கிட்டுக் கொள்வது மிகவும் கடினமான காரியம் தான். அதுவும் நான் இந்த உலகத்திலேயே சிறந்த ஹிந்து குடும்பத்தில் வசிட்டருடைய புனிதமான ரத்தம் கலந்த வம்சத்திலே உதித்தவன். இறந்தவர்களைத் தொடுவது கூடாது என்று பிறவியிலேயே நான் பயின்று வந்தவன். அதோடு எத்தனையோ சாஸ்திரங்கள் வேறு குறுக்கிடுகின்றனவே. இவன் என்ன நோயில் இறந்தானோ, யாருடைய பையனோ, என்ன ஜாதியோ? இறந்த பிறகு செய்ய வேண்டிய சடங்கு எல்லாம் செய்து கொண்டு வந்த பிரேதமோ என்னமோ! இவைகள் எல்லாம் தெரியாமல் இவனை எப்படித் தொடுவது?

சிரமத்துடன் எப்படியோ அவனை, "என்ன ஜாதிப் பிணமோ, அதை எப்படி தொடலாம்?" என்று கேட்டேன்.

இந்திரன் பிரேதத்தின் கழுத்தில் ஒரு கையும் இடுப்பில் ஒரு கையும் போட்டுத் தூக்கிப் படகில் வைத்து விட்டு, "இல்லாவிட்டால் நரி இழுத்துத் தின்று விடாதா? அடடா! இன்னும் முகத்திலிருந்து மருந்து வாசம் அடிக்கிறது" என்று கூறிவிட்டு நான் உட்கார்ந்திருந்த இடத்தில் நன்கு பிரேதத்தைப் படுக்க வைத்துத் தானும் ஏறி உட்கார்ந்து கொண்டு, "பிணத்திற்கு ஜாதி இருக்கிறதா" என்று கேட்டான்.

"ஏன், இல்லையா?" என்றேன் நான்.

"அடே, இதுதான் பிணமாயிற்றே! இறந்ததிற்கு ஜாதி ஏது? சரி, இந்தத் துடுப்பு என்ன ஜாதி? மாவா, பலாவா? எதோ ஒரு மரத்தை வெட்டிச் செய்தது.

இதைத் துடுப்பு என்று சொல்லாமல் மா, பலா என்று சொல்லுகிறார்கள்? தெரிந்ததா? இதுவும் அப்படித்தான்'' என்றான்.

உதாரணம் என்னவோ குழந்தைகளுக்கும் புரியக் கூடியதுதான். இதன் மறைவில் உண்மை ஒளிந்து கொண்டிருப்பதை மறுக்க முடியாது. இடையிடையே இம்மாதிரி அநேக விஷயங்கள் கூறுவதுண்டு. இந்த வயதில் யாரிடமும் உபதேசம் பெறாமல் இவ்வளவு பெரிய விஷயங்களை எல்லாம் எப்படி அறிந்தான் என்று நான் யோசிப்பதுண்டு. வயது அதிகரிக்க அதிகரிக்க இவைகளுக்கு பதிலும் கண்டு கொள்ளலாம் என்பதை இப்போது உணர்ந்தேன். இந்திரன் துளியும் கபடமற்றவன். மனதில் ஒன்று, செயலில் மற்றொன்று என்பதை அறியாதவன். ஆகையால் மனதில் பட்ட உண்மையை ஏற்று சுலபமாக இக்காரியத்தைச் செய்து முடித்தான். அவனது கபடமற்ற உள்ளம் எவ்வித உபதேசமுமின்றியே சகல விஷயங்களையும் உணர்ந்தது. உண்மையில் கபடமற்ற புத்திதானே உலகத்தில் இறுதியான, முடிவான புத்தி! அதற்கு மேல் வேறு ஒன்றும் கிடையாதே. நன்கு பார்த்தால் இந்த உலகத்திலே 'பொய்' என்று ஒன்றும் தென்படாது. பொய் என்பது மனிதனைக் கற்பித்துக் கொண்டது. தங்கத்தைப் பித்தளை என்பது பொய். இது எனக்குத் தெரியும். இதனால் பித்தளைக்கோ தங்கத்திற்கோ ஆகவேண்டியது என்ன? உன் இஷ்டப்படி நீ எண்ணிக் கொள்ளலாம். அவைகள் எப்போதும் போல் தானிருக்கும். தங்கமென்று அதை எண்ணி இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தால் அதனுடைய மதிப்பு உயர்ந்து விடாது. பித்தளை எனத் தெருவில் எறிந்து விட்டாலும் அதன் மதிப்புக் குறைந்து விடாது. 'பொய்' என்பது மனித மனத்தை தவிர்த்து வேறு எங்கும் கிடையாது. இந்திரன் இந்த உண்மையைத் தெரிந்தோ தெரியாமலோ தன் மனதில் ஏற்றுக் கொண்டான். ஆகையால் அவனது புத்தியும் நல் வழியில் செல்வதில் ஆச்சரியமென்ன?

அவனைப் பொறுத்த வரையிலும் இது ஆச்சரிய மற்றதானாலும் பிறருக்கு இது எவ்வளவோ ஆச்சரியத்தை அளிக்கக் கூடியதுதான்.

இந்த சம்பவத்திற்கு பத்துப் பனிரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஒரு கிழ பிராமணத்தி எங்கள் தெருவில் இறந்து விட்டாள். அவளுடைய கருமத்திற்கு யாரும் வரவில்லை. அவள் காசி சென்று வரும் வழியில் நோய்வாய்ப் பட்டு இவ்வூரில் ஒரு வீட்டில் இறங்கினாள். இறங்கிய வீடு வெளி நாடு சென்று திரும்பியவர் வீடு. அவர் ஜாதியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். அந்தக் கிழவி செய்த குற்றமெல்லாம் அந்த வெளி நாடு சென்று திரும்பியவர் வீட்டில் உயிரை விட்டது தான்.

சரி; அவளைக் கொண்டு போய் எரித்து விட்டோம். மறுநாள் காலையில் பார்த்தால் எல்லோர் வீட்டுக் கதவும் மூடப்பட்டிருந்தது. விசாரித்ததில் கடந்த இரவு பனிரண்டு மணி வரையிலும் பலர் கூடிப் பேசி பிராயச் சித்தம் செய்தாக வேண்டுமென்று தீர்மானித்தார்களாம். எங்களுக்கு வேறு வழியில்லாமல் டாக்டரை அடைந்தோம். அவர் இவைகளைக் கேட்டு, ''இப்படி ஜனங்களை சீரழிக்கிறவர்கள் வீட்டுக்கு நான் எப்போதும் அடி எடுத்து வைக்கப் போகிறதில்லை'' என்று கூறி விட்டார். யார் போய் இதைச் சொன்னார்களோ தெரியவில்லை. எங்களுடைய முதல் குற்றமாக இது இருப்பதால் மன்னித்து விடுவதாகவும், பிராயச் சித்தம் தேவை இல்லை என்றும் கூறி விட்டார்கள். இதைக் கேட்டு டாக்டர், ''இரண்டு நாளாக எங்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணியதற்காக ஒவ்வொருவரும் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும்'' என்று கூறி விட்டார். அன்று சாயங்காலமே பெரிய மனிதர்கள் அனைவரும் டாக்டர் வீட்டில் கூடி விட்டார்கள். டாக்டரை ஆசீர்வதித்து அவர்கள் கூறிய வார்த்தைகளை எழுத்தில் எழுத முடியாது. டாக்டருக்கும் கோபம் அடங்கி விட்டது. நாங்களும் பிராயச் சித்தத்திலிருந்து தப்பினோம்.

சரி, போகட்டும். எதையோ சொல்ல வந்து எதையோ சொல்லி விட்டேன். நான் கூற வந்தது என்னவென்றால் இந்திரன் இவ்வளவு சிறிய வயதில் அறிந்த உண்மையை அவ்வளவு பெரிதான சமூகத் தலைவர்களால் அறிய முடியவில்லை என்பதுதான். அன்று டாக்டர் அவர்களுடைய சாஸ்திர ஞானத்திற்கு சிகிச்

சை செய்திருக்கா விட்டால் அவர்களைப் பிடித்திருந்த நோய் ஒரு போதும் நீங்கியிருக்காது.

இந்திரன் அந்தப் பிரேதத்தை எடுத்துப் படகில் வைக்கும் போது விடியற்காலமிருக்கும். சிறிது நேரம் பிரேதத்தையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தை உயர்த்தியதும் அந்த மங்கிய சந்திர வெளிச்சத்தில் அவன் முகத்தில் யாரையோ எதிர்பார்ப்பது போன்ற பாவம் தென்பட்டது.

“இந்திரா, வா போகலாம்” என்றேன் நான்.

இந்திரன் எதையோ நினைத்துக் கொண்டு, “எங்கே?” என்றான்.

“நீ எங்கேயோ போக வேண்டுமென்றாயே!”

“இன்று வேண்டாம்”

நான் சந்தோஷத்துடன், “அதுதான் நல்லது அப்பா! வா, வீட்டிற்குப் போகலாம்” என்றேன்.

இந்திரன் என் முகத்தைப் பார்த்துக் கொண்டு, “ஆமாடா, மனிதன் இறந்த பிறகு என்ன ஆகிறான்? தெரியுமா?” என்றான்.

“தெரியாதப்பா. தெரியாது! இப்போது வீட்டிற்குப் போகலாம் வா. எல்லோரும் சொர்க்கத்திற்குப் போகிறார்கள். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் என்னை வீட்டில் கொண்டு போய் விடு” என்றேன்.

இந்திரன் இவைகளைக் கவனியாதவன் போல, “எல்லோரும் சொர்க்கம் போக முடியாதே. எல்லோரும் கொஞ்ச நாளைக்கு இங்கு இருக்க வேண்டி இருக்கிறதே. நான் அவனை ஜலத்தில் போடும் போது அவன் மெதுவாக ‘அண்ணா’ வென்றான்” என்றான் இந்திரன்.

நான் அழுது கொண்டு “என்னை ஏன் பயப் படுத்துகிறாய்?” என்றேன்.

இந்திரன் ஒன்றும் பேசாமல் படகு தள்ள ஆரம்பித்தான். இரண்டொரு நிமிஷங்களுக்குப் பிறகு “ஸ்ரீகாந்தா! மனதிற்குள் ராம நாமத்தைச் சொல்லிக் கொள். அவன் படகை விட்டுப் போய் விடவில்லை. நமக்குப் பின்னால்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்” என்றான்.

அதற்குப் பிறகு நான் கண்ணை மூடிக் குப்புறப் படுத்துக் கொண்டேன். அதற்கப்புறம் எனக்கு ஒன்றும் தெரியாது. கண்ணை விழித்த போது இருளில்லை. நாங்கள் கரையை அடைந்திருந்தோம். இந்திரன் எனது கால் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தான். “இன்னும் கொஞ்சம் தான் போக வேண்டும். ஸ்ரீகாந்தா! எழுந்து உட்கார்” என்றான் இந்திரன்.

(தொடரும்)

அயலான்

'கலீனா'

★



"ஆலும் செழித்தே பழுத்திருக்க,
அருகே நிழலும் படர்ந்திருக்க,
கோலக்கிளியே! முகவாட்டம்
கொண்டது மென்ன? சொல்லாயோ?"

"செக்கச் சிவந்த பழங்கொத்தி
சேர்ந்தே இனத்தார் விருந்துண்ண,
ஒக்கக் கவலை யுடனோய்ந்தே
யுறைவாய்! கிளியே! இதுமேனோ?"

"ஆகா யத்தின் மேற் பறந்தும்
அங்கொன் றுடனொன் றைத் தொடர்ந்தும்
கீ, கா, வென்றவை யார்ப் பரிக்கக்
கிளி நீ வாளா விருப்பது மேன்?"

"சரச முடனுன் னவர் பலரும்
சரசம் பேசி மகிழ்ந்திருக்க
பாரம் மனதிற் கொண்ட விதம்
பைங்கிளியே நீ சொல்லாயோ?"

"கொத்தித் தொத்திக் கிளைதாவி
கத்திச் சத்தித் தவை கூவி
தத்திக் களிக்க நீ மட்டும்
தயக்கங் கொண்டாய்? இது மேனோ?"

"உள்ளக் களிப்பி லவைதா முன்
உறவை யறவே மறந்தனவோ?
பிள்ளைக் கிளியே! நானறியப்
பேசாய்! விந்தை! பிழையேதோ!"

"கனிதின் னற்றும் பசியிலையோ?
களியிற் சேரத் தெம்பிலையோ?
தனியோரிடத்தே யுருகலுற்றாய்!
தத்தாய்! கவலை சொல்லாயோ?"

"தூரா தொலையோர் காத வழி
தொடுவான் மலையை முத்த மிடல்
பாராய் அருவி பாய்ந்தோடும்
பைங்கா! அது யான் வாழ் பூமி."

"அன்பர் பலருட னேகூடி
அருவித்தடத்தில் நீராடி,
இன்பம் மிகவே விளையாடி
இசையுடன் வாழ்ந்திட்டோம். ஒரு நாள்"

"தூரப் பச்சை கவர்ந்திடவும்
துறுதுறுத்தாசை தூண்டிடவும்
நேரிற் பறந்தேன் விளையாட்டாய்;
நிலைத்தேன்; அயர்ந்தேன் தாய்நாட்டை."

"என்னை மறவா அன்னை பிதா
என் பிறப்போடும் பிரிவதனால்
கன்னும் மனத் தென் பாலர்களும்
கருதி வழிபார்த்திருப் பாரால்!"

"காணுதெனை யொரு கணம் வாழாக்
காதல் மனையுங் கரைந்திடுவாள்!
வீணாளிங்கே கழிக்கின்றேன்!
வெறியேன்! 'அயலான்' இவர்க்கானேன்!"

"நஞ்சென ஊணும் வெறுத்தது காண்!
நண்பா! நித்திரையுங் கொள்ளேன்.
நெஞ்சம் மெலிந்தேன், பேச்சற்றேன்
நெருப் பென்றெரிக்கும் பிரிவால் யான்!"

பேசுவது எப்படி?

[கா. மு. ஷெரீப்]

ஆயிரமாயிரம் அடிகளுக்கும் மேல் உயர்ந்து வளர்ந்த இரு மலைகள். அதன் இடையிலே அகண்ட, ஆழமான பள்ளத்தாக்கு. இந்த மலைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல ஒரே ஒரு வழி. ஒற்றைத் தந்திக் கம்பியால் அமைந்த பாலம். அதன் மீது நடந்து செல்ல வேண்டிய அவசியத்தில் நாம் சிக்கிக் கொள்ளுகிறோம். அப்பொழுது எவ்வளவு ஜாக்கிரதையாக நாம் நடந்து செல்வோமோ அதைப் போன்றதுதான் பேசுவது என்பது. நிதானம், தன் நம்பிக்கை ஆகியவைகள் பேசுபவனுக்குப் பக்க பலமாக எப்பொழுதும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குச் செல்ல தந்திக்கம்பிப் பாலத்தின் மீது நடக்கத் துணிந்து தவறி விழுவதற்கு ஒப்பாக முடியும். பேச்சில் வழு ஏற்பட்டால் அதல பாதாளத்தில் வீழ்ந்த கதிதான். மக்கள் சமூகத்தில் உள்ள மதிப்பு அந்தக் கணமே அற்றுவிடும். இதை நினைவில் கொண்டேதான் வள்ளுவர்,

"யாகாவாராயினும் நாகாக்க. காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

என்று கூறியுள்ளார்.

"பேஷ்! சபாஷ்! என்ன அழகு! என்ன தெளிவு! எத்தனை அரிய கருத்துக்களுடைய பேச்சு" என ஒரு சபையிலே பேசும் சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்டு இன்புற்றிருக்கும் மக்கள் குழாத்தினிடையே; "ஆபாசம்! அபத்தம்! வெறுக்கத் தக்க உரைகள்" என்ற குறலை நொடிப் பொழுதில் நாம் கேட்க நேரிடலாம். அதற்குக் காரணம் அந்தப் பேச்சாளர் நாவைக் காவாமல் அதன் போக்கிலே விட்டு விட்டதைத் தவிர வேறு இருக்க முடியாது. "உங்கள் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்" என்று சில சமயங்களிலே சபா நாயகர் பேச்சாளருக்கு உத்தரவு பிறப்பிக்கிறாரே எதனால் என்கிறீர்கள்? அதுவும் பேசுவோரின் நாகாவாத் தன்மையினால்தான். மேடைப் பேச்சாளன் சிறைக்குச் செல்லுவது, கல்லடிபடுவது போன்ற செய்கைகளுக்கு இலக்காவது என்பது பெரும்பாலும் நாவடக்கம் இல்லாததினால்தான் என்று துணிந்து கூறலாம். அரசியல்ப் பேச்சாளர்கள் எதிர்க் கட்சிக்காரர்களால் வேண்டுமென்றே தாக்கப்படுவது இதில் சேராது. இதை யெல்லாம் எண்ணித்தான் தமிழ் மறை கண்ட வள்ளுவர் "நாவை அடக்கு; இல்லையேல் துன்பத்திற்காளாவாய்" என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்.

இரு நண்பர்களுக்கிடையே மெதுவாக ஆரம்பிக்கப்பட்ட பேச்சு விபரீதமாக மாறுவதும் உண்டு. காரணம் பேசும் நண்பர்கள் சொல்லை அளந்து பேசாததுதான். பேச்சு வேகத்தில் ஒருவன் சொல்லுகிறான் "டேய், எனக்குக் கோபம் உண்டாக்கினாயோ உன் பற்களை எண்ணி உன் கையில் கொடுத்து விடுவேன்! என்னை யார் என நினைத்துக் கொண்டாய்" என்று. இந்தப் பரமசாதுப் பிரகிருதி தன் பேச்சினால்தான் எதிரி தன் மீது அதிக ஆத்திர மடைகிறான் என்பதை ஒரு போதும் உணருவதேயில்லை! இது எத்தனை பெரிய தவறு.

"இன்று நம் விரோதிகளாக இருப்பவர்கள் அனைவருமே ஒரு காலத்தில் நண்பர்களாக இருந்தவர்கள் தான்" என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். ஆம், நட்பில்லை என்றால் விரோ

தழும் வரக் காரணமில்லை தானே? நட்பு பகையாக மாறுவதற்குள்ள முக்கிய காரணம் வரம்பு மீறிய பேச்சுத் தான் என்றால் அது மிகையாகாது. ஒரு அரசியல் வாதி மிக லாவகமாகத் தன் கட்சியின் உயர்வையும், எதிர்க் கட்சியின் குறைபாடுகளையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி ஊர் ஊராகப் பேசிச் செல்கிறான். திரள் திரளாக மக்கள் கூடி அவன் பேச்சைக் கேட்கிறார்கள். அவர்களின் உடம்புகளிலே வீர வெறி ஏறுகிறது. உணர்ச்சி வயப்படுகிறார்கள். அந்தப் பேச்சாளனின் கட்சியைப் பின்பற்றுகிறார்கள். அவன் எது சொன்னாலும் அதைச் செய்யத் தயாராகி விடுகிறார்கள். அதற்குக் காரணம் அந்தப் பேச்சாளனின் வாக்கு வன்மைதான். பேச்சு என்றால் வெறும் வன்மை வாய்ந்ததாக மட்டும் இருந்தால் போதாது; உண்மையோடு கூடியதாகவும் இருக்க வேண்டும். இல்லா விட்டால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக் குத்தான்' என்ற நிலை ஏற்பட்டு விடும். பேச்சு பித்தலாட்டம் கலந்தது என்பதை மக்கள் புரிந்து கொண்டு விட்டால் பிறகு அந்தப் பேச்சாளனின் நிலையைக் கேட்கவும் வேண்டுமா மக்கள்? அவன் மறுபடி பேச ஆரம்பித்தால், அவன் பேச்சைக் கேட்க மாட்டார்கள். அவரைத் துரத்தி அடிக்கவும் ஏற்பட்டுவிடும். தன்னைக் காத்துக் கொள்ள தலை தப்பினால் போதுமென்று அந்தப் பேச்சாளன் ஓட்டம் பிடிக்க வேண்டியதாகி விடும். ஆகவே சொல் உறுதிப் பாடுடைய தாகவே இருக்க வேண்டும்; உண்மை உடையதாக இருக்க வேண்டும். பிறரால் வெல்லும் தன்மை அற்றதாகவும் இருக்க வேண்டும். வள்ளுவர் சொல்லுகிறார்:

"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து"

என்று. உண்மை! ஹிட்லர், முசோலினி போன்றவர்கள் வெறும் சொல் வன்மை மட்டும் படைத்தவர்கள். எனவே வெகு சீக்கிரத்தில் வீழ்ந்து விட்டார்கள். வள்ளுவர், புத்தர், ஏசு நாதர், முகமது நபி ஆகியோர்களின் பேச்சில், சொல்லில், வன்மை, அழகு, இவற்றோடு உண்மை, உயர்வு, நேர்மை ஆகியவைகளும் இருந்தன; இருக்கின்றன. ஆகவேதான் இன்னுமவர்கள் போற்றப் படுகிறார்கள்; இன்னும் ஆயிர மாயிரம் ஆண்டுகளுக்கப்பாலும் போற்றப் படுவார்கள் என்று சொல்ல முடிகிறது.

சொல் பிறக்க வேண்டும் (பிரசவ உபாதைக்குப் பின் அழகிய குழந்தை பிறப்பது போன்று) உதிரக் கூடாது. (உதிரும் சருகுக்கு அத்தனை மதிப்பிருதல்லவா?) அப்படிப் பிறக்கும் சொல்லும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அப்படி உயர்ந்த சொல் நம் வாயிலிருந்து பிறப்பதற்காக (கரு ஊலம் இருப்பது போல) நாம் நெடு நேரம், போதா விட்டால் நெடுங் காலங்கூட மௌனமாக இருந்து சிந்திப்பது நல்லது. அப்படிச் சிந்தித்த தின் பிறகு பிறக்கும் சொற்கள்தான் பிறிதோர் சொல்லால் வெல்லப்படாத வன்மை வாய்ந்ததாக, காலத்தால், பிறர் கருத்தால், மாறுபட்டு அழிவு உறாததாக இருக்க முடியும். அத்தகைய சொற்களைச் சொல்வோர்களைத்தான் உலகம் மதிக்கும்; மதிக்கிறது; போற்றுகிறது; கொண்டாடுகிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு வள்ளுவர் சொல்லிய வார்த்தைகளுக்கு இன்றைக்கும், வெல்லும் சொல் ஏற்பட முடியவில்லை. தான் பிறருக்கு உபதேசித்ததோடு அல்லாமல் தானும் எத்தனை நிதானமாகச் சிந்தித்துப் பார்த்து வள்ளுவர் வார்த்தைகளை உபதேசித்து இருக்கிறார் என்பது எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியம்.

சொல் வலிவுடையது; நிரந்தரமானது; அழிவு உறாதது என்று சொல்லுகிறார்கள். அது உண்மை என்றால் அப்படிப்பட்ட சொற்க

லேயே நாம் தீட்ட வேண்டும்; சிந்திக்க வேண்டும்; பேச வேண்டும். இந்த நிலையை மனித வர்க்கம் நிரந்தரமாகக் கைக் கொண்டு விட்டால், உலகம் சிரஞ்சீவித் தன்மை பெற்று விடும் என்பதற்கு ஐயமே இல்லை.

வழவழாப் பேச்சுகள், வாதத்திறனற்ற பேச்சுகள், சோம்பேறிப் பேச்சுகள், 'கில்லாடி'ப் பேச்சுகள் ஆகிய அபத்தப் பேச்சுகள் நாட்டில் பெருகி மிக ஆபத்தான நிலைமையை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே தமிழர்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் இளைஞர்கள் முதலில் சிந்திக்க வேண்டியது சொல். ஆம் சொல்லைப் பற்றித்தான். பிறருக்கு நாம் எப்படிச் சொல்லுவது என்று, எப்படிச் சொன்னால் நாம் சொல்வதை மக்கள் புரிந்து கொள்வார்கள் என்று, போதி மரத்தின் கீழ் அமர்ந்து புத்தர் சிந்தித்தது போல, மலையினுள் தனித்து இருந்து முகமது நபி சிந்தித்தது போல, நல்ல கருத்துக்கள் உடைய பேச்சுக்களைப் பேசத் தெரிந்து கொள்ள நாமும் சிந்திக்க வேண்டும்.

பேச்சாளன் முதலில் சிந்திக்க வேண்டியது தான், பேச எடுத்துக் கொள்ளப் போகும் விஷயத்தைப் பற்றியதாகும். பிறகு, தான் பேசப் போகும் விஷயத்தைப் பற்றித் தனக்குத் தெரிந்திருப்பதை வரிசைக் கிரமமாக நன்கு சிந்தித்து தெளிவு பெற வேண்டும். அப்புறம் அதைப் பற்றி மற்ற அறிஞர்கள் கூறியிருப்பவைகளை ஆராய்ந்து அறிந்து திரட்டிக் கொள்ள வேண்டும். இப்படியாக நாம் எப்படிப் பேசுவது என்பது பற்றி எண்ணிப் பார்த்து முடிவு செய்தல். அதன் பிறகு தன் பேச்சைக் கேட்க விருக்கும் மக்களின் தன்மையை ஓரளவுக்காவது புரிந்து கொள்ளல் என்ற நியதியின் கீழ் ஒருவன் பேச ஆரம்பித்தால் 'இகல் வெல்லல் யார்க்கும் அரிது' என்ற வள்ளுவர் வாக்கை நிச்சயம் மெய்ப்பிக்கலாம்.

"பேச்சு அழிவது இல்லை. அது உலகம் பூராவிலும் வியாபிக்கிறது. பேச்சைக் கட்டுப் படுத்தினால் உலகில் எங்கு வேண்டுமானாலும் அதை ஒலிக்கச் செய்யலாம்!........"

இது ஞானியின் கூற்றல்ல. நம் முன்னால் கண்ணெதிரில் விஞ்ஞானம் காட்டுவது; ரேடியோ நிகழ்ச்சி என்று சொல்லப்படுவது.

வானொலி நிலையத்தில் நீங்கள் பேசுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மேலே கூறியுள்ள கருத்துக்களை மனதில் கொண்டு வெல்லும் சொல் அறிந்து, நாக்காத்து, நல்லதொரு பிரசங்கத்திற்கான அரிய கருத்துக்களைத் தயார் செய்து அழகிய முறையில் தொடர்பாக்கிப் பேசினால் மக்கள் அதைக் கேட்டு இன்புறுவார்கள். ஆனால் சொல்லில் இழுக்கு ஏற்பட்டு விட்டால் உலகில் செத்த மனிதனைத்தான் வாழ நேரிடும். இந்த நிலைக்கு இலக்கான அரசியல் தலைவர்கள் உலகமெங்கும் இருப்பதைக் காணலாம்; சரித்திரத்திலும் பார்க்கலாம்.

ஐந்து வருடங்கள்

பயிற்சி பெற்றதற்கு

பிறகு தான் ஒரு

டாக்டர் ஆகமுடியும்.

அதே போல ஒரு முக்கிய

விமான நிலயத்திலுள்ள

பர்மா - ஷெல் ஏவியேஷன்

சர்வீஸ் ஸூபரின்டென்டெண்ட்

ஆகவும் ஐந்து வருடங்கள்

நீடித்த கடினமான பயிற்சி தேவை.

அவர்களேயும் சர்வீஸைப்போலவே

நம்பலாம் . . .

பர்மா-ஷெல்
ஏவியேஷன்
சர்வீஸ்

விமான கம்பெனிகளால் நம்பப்படும் சர்வீஸ்

SHELL

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்டு டிஸ்டிரிபியூடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜன்டுகள்.

B. S. 2

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

★

Printed at the Vasantha Mills Press, and Published by K. P. Sundaram, 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

அழகுக்கு ஒரு கோவில் !

ஆபரணத்திற்கு ஒரு மாளிகை !!

டெலிகிராம்ஸ் "ராஜா"
டெலிபோன் நெ. 268

தபால் பெட்டி
நெ. 139

P. A. ராஜு செட்டியார்
& பிரதர்.

தங்க நகை,
வைர வியாபாரிகள்.

பெரிய கடைத் தெரு,
கோயமுத்தூர்.

சீல் நம்பிக்கையானவை.

WRAPPER PRINTED AT PUDUMALAR PRESS, C.B.E.